www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 14 ஒக்ரோபர் 2007 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 107

## சுயரூபம் தெரிகிறதா?



**இக்கிய தேசியக் கட்சியும்** அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் கடுமையான விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பின் மூலம் தீர்வுகாண 2002ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம் இணங்கியிருந்தது. அப்போது ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கமும் பிரதமராக ரணிலும் பதவி வகித்தனர். உள்ளக சுய நிர்ணயத்தின் அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு நோக்கிய பேச்சுவார்த்தை நடாத்த அன்றைய அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இணங்கியிருந்தனர். இணைத் தலைமை நாடுகள் டோக்கியோவில் நடாத்திய மாநாட்டிலும் அவ் ஒஸ்லோ பிரகடனம் மீளவும் எடுத்துரைக்கப்பட்டே இலங்கைக்கு 45 ஆயிரம் கோடி உதவி வழங்கவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இவற்றின் மூலம் ஐக்கியதேசியக் கட்சி சமஷ்டித் தீர்வை ஏற்றுக் கொண்டமை உறுதிப்படுத்தப்பட்டது. ஐ.தே.கட்சி ஆதரவுத் தமிழர்கள் உச்சி குளிர்ந்தனர்.

இந் நிலைப்பாட்டை ஜே.வி.பி.யும் அதன் ஆதரவு அமைப்புகளும் கடுமையாக எதிர்த்ததுடன் நாட்டைப் பிரிக்க ரணிலும் ஐ.தே.கட்சியும் முன்நிற்பதாகப் போர்க் கொடி தூக்கினர். ஜாதிகஹெல உறுமயவும் தமது மஞ்சள் கொடியுயர்த்தி எதிர்த்தது. 2005 ஜனாதிபதி தேர்தலின் போதும் ஐக்கிய தேசியக் கட்சி தான் ஏற்றுக் கொண்ட ஒஸ்லோப் பிரகடன சமஷ்டி நிலைப் பாட்டைக் கைவிட்டதாகக் கூறவில்லை. அதன் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பி- ஹெல உறுமயவும் ஒற்றையாட்சி என உச்சக்குரலில் பிரசாரம் செய்தனர். அத் தேர்தல் பிரசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சமஷ்டிக்கு நிற்பதாகவே மகிந்த தரப்பில் உரத்துக் கூறப்பட்டது. அப்படி இருந்தும் ரணில் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெருமளவிற்குப் பெற்றிருந்தார். குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே மகிந்த ராஜபக்ஷ வென்றார். அவ் வெற்றிக்கு காரணம் புலிகள் இயக்கத்தின் தேர்தல் பகிஷ்கரிப்பும் தமிழ் மக்கள் வாக்களிக்காது விட்டமையுமாகும்.

இப்பொழுது ஜனாதிபதித் தேர்தல் முடிந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடையப் போதும் தருணத்திலேயே ஐக்கிய தேசியக்கட்சியும் ரணிலும் தாம் சமஷ்டித் தீர்வுக்கு ஆதரவில்லை என்ற திடீர் பிரகடனம் செய்துள்ளனர். தாங்கள் அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கத்தை ஐக்கிய இலங்கைக்குள் கொண்டுவரத் தயார் என்று வியாக்கியானம் அளித்துள்ளனர்.

2பக்கம் ➡

## சம்பள உயர்வு பெற்றுக் கொடுப்பார்களா?

**பெருந்தோட்டக்** கம்பனிகளுடனான தொழிற்சங்கங்களின் ஒப்பந்தம் முறிந்து விட்டது. இன்றைய பொருட்களின் விலை அதிகரிப்புகளினால் வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாத நிலைக்கு தோட்டத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனை சமாளிக்கக் கூடிய சம்பள உயர்வு அவசியம். அதனை ஜனாதிபதியும் ஒத்துக் கொண்டு சம்பள உயர்வுக்கு நடவடிக்கை எடுக்கும் படி தொழில் அமைச்சரைப் பணித்தார். ஆனால் இன்று வரை முதலாளிமார் சம்மேளனத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லை. சுரண்டிக் கொழுத்து ருசி கண்ட முதலாளிகளும் கம்பனிகளும் சம்பள உயர்வுக்கு இணங்கமாட்டார்கள். அதனை மறுத்து



கட்டாய சம்பள உயர்வுக்கு ஆணையிட ஜனாதிபதியால் முடியும். அதனை வற்புறுத்தி நடவடிக்கையில் இறங்க மலையகத் தலைமைகளுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இரு பகுதியினரும் தொழிலாளர்கள் சார்பாக எதையும் செய்யமாட்டார்கள். எப்படியும் இழுத்தடித்து ஏமாற்றி ஒரு சில ரூபாய்கள் கண்துடைப்புச் சம்பள உயர்வு எனக் கூறி ஏற்கச் செய்யவே முயல்வார்கள்.

பத்துமாதங்களுக்கு முன்பு 300 ரூபா அடிப்படை நாட்சம்பளம் கேட்டுப் போராட்டங்கள் நடாத்தியும் இறுதியில் கிடைத்தது 170 ரூபா மட்டுமே. ஏனைய கொடுப்பனவாகவே ரூபா 90 கிடைக்க இணங்கப்பட்டது. இப்போதுள்ள அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு தொழிலாளர்கள் ஏற்கனவே கோரி நின்ற 300 ரூபா அடிப்படை நாட்சம்பளம் எவ்வகையிலும் போதுமானதல்ல ரூபா 400 முதல் 500 ரூபா வரை நாட்சம்பளம் கிடைத்தாலே சிறு அளவாவது இன்றைய வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியும். ஆனால் அவ்வாறு வழங்க கம்பனிகளும் முதலாளிகளும் முன் வரமாட்டார்கள். அதற்குக் காரணம் தேயிலை ரப்பர் உற்பத்தியில் இலாபம் இல்லை என்று கூறுவது சுத்தப் பொய்யாகும். லாபம் கொள்ளை லாபம் சம்பாதிக்கும் முதலாளிகளால் அதற்குக் காரணமாக இருக்கும் தொழிலாளர்களின் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க மறுப்பது தான் முதலாளித்துவமாகும்.

எனவே இ. தொ. கா. ம. ம. மு ஆகியனவும் ஏனைய அரசாங்க ஆதரவுத் தொழிற்சங்கத் தலைமைகளும் தாம் ஆதரவு கொடுக்கும் ஜனாதிபதி மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பார்களா? அல்லது இவர்கள் எல்லோரும் இணைந்து மீண்டும் ஒருமுறை பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களை சம்பள உயர்வு எனக் கூறி ஏமாற்றிக் கொள்வார்களா?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பண்டாரிக்குள அழிவைத் தடுத்து நிறுத்த வவுனியா அரச அதிபர் முன் முயற்சி!

**வவுனியாக் குளங்களின்** அழிவுகள் நீர்த்தட்டுப்பாடு என்பன பற்றி வவுனியாவில் விவாதங்கள் கூர்மை அடையக்கூடிய நிலைமைக்கு வந்து சேர்ந்து உள்ளன. அதாவது அரச அதிகாரிகள் மட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் பொதுமக்கள் முன்னிலையிலும் இவை ஓர் மிகப் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணி வருகின்றன. அதன் அடிப்படையில் வவுனியாக் குளங்களின் அழிவு பற்றி ஏற்கெனவே அவ்வப்போது புதிய பூமி சுட்டிக்காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன் அடிப்படையில் அழிந்து வரும் பண்டாரிக்குளத்தின் அழிவு பற்றி பண்டாரிக்குள கிராம அபிவிருத்திச் சங்கமும் அதனூடாக வவுனியா அரச அதிபர் உட்பட அரச செயலக முக்கிய அதிகாரிகளும் மற்றும் தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் சிவநாதன் கிஷோர் என்போரும் ஒன்று கூடி 30-09-2007ல் பண்டாரிக்குள கிராம அபிவிருத்திச் சங்க மண்ட பத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அதாவது பண்டாரிக்குள அழிவைத் தடுத்து நிறுத்துவதுவதற்கு மக்களும் அரச அதிகாரிகள் உட்பட அனைவரும் எவ்வாறு குளத்தைப் பாதுகாப்பது என்பது பற்றியும் கலந்துரையாடல் நடைபெற்றது. அதாவது பண்டாரிக்குளத்தைச் சுற்றிக் காணி அனுமதிப்பத்திரம் கொடுக்கப்பட்ட பன்னிரண்டு குடும்பங்களும் அனுமதிப்பத்திரம் கொடுக்கப்படாத 32 குடும்பங்களும் வசித்து வருவது பற்றி அரச அதிகாரிகளின் புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறப்பட்டது. அது மட்டுமன்றி வவுனியா நகரசபை இவர்களுக்கு எவ்வாறு காணி அளந்து வீட்டு இலக்கமும் கொடுக்கப் பட்டது எனப் பொது மக்கள் தரப்பில் இருந்து நகரசபை செயலாளரிடம் கேள்வி எழுப்பிய போது கேள்விக்கு உரிய பதில் சரியாகத் தராமல் மழுப்பல் போக்கை கையாண்டார். அது மட்டுமன்றி கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினரின் ஆதரவாளர்கள் மிரட்டியதும் கொலை அச்சுறுத்தல் விடுத் ததும் பொது மக்கள் தரப்பில் இருந்து பகிரங்கமாகவே கூறப்பட்டது. அதற்குரிய கடிதங்களும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் கையளிக்கப்பட்டது.

மற்றும் பாரிய இந்துக் கோவில் ஒன்று குள நடுவில் கட்டப்பட்டு வருவது கண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனை ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்பதைக் பொது மக்கள் கேட்ட போது அரச அதிகாரிகள் அனைவரும் தட்டுத் தடுமாறிய நிலையையும் மேடையில் காணமுடிந்தது.

மேலும் பாரிய குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அது குளத்தின் எல்லையில் இருந்து 400 மீற்றருக்குள் 45 அடி கிணறு வெட்டியும் நீர் இன்மை என்பது பற்றி ஓர் குடியிருப்பாளர் மிக உருக்கமான வார்த்தைகளுடன் அரச அதிபரிடம் எடுத்துக் கூறினார். அதுமட்டுமன்றி சிறுபோகச் செய்கை மற்றும் சிறு மரக்கறிச் செய்கை என்பவற்றுக்கு கூட ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லை என்பது பற்றியும் அரச அதிபரிடம் விவசாயிகள் தரப்பில் இருந்து விவசாயி ஒருவரினால் விபரமாகக் கூறப்பட்டது.

பண்டாரிக்குள அழிவினால் இவ்வளவு பிரச்சனைகளையும் மக்கள் எதிர்நோக்கி நிற்பது கண் கூடு. அதை அரச அதிபர் மற்றும் குளங்கள் சம்பந்தப்பட்ட திணை க்களங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனை வரும் நேரடியாகவே கண்டும் அதை மக்களின் வாயிலிருந்தும் கேட்டு அறிந்து கொண்டனர்.

அதன் அடிப்படையில் பண்டாரிக்குளத்தை இயற்கை வளம் என்னும் அடிப்படையில் பாதுகாப்பது நிலத்தடி நீரை சேமித்து வைப்பதும் அதற்கான புனரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அரச அதிபரால் முன் மொழியப்பட்டது. அதுமட்டுமன்றி குளத்தை ஆக்கிரமித்து அடைக்கப்பட்டிருக்கும் வேலிகளை அகற்றுதல் மற்றும் கோவிலை சுற்றி கட்டப்பட்டிருக்கும் மதிலை உடைத்தல் குளத்தை இனியும் ஆக்கிரமிப்பு செய்யாமல் இருப்பதற்கு தடுப்புச் சுவர் ஒன்றை குள எல்லையில் இருக்கும் வீட்டில் இருந்து அல்லது ஆறு அடி தூரத்தில் எழுப்புதல் வேண்டும். அடுத்து குளத்தின் நடுவில் இருக்கும் கள்ளுத் தவறணையை அகற்றுதல் அல்லது அதனை பொருத்தமான இடத்துக்கு மாற்றுதல். இனி எக்காரணம் கொண்டும் குளக் காணிக்குள் இருக்கும் வீடு, கோவில்கள் தனிப்பட்ட நபர்களுடைய சொத்துக்கள் எது சம்பந்தப்பட்டும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டாம் என்றும் அரச அதிபரால் வலியுறுத்தப்பட்டது. இம்முடிவுகள் ஒக்டோபர் மாதம் 10ம் திகதிக்குள் முன்னெடுக்கப்படும் என்று அரச அதிபரால் முடிவாகக் கூறப்பட்டது.

குளத்தை பாதுகாப்பதற்கு இப்போதாவது உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டமை பாராட்டப்பட வேண்டியது. ஆனாலும் இவ் நடவடிக்கை எவ்வாறு நடைமுறையில் வெற்றி அளிக்கப் போகின்றது. அதை தடுத்து நிறுத்த அரசியல் சக்திகள் தமது அதிகார பலத்தை குளப் பராமரிப்புக்கு எவ்வாறு பயன்படுத்தப் போகின்றார்கள் என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

அது மட்டுமன்றி பண்டாரிக் குளத்தை நாம் அழிவிருந்து பாதுகாக்காத பட்சத்தில் இன்னும் ஐந்து வருடத்தில் நீர்த்

தொடர்ச்சி 9ம் பக்க

## சுய ரூபம் 1ம் பக்க தொடர்ச்சி

மேலும் ஒரு படி சென்று அதிக பட்ச அதிகாரப் பகிர்வு பிரிவினைக்கு வழி கோலி விடும் என்றும் சுட்டிக் காட்டுகின்றனர். தமது இந்நிலைப்பாடு என்றும் உள்ளதைப் போன்றே இருந்து வருகின்றது என்றும் நியாயம் கூறி உள்ளனர்.

திடீரென ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறு அறிவிப்புச் செய்திருப்பதானது மேட்டுக்கு உயர்வர்க்கத் தமிழர் தரப்பினரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. தமிழர் தேசியக் கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்து பாராளுமன்றத்தில் பாடம் புகட்டப் போவதாகவும் சீறியிருக்கிறது. இது ஒரு வகைப் பம்மாத்தேயாகும். ஏனெனில் அவர்களது இயல்பான நேச சக்தி சாதாரண சிங்கள மக்கள் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதித்துவம் செய்யும் சிங்கள மேட்டுக்குடி உயர்வர்க்கமாகும். இத் தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணிலுக்கே வாக்களிக்க வேண்டும் என "உள்வீட்டு விவாதத்தில்" வற்புறுத்தி நின்றனர் என்றும் அறியமுடிகிறது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சி உரிய வேளையில் தனது சுய ரூபத்தைக் காட்டியுள்ளது என்றே கூற முடியும். ஐக்கிய தேசியக் கட்சி அன்றிலிருந்து இன்று வரை தனது பேரினவாத சுயத்தை இழந்ததில்லை. ஆனால் அதனை ஏற்றிப் போற்றி புகழ்பாடி பதவிகளும் சொத்து சுகமும் தேடிக் கொண்டு வந்த தமிழ் மேட்டுக்குடி உயர்வர்க்கத்தினரே ஐக்கியதேசியக் கட்சியின் சுயரூபத்தை மறைத்து அதற்கு தமிழரின் இயல்பான நேச சக்தி என்ற தோற்ற த்தை அவ்வப்போது வழங்கி வந்தனர். ஐக்கியதேசியக் கட்சியின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசனும் தி. மகேஸ்வரனும் தமிழ் மக்களுக்கு எத்தகைய மழுப்பல் நியாயம் கூறப் போகிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் மலையகத் தொழிற்சங்கத் தலைவரான வேலாயுதம் எப்படி விளக்கம் தருவார். இவர்களுடன் தருணம் பார்த்து ரணிலோடு கைகோர்த்துக் கொள்ளக் காத்திருக்கும் இ.தொ.கா, ம.ம. முன்னணி போன்றவை என்ன கூறுவார்கள்.

யார் எவ்வாறு கூறினாலும் யுத்தத்திற்கு முகம் கொடுத்து அழிவுகளுக்கு மத்தியில் தமக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நிலையில் இருந்து வரும் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்காவின் சுய ரூபத்தைக் கண்டு கொண்டுள்ளனர். இவ் அனுபவத்தை பட்டறிவாகக் கொண்டு தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பௌத்த சிங்கள பேரினவாத நிலைப்பாட்டை மட்டுமன்றி அதன் முதலாளித்துவ-ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டையும் புரிந்து கொள்வது அவசியம்.




கடந்த எட்டுமாதங்களாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் விளக்க மறியலில் புதிய- ஜனநாயககட்சியின் தோழர்கள் வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகன்ராஜ், சி. கிருஷ்ணப்பிரியன் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மலையக மக்களின் மாற்று அரசியலுக்கும் மாற்றத்திற்கான வெகுஜனப் போராட்டங்களில் முன்னின்ற எமது தோழர்களை அவர் மீதான தவறான குற்றச் சாட்டுக்களில் இருந்து மீட்டெடுக்க நிதி உதவும்படி புதிய- ஜனநாயக கட்சி வேண்டுகின்றது. தங்களாலான நிதி உதவிவழங்கி கைகொடுங்கள்.

## இனம் இனத்தோடே?

**சந்திரிகா அரசாங்கத்தை** எதிர்த்துச் சமாதானத்தைப் பற்றிப் பேசிப்பேசிச் சம்பாதித்துத் தள்ளிய குமார் ரூபசிங்ஹ இப்போது சமாதானம் பற்றிப் பேசினாலும் சனாதிபதியையும் அவரது கூட்டாளிகளையும் கடுமையாக விமர்சிப் பதில்லை. அவருடைய தொழில் அந்த மாதிரி. பழம் தின்று கொட்டை போட்ட என்.ஜி.ஓ அல்லவா. தந்திரமான பேச்சால் சமாளிக்கிறதில் வல்லவர். இது தெரியாத அரசியல் தலைவர் எவரும் இலங்கையில் இருக்க முடியாது.

ஆனாலும் செப்டெம்பர் பிற்பகுதியில் ரூபசிங்ஹ ஒழுங்கு செய்த சத்தியாக்கிரகத்தில் நமது புரட்சிகர ட்ரொட்ஸ்கிய இடதுசாரிகளுமல்லவா சிவப்புச் சட்டைகளுடன் போய் குந்தியிருந்திருக்கிறார்கள். அது ஏன்? அவர்களுடைய பிழைப்பும் அவருடையது போல ஆகி வருகிறதாலா?

## வீரகேசரி

**நெடுமாறன் கப்பல்** விடப் போகிறகதையை வைத்து இரண்டு வாரங்கட்கும் மேலாகத் தமிழர்களிடம் கதை விட்டு வந்த வீரகேசரி நெடுமாறனுடைய சாகும் வரை உண்ணா விரதத்திற்கும் பெரியளவில் இடமொதுக்கியது "திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு" என்ற சுடுகாட்டுக் கதை மாதிரித்தான் தமிழ் நாட்டு அரசியலில் சாகும் வரை உண்ணாவிரதமெல்லாம். இது தெரியாமல் தான் வீரகேசரியில் நெடுமாறனுடைய உண்ணாவிரத்துக்கு விளம்பரம் கொடுக்கப்பட்டதா? இப்போது நெடுமாறனின் கோமாளித்தனம் அம்பலமான பிறகு வீரகேசரி சந்தனக் கடத்தல் வீரப்பனின் மனைவி சாகும் வரை உண்ணா விரதம் இருக்கப் போகிறதாக ஒரு செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. பத்திரிகை ஆசிரியர் எந்த உலகத்தில் இருக்கிறார்?

நானாறிய, இந்தியாவில் சாகும் வரை உண்ணாவிரதமிருந்த ஒருவர் தான். அவர் பொட்டி ஸ்ரீராமுலு. ஆந்திரப் பிரிவினைக்காகப் போராடிய அவரது சாவால் கலவரம் வெடித்தது. மற்றப்படி உண்ணாவிரதம் என்கிறதெல்லாம் சினிமாக் கதை மாதிரித்தான்.

சினிமாப் பக்கத்தில் போட வேண்டியதை யெல்லாம் தூக்கி முன்பக்கச் செய்தியாகப் போட்டால் பத்திரிகை ஆசிரியர் முடிவில் முட்டாளாக வேண்டியது தான்!

## கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

**ஆபிரிக்க லத்தின்** அமெரிக்க இலக்கியம் பற்றியெல்லாம் பேசுகிறதைக் கண்டித்து ஒன்றுக்குப் பலமுறை ஞாயிறு சுடரொளியில் எழுதியுள்ள விஜயன் என்கிற முன் னாட் திரிபுவாத ஆதரவாளர் அதே பத்திரிகையில் ஒரு "கிறைம்" தொடர் எழுதுகிறார். பேர்களைக் கூடச் சரியாக எழுதத் தெரியாமல் தொலைக் காட்சி மர்மத் தொடர்களைப் பார்த்து எழுதுகிற விதமான அவரது கதை அவரது மட்டரகமான ரசனையையே வெளிப்படுத்துகிறது. அமெரிக்காவை மையமாக வைத்து விழற் கதையொன்றை எழுதி வருகிற ஒருவருக்கு ஆபிரிக்காவினதும் லத்தீன் அமெரிக்காவினதும் தரமான இலக்கியம் பற்றிப் பேசுவதைக் கண்டிக்க எந்த விதமான யோக்கியம் உண்டு?

## தனித்துவம் கேட்கின்

**அண்மையில்** தமிழ் அகராதி ஒன்றன் வெளியீட்டுக் கூட்டத்திற் பேசிய பேராசிரியர் சிவத்தம்பி, இலங்கையின் சிறப்புக்களில் ஒன்று ஆசியாவில் இலங்கையில் மட்டுமே வலிமை வாய்ந்த இளைஞர் போராளி இயக்கம் இருந்தமை என்றார். அருகில் இருந்தவர் காதில் ஏதோ கூற ஜே.வி.பியையும் சேர்த்தே கூறுகிறேன் என்று அவர் உறுதிப்படுத்தினார். அவரது அவதானம் சரியோ பிழையோ இலங்கையின் இளைஞர் இயக்கங்கள் ஜே.வி.பி உட்பட நாட்டையும் தாம் அடையாளப்படுத்தும் மக்களையும் எத்தகைய சந்திக்குக் கொண்டு வந்து விட்டுள்ளன என்பதை அவர் சொல்ல மறந்துவிட்டார்.

இலங்கையின் இன்னொரு வரலாற்று முக்கியத்துவம் இலங்கையிலே தான் அமெரிக்காவுக்கு வெளியே ஒரு வலிய ட்ரொட்ஸ்கியக் கட்சி இருந்தது என்பதாகும். நாட்டையும் இடதுசாரி இயக்கத்தையும் எத்தகைய அவலத்திற்குக் கொண்டு வந்து விட்டுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

## நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## அரசியல் மின்மினிகள்

**"மின்னல்" என்கிற சக்தி** தொலைக்காட்சி அரசியல் தொடர் நாடகத்தில் 300வது நிகழ்ச்சியைக் குறித்து ஓரிரு மலையக அரசியல் தலைவர்களிடம் பெற்ற கருத்துக்களைச் சக்தி தொலைக்காட்சி தொலை பரப்பியது. இந்த நிகழ்ச்சியைப் பல தரப்பட்ட மலையக மக்களும் பார்க்கிறதால் மலையகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதென மலையக அரசியல்வாதி சதாசிவம் கூறினார்.

அவர் சொல்வது உண்மையாயிருந்தால் இந்த அரசியல் தலைவர்களால் இன்னமும் அரசியல் நிலைத்திருக்க முடியுமா?

வழிப்புணர்ச்சி ஏற்படுகிறது என்பது உண்மை. அது போராட்டங்களில் பங்கு பற்றுவதாலேயே ஒழியத் தொலைக்காட்சிப் பெட்டி முன்னால் குந்தியிருப்பதால் அல்ல.

## தகைமையும் தன்டைக்கமும்

**பேராசிரியர்** தில்லைநாதன் "எமெரிற்றஸ்" புரொஃபெசர். எவரும் அவரது தகைமையைக் குறிப்பிடும் போது "ஓய்வு நிலைப் பேராசிரியர்" என்றே குறிப்பிட அனுமதிக்கிறார். 'எமெரிற்றஸ்' என்பதைக் "தகைசால் ஓய்வு நிலை" எனச் சொல்ல அவர் மறுப்பதன் காரணம் ஏதாயிருக்கும் என்று விஷயந்தெரிந்த ஒருவரிடம் கேட்டேன். "ஒருவேளை பேரா சிரியர் தில்லைநாதனுக்கு ஆங்கிலச் சொல்லின் சரியான பொருள் தெரியும் என்பதனாலாக இருக்கும்" என்று சிரித்தபடி சொன்னார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு நோக்கிய இராணுவ நகர்வு மன்னாரில் இருந்து ஆரம்பித்து விட்டதா?

கிழக்கை மீட்டு விட்டதாகக் கூறி வெற்றி விழாக் கொண்டாடிய பின் மேற்கில் மன்னார் பிரதேசத்தில் ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிலாவத்துறை அரிப்பு பிரதேசங்களைக் கைப்பற்றிய இராணுவம் மடுவையும் அதன் அண்டிய பிரதேசங்களையும் குறிவைத்து மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய இராணுவ முன்நகர்வுகள் வடக்கு நோக்கிய இலங்குகளைக் கொண்டதாகும். "கிழக்கை மீட்டுவிட்டோம் வடக்கில் சிறு நிலப்பரப்பில் மட்டுமே புலிகள் நிலை கொண்டுள்ளனர். அதனை விரைவில் மீட்டெடுப்போம்" என்ற பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷவின் யுத்தப் பேரிகைக்கு இணங்கவே மேற்படி மன்னார் பிரதேச இராணுவ நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ் இராணுவ நடவடிக்கையால் சுமார்



அறுபதினாயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். கிழக்கில் மக்கள் அனுபவித்த இடப்பெயர்வுக் கொடுமைகளை இப்போது மன்னார் பிரதேச மக்கள் எதிர் கொண்டுள்ளனர். மேலும் வவுனியா-மன்னார் நெடுஞ்சாலைக்கு வடக்கே வன்னி பெரும் நிலப்பரப்பை நோக்கி யுத்த முனைப்பு வேகமடைந்து வருகின்றது. மடுப் பிரதேசத்தை முதலில் கைப்பற்றுவதும் அதிலிருந்து வடமேற்கிலும் வட கிழக்கிலும் நகர்வது இராணுவத்தின் உத்தியாகக் காணப்படுகிறது.

இதன் மூலம் வன்னி நிலப்பரப்பின் மையத்தை அடையலாம் என இராணுவ வியூகம் வகுப்போர் நம்புகிறார்கள். அதே வேளை பூநகரி- மன்னார் நெடுஞ்சாலையான A32 க் கைப்பற்றிக் கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இவ் வியூக அமைப்பில் இராணுவம் புலிகள் இயக்கத்தின் மிகக் கடுமையான எதிர்த்தாக்குதலை சந்திக்க வேண்டி வரும் என்றே இராணுவ ஆய்வாளர்கள் எதிர்வு கூறி வருகின்றனர். இத்தகைய கடுமையான யுத்தத்தால் வரப்போகும் பாரிய அழிவுகள் மக்களையே மிக மோசமாகப் பாதிக்கப் போகின்றன. சர்வதேச சமூகம் எனப்படும் நாடுகளினதும் இந்தியாவினதும் அரசியல் தீர்வுக்கான (அவை உள்ளூர தத்தமது உள்நோக்கங்களைக் கொண்டிருந்த போதும்) அழுத்தங்களை எல்லாம் புறந்தள்ளி விட்டு யுத்தம் செய்தே தீருவது என ஜனாதிபதி விடாப்பிடியாக நிற்கின்றார். அதனை உலக அரங்கமான ஐ.நா. வில் பிரகடனப்படுத்தியும் உள்ளார். அதற்கான மேலதிக விளக்கங்களை அமைச்சர்களும் அரசின் உயர் அதிகாரிகளும் உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் பரப்புரை செய்து வருகிறார்கள். இவ் யுத்த வாதிகளின் ராணுவத் தீர்வு வெறியினால் வடக்கு கிழக்கு மக்கள் மட்டுமன்றி தெற்கினதும் முழு நாட்டினதும் மக்களும் கடுமையான பாதிப்புக்களையே பெறுவார்கள். இன்று யுத்தத்தின் மூலமான பொருளாதார நெருக்கடிகளை மக்கள் அனுபவிக்கிறார்கள். அத்துடன் யுத்தத்தை நடாத்திக் கொண்டு அபிவிருத்தி என்பதெல்லாம் வெறும் ஏமாற்றாகும். பயங்கரவாதத்தை ஒழிக்க மக்கள் தமது இடுப்புப் பட்டிகளை இறுக்கிக் கொள்ள வேண்டும் என்பதையே தடுக்க முடியாத விலையேற்றங்களும் வரவு செலவுத்திட்டமும் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

இன்று எவர் கூறியும் அழுத்தம் கொடுத்தும் உருட்டி மிரட்டியும் யுத்தம் கைவிடப்பட போவதில்லை. ஒரே ஒரு ஒரு சக்தி மட்டுமே இந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்தும் வல்லமை பொருந்தியதாகும். அதுவே மாபெரும் மக்கள் சக்தி. இன்று சிங்கள மக்களைப் பொறுத்தவரை யுத்தத்தால் தீர்வு வந்து விடும் என நம்பி அதற்கு ஆதரவாக அல்லது மௌனமாக இருந்து வருகின்றனர். தமக்கு எதிரான பொருளாதார நெருக்கடிகளும் வாழ்க்கைச் சுமைகளும் யுத்தத்தின் காரணமானது என்பதைக் காண மறுக்கின்றனர். எனவே ஏமாற்றப்பட்டு யுத்தத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் உள்ளனர். எனவே உண்மைகளைக் கண்டு பொய் புனைவுகள் ஏமாற்றுக்களை நிராகரித்து யுத்தம் வேண்டாம் உடனே நிறுத்து என்று மக்கள் சக்தி எழும் வரை சகல நாசங்களையும் அனுபவிக்கும்



மக்களாகவே இருக்க முடியும். இன்று தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்களை நாளை சிங்கள மக்களும் இதே ஆளும் வர்க்கத்தின் ஒடுக்கு முறையால் அனுபவிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாவார்கள். ஏற்கனவே அதற்கான வரலாற்று அனுபவமும் பட்டறிவும் இடம் பெற்றிருக்கிறது என்பதை தெற்கின் மக்கள் உணர வேண்டும். அப்படி உணர்ந்து யுத்தத்திற்கு எதிராகவும் அரசியல் தீர்வை வற்புறுத்தியும் எழுச்சி பெற்று மாபெரும் மக்கள் சக்தியாக எழுந்தால் மட்டுமே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியும்.

# தோழர் நவத்தின் வாழ்வும் பணியும் செவ்வொளி பரப்பி நிற்கின்றன.




தோழர் நவம் (சி. நவரட்ணம்) 2004ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் எட்டாம் திகதி இயற்கை எய்தினார். மூன்று ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் அவரது நினைவுகள் கட்சித் தோழர்களினதும் மக்களதும் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கின்றது. அவரது வாழ்வும் கட்சிப் பணியும் மக்கள் சேவையும் இன்றைய நெருக்கடி மிக்க சூழலில் மேன் மேலும் நம்பிக்கையையும் பலத்தையும் வழங்கி நிற்கின்றது. சொல்லும் செயலும் இணைந்திருப்பது தான் மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை காட்டும் மார்க்கமாகும். அத்தகைய சொல்லையும் செயலையும் பாட்டாளிவர்க்க அரசியல் கொள்கையாலும் நடைமுறையாலும் முன்னெடுத்துச் செல்பவர்களே உண்மையான நேர்மையான கம்யூனிஸ்ட்கள். அத்தகையவர்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்தவர் தோழர் நவம்.

கம்யூனிஸ்டுக்கள் தத்தம் நாடுகளில் தவம் செய்பவர்களாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த உலகத்தை சமூக விஞ்ஞான அடிப்படையிலான மார்க்சிச உலக நோக்கின் ஊடாகக் கண்டு தெளிந்து கொண்டவர்கள். வர்க்கப் போராட்டத்தின் இயங்கு விசையையும் சமூக அசைவியக்கத்தின் அடிப்படைகளையும் புரிந்து கொண்டவர்கள். அதனால் சமூகப் புரட்சியின் மூலம் சமூக மாற்றத்தை நோக்கித் தவம் செய்கிறார்கள். கம்யூனிஸ்டுக்களின் தவம் என்பது தத்துவம், கொள்கை, கோட்பாடு, குறிக்கோள், நம்பிக்கை, போராட்ட உறுதி, தியாகம், அர்ப்பணிப்பு, தூரநோக்கு, வாழ்வியல் நடைமுறை, நேர்மை, எளிமை, மனச்சாட்சி என்பனவற்றின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகிறது. புரட்சியை வெற்றியடையச் செய்வதிலும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் கம்யூனிஸ்டுக்களின் தவம் மிக உயர்ந்த இலட்சிய வலிமையுடன் முன்னெடுக்கப்படுகிறது. இதனை இறுதிவரை முன்னெடுப்பவர்கள் தமக்குரிய அற்புதமான அடையாளத்தை விட்டுச் செல்கிறார்கள். சமகாலத்தவர்களாலும் எதிர்காலத் தலைமுறையினராலும் நினைவு கூரப்படுகின்றனர். அத்தகையோரின் வாழ்விலும் பணியிலும் இருந்து புதிய தலைமுறையினர் அனுபவங்களைப் படிக்கின்றனர். இதுவே கடந்த ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலான காலப்பகுதியில் ஒவ்வொரு நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சிகளினதும் கம்யூனிஸ்டுகளினதும் வாழ்வாகவும் நடைமுறையாகவும் இருந்து வந்துள்ளது.

இலங்கையின் பிரத்தியே நிலைமைகளுக்கு ஏற்ப மாக்சிச லெனினிச வாதிகள் தவம் இயற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் சிலர் அத் தவத்திலிருந்து விலகியிருக்கிறார்கள். அத் தவத்தைக் குலைக்க வர்க்க விரோத சக்திகளும் பிற்போக்குவாதிகளும் சதா முயன்று கொண்டே இருப்பார்கள். பதவிகளும் பணமும் பிற சலுகைகளும் அவர்களின் தவத்தை திசை திருப்பி சீர்குலைக்கப் பயன்படுத்தப்படும். அதற்குப் பலியாகி சீரழிந்து போனவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருந்திருக்கிறார்கள். அவர்களை மக்களும் வரலாறும் கணக்கில் கொள்ளவில்லை. நிராகரித்து ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் தம் வாழ்நாளின் இறுதி நிமிடம் வரை கட்சியையும் மக்களையும் சமூக மாற்றத்திற்கான கம்யூனிஸ்ட் லட்சியத்தையும் உறுதியாகப் பற்றி நின்று மறைந்த தோழர்கள் குன்றின் விளக்காக இன்றும் செவ்வொளி பரப்பி நிற்கிறார்கள். அத்தகையவர்களில் ஒருவராகவே தோழர் நவம் விளங்குகிறார். அவரது கட்சிப்பணியும் மக்கள் சேவையும் சமூக மாற்றத்திற்கான அரசியலை முன்னிறுத்தி முன்னெடுத்த வேலைகளும் நம் எல்லோருக்கும் முன்மாதிரியான தொன்றாகும்.

இன்றைய இலங்கையின் இடதுசாரிப் பரப்பு மிகவும் பலவீன மாதொன்றாகவே காணப்படுகின்றது. ட்ரொட்சிய வாதிகளும் பாராளுமன்ற திரிபுவாதிகளும் இடதுசாரிப் பாரம்பரியத்தின் புரட்சிகர அம்சங்கள் அனைத்தையும் விலை பேசி விற்று விட்டார்கள். அவற்றிலிருந்து எஞ்சியவர்கள் ஜே.வி.பி. க்குப் பின்னால் சென்று பேரினவாதப் பாதையில் சீரழிந்துள்ளனர். அதனை ஏற்காது ஜே.வி.பி. யை விட்டு வெளியேறிய சக்திகள் உருபடியான ஒரு வெகுஜன அடித்தளத்தையும் வெகுஜனப் போராட்ட அணியையும் கட்டத் தவறினார்கள். அதில் ஒரு பகுதியினர் என்.ஜீ. ஒக்குப் பின்னால் சென்று சீரழிந்து நிற்கின்றனர். மற்றும் பாராளுமன்றத்திற்கு வெளியே உள்ளட்ரொட்சியவாதக் கட்சிகளும் என்.ஜீ. ஒக் களை உருவாக்கி சிகப்புச் சட்டைகளுடன் சப்பாணி கட்டியிருந்து தமக்கு அளவான மறியல் சத்தியாக்கிரகம் என ஏமாற்றுகிறார்கள்.

இந்நிலையில் புதிய- ஜனநாயக கட்சி மட்டுமே மாக்சிச லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனைப் பதாகையை ஏந்தி ஒடுக்கு முறைகளுக்கு முகம் கொடுத்து நம்பிக்கையுடன் முன்நிற்கிறது. இந் நம்பிக்கையானது தோழர் நவமும் அதற்கு முன் மறைந்த தோழர்களும் தந்து விட்டுச் சென்ற அழியா இலட்சிய முதுசமாகும். அதனை மிகுந்த நம்பிக்கையுடனும் உறுதியுடனும் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வோம். எத்தகைய இடர் வரினும் நமது இலட்சியப் பாதை தொடரும் என்ற சத்தியத்தை தோழர் நவத்தின் மூன்றாவது வருட (8-10-2007) நினைவு நாளில் மீட்டுரைக்கின்றோம். மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை வாழ்க! புதிய- ஜனநாயக கட்சி வெல்க.

**பொதுச் செயலாளர்**
**புதிய- ஜனநாயக கட்சி.**

# மேல் கொத்மலையை எதிர்ப்பவர்களும்

## 2005 ஒக்ரோபர் 2 எதிர்ப்பியக்கமும்

**மேல்கொத்மலைத்**திட்டத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் பாரிய தியாகங்களைச் செய்துளளதாக மின்சக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். காலம்காலமாக வாழ்ந்துவந்த இடம் சூழல் போன்றவற்றை மக்கள் துறக்க வேண்டிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்த அமைச்சர் முன்னர் ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர். பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்தார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்ததால் மக்கள் தியாகம் செய்துள்ளனர் என்பதைப் புரிந்து கொண்டு பேசவில்லை. மக்கள் அத்திட்டத்திற்கு எதிராகப் பாரிய போராட்டங்களை செய்யாமல் போராடும் சக்தியையும், அதற்கான நியாயங்களையும் தியாகம் செய்துள்ளனர் என்றே கூற முயற்சிக்கிறார். அதற்குப் போலி எதிர்ப்பாளர்களான மலையக தொழிற் சங்கங்கள், மலையகப் பாராளுமன்ற வாதிகள் உட்பட அனைத்து பிற்போக்குத்தலைவர்களும் துணை போனார்கள். அவ்வாறு துணைபோவதற்கு கமிஷன்கள், ஒப்பந்தவேலைகள் எனப் பலவற்றைச் சன்மானமாகக் பெற்றுள்ளனர்.

மேல் கொத்மலை திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எவருக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை. வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ் வீடுகள் அவர்கள் ஏற்கனவே வாழ்ந்த வீடுகளை விட வசதியானதாகும் என்று அரசாங்கம் கூறுகிறது. அதனை அப்படியே பத்திரிகைகளும் கூறிவருகின்றன. ஆனால் மக்கள் மத்தியில் அவ்வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும் இடங்கள் போன்றன பற்றி அச்சம் அதிருப்தியே நிலவுகின்றன.

அத்திட்டத்தின் வீடுகள் அமைக்கப்பட்டுவரும் சுரங்கப்பாதைக்கு மேற்பரப்பிலேயே அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி வீடுகளில் சில அவற்றில் வேலை செய்கின்ற வேறு பலருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் அப்பிரதேசத்தை சேர்ந்தவர்களல்லர். சுரங்கத்திற்குள் ஏற்படும் அசைவுகள் மேற்பரப்பை பாதிக்கும் என்பதால் அவ் வீடுகளும் பாதிக்கப்படும். பிற பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் குடியேற்றப்பட்டுள்ளதாலும் அங்கு ஏற்கனவே வாழ்பவர்கள் வெளியேறுவதாலும் பெரும் நிலப் பரப்பு நீருக்குள் ஆழ்த்தப்படவுள்ளதாலும் அங்கு வாழும் மலையகத் தமிழ் தேசிய இனத்தவர்களின் குடிசன செறிவு சிதைக்கப்படுகிறது. இது பேரினவாதத்திற்கு சாதாகமான நிகழ்ச்சி நிரலாகும். இது எம்நாட்டு மக்களின் நீர்மின் தேவையைப் பூர்த்திசெய்யும் விதத்தில் நிர்மானிக்கப்படவில்லை. ஜப்பானிய ஏகாதிபத்தியம் அமைக்கவுள்ள கம்பெனிகளுக்கான நீர் மின் தேவையைப் பூர்த்தி செய்யவே போதுமானதாகும். இத்திட்டம் நுரைச்சோலை அனல் மின் நிலையம் சம்பூர் அனல் மின் நிலையம் என்பன அமைக்கப்படவில்லையாயின் நீர்மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிவரும் என்று கூறிக் கொண்டே கடந்த ஒரு வருடமாக இரண்டு முறை மின் கட்டணத்தை அரசாங்கம் அதிகரித்துள்ளது. இன்னும் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டம் ஜப்பானின் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு உரியதே அன்றி நாட்டிற்குரிய ஒன்றல்ல.

இதனால் பசுமையான செழிப்பான நிலம் உபயோகமற்தாக்கப்படுவதுடன் மண்ணரிப்பு, நிலநடுக்கம் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களும், பிற சூழலியல் பாதிப்புகளும் ஏற்படும்.

இதனாலேயே மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் எதிர்ப்பியக்கங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்தது. அதன் வெகுஜன நடவடிக்கைகளின் உச்சமாக 2005 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி தலவாக்கொல்லையில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. அரசாங்க பேரினவாத ஏவலில் காடையர்கள் அவ்வார்ப்பாட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதில் தலைதாங்கிய மே. கொ. எ. மக்கள் இயக்கத்தலைவர்கள் புதிய- ஜனநாயக கட்சித் தோழர்கள், புகையிரத தொழிற்சங்கத்தலைவர்கள் ஆசிரியர் சங்கத்தலைவர்கள் வெகுஜன அமைப்பின் தலைவர்கள் தாக்கப்பட்டனர். அத்தாக்குதலுக்குட்பட்டவர்களில் புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்களான வெ.மகேந்திரன், ரா.ஜெயசீலன், ச.சுகேசனன் ச. மோகன் ராஜ், சி.கிருஸ்ணப்பிரியன் ஆகியோரும் புகையிரத தொழிற் சங்கத் தலைவர் சரத் பெர்ணாண்டோ, வீதி நாடகக்கலைஞர்கள் உட்பட பலர் கடந்த எட்டு மாத ங்களாக அவசரகாலச் சட்ட ஒழு ங்கு விதிகளின் கீழ் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர். அவர்கள் மேல் கொத்மலைத்திட்டத்தினை எதிர் த்ததற்காகவே கைதுசெய்யப்பட்டனர் என்று வெளிப்படையாக கூறப்படாவிட்டாலும் அது போன்ற வெகுஜனப்போராட்டங்களின் முன்நின்று போராடியவர்களாவர். அவர்கள் இலங்கை மக்களின் ஐக்கியத்திற்காகவும் சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகளின் விடுதலைக்காகவும் அரசியல் செய்தவர்கள். அநீதியை கண்டு கொதித்தவர்கள்.

2005 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி எதிர்ப்பியக்கத்தின் மீது நடத்தப்பட்ட தர்க்குதலைக் கண்டிக்கக் கூட நேர்மை இல்லாதவர்களாகவே மலையகப் பாராளுமன்ற தொழிற்சங்கவாதிகள் இருந்தனர். மலையக மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் அரசியல் பண்ணுவதாகவும் அரசாங்கத்துடன் இணைந்திருப்பதாகவும் கூறுகின்ற மலையகப் பிற்போக்குப் பாராளுமன்ற தொழிற்சங்க வாதிகள் மேல்கொத்மலை திட்டத்தால் மலையகம் அழிக்கப்படுவதைப் பார்த்து ரசிக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் விலைபோய்விட்டார்கள். அத்திட்டத்தை எதிர்ப்பதாக காட்டிக்கொண்ட வேறும் சில போலிகள் பதவி பட்டங்கள் பெற்று மகிழ்ச்சியாக இருக்கின்றனர்.

மக்களின் எதிர்ப்பை பசப்பு பிரசாரங்களாலும் காடைத்தனங்களாலும் மிரட்டல்கள், பயமுறுத்தல்களால். முறியடித்து விட்டதாக அரசாங்கமும் பேரினவாதமும் பெருமை கொள்கிறது.

எதிர்ப்பியக்கத்தின் நியாயமும், எதிர்ப்புணர்வும் இன்னும் மடிந்து விடவில்லை. அவை தியாகம் செய்யப்படவில்லை. அது மீண்டும் துளிர்த்து எழவே செய்யும்.

## இரட்டை வேடதாரிகளை நிராகரித்து புதிய தலைமையை உருவாக்க வேண்டும்

**மலையகத்**தோட்டத் தொழிலாளர்களும் மக்களும் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம். அன்றாட சம்பளக் குறைவு முதல் வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை வரை நாளாந்தப் பிரச்சினைகளாகும். கல்வி சுகாதாரம் மருத்துவம் போக்குவரத்து இருப்பிடம் வேலைவாய்ப்பு என்பனவற்றில் நமது மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வுகளும் இல்லை. நமது தொழற்சங்க அரசியல் தலைமைகள் என்பன மிகமிக விநோதமாக நடந்து கொள்வதைப் பார்க்கும் போது சினமும் சீற்றமும் ஏற்படுகிறது. ஆனால் நமது மக்களும் தொழிலாளர்களும் மீண்டும் மீண்டும் இந்த ஏமாற்றுத் தலைமைகளால் பம்மாத்துக் காட்டப்படுகிறார்கள். மக்களும் ஏமாந்து ஏமாந்து கொள்கிறார்கள். இதனைப் பார்த்து பொறுக்க முடியாமலே கோபம் வருகிறது.

இந்தக் கோபம் ஆளும் அரசாங்கத்தின் மீது ஏற்படுவதற்கு முன்பாக எம்மை ஏமாற்றி நிற்கும் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் மீதே ஏற்படுகின்றது. அவர்கள் இ.தொ.கா, ம.ம.மு இரண்டு தலைமைகளும் இந்த அரசின் அமைச்சர்கள் ஆதரவாளர்கள் முட்டுக் கொடுத்து வருவோராவர். இவர்களை விமர்சனம் செய்யும் சதாசிவமும் அவரது நெருங்கியவர்களும் அரசாங்கத்தைச் சார்ந்து நின்று பதவிகள் சலுகைகள் வருமானங்கள் பெறுகின்றனர். ஆனால் அறிக்கைகள் வெளியிட்டு கூட்டங்களில் உரையாற்றும் போது மிகவும் காரசாரமாகவும் அழகான வசனங்கள் உவமைகள் முதுமொழிகள் சேர்த்தும் கருத்துக்களை வெளியிடுவார்கள். அவற்றைப் பார்க்கும் நம்மவர்கள் அரசாங்கத்திற்கும் கம்பனிகளுக்கும் கொடுகொடு என்று கொடுத்தார்கள் நம்ம தலைவர்கள் என்று சபாஷ் போடும் அளவுக்கு செய்வார்கள். இது பகலில். ஆனால் இரவில் அரசாங்கத்திற்கு பாதம் துடைத்து பந்தம்பிடித்து பயபக்தியாக நடந்து கொள்வார்கள். இது இன்று நேற்று ஆரம்பமாகிய ஒன்றல்ல. மலையக மக்களை ஏமாற்றும் இந்த இரட்டைவேடத் தலைமைகளை நிராகரித்து புதிய தலைமையை உருவாக்க மலையாக மக்கள் அப்போது முன்வருகிறார்களோ அப்பொழுதே மலையகத்திற்கான விடிவு காலம் தோன்றும்.

**மஸ்கேலியா**
**மா. சுதந்திரராஜ்**

## நீங்கள் விதைத்த விதை

மார்தட்டி மீசை முறுக்கி
மண்டபம் மீதேறி உரக்கப்பேசி
திக்கெட்டும் பரப்புவீர்
உம் வெற்றிச் சிரிப்பை

பாலுக்கு பிள்ளை அழும்
பசித்த வயிறுக்கு நீர் வார்த்தபடி
அறுத்த கதிரெலாம்
அற்ப விலைக்குப் பறிபோகும்
உயிர் சொட்டச் சொட்ட
உழைத்த உழைப்பெலாம்
தனியொருவன் கரங்களில்
குதூகலமளித்து குவிந்து கிடக்கும்
என்றாலும் என்ன....
உங்கள் வீரத்தை மெச்சும்படி
ஏந்தச் சொல்வீர் எம்மையும் தேசியக் கொடி....

மண்ணில் கலவாத மழைநீராம்
மாசற்ற பிஞ்சுற்கு நஞ்சூட்ட
பள்ளிகள் தோறும்
உங்கள் வெற்றியின் முழக்கத்தை அறிவிப்பீர்
முற்றிப் பழுத்த இனவாத நஞ்சுக் கனிவெட்டி
மழலையர்க்குப் பகிர்ந்தூட்டி
வஞ்சம் விதைப்பீர்.......
கொடியேற்றி பாற்சோறு பகிர்ந்து
இருலட்சம் அகதிகளின் கூக்குரலை ரசிப்பீர்
வேட்டுகள் தீர்ப்பீர்
வெளிச்சமற்றுக் கிடக்கும் வீடுகள் தோறும்
ஒளி பெறா வண்ணம்
எண்ணெய் விலை உயர்த்தி
பறக்கும் தேசியக் கொடி காட்டி
மூடி மறைப்பீர்
எங்கள் அவல மூடைகளால்
இன்றுங்கள் விதைப்புகள்
பலன் தருகின்றன.
பாசமாய் தோழமை காட்டிய "Bபண்டா"
'பர தெமலு' என்றான்
ஊர் தேடி விலாசம் விசாரிப்போன்
மடக்கிப் பிடிக்கப்பட்டு சிறைக்கனுப்பும்
சின்னத் தனங்களில் செத்தபடி மனிதமிருக்க
எல்லோரும் எல்லாமும்
உறவாடல், உதவுதல்
அத்தனையும் சந்தேகத்தால் போலிகளாய்......
நீங்கள் விதைத்த விதை செழித்திருக்கிறது.

சமத்துவத்துக்குள் நாங்கள் சார்ந்திடாதபடி
நாளுக்கொரு விழா நடத்துவீர்
பஞ்சமும் பட்டினியும் சுமக்கிறோம் நாம்
வெற்றிகளை மேலும் குவித்து
நீங்கள் மட்டும் குளிர் வாகனங்களில்
ராஜசுகம் காண்பீர்...........

இன்னும் ஓராயிரம் உயிர்குடித்து
அகதிகளை அலையலையாய் திரட்டி
அவர்தம் மனைகளை இடித்து
மீளவும் மீளவும் குடியமர்த்துவீர்
இப்படித்தான்....
மனிதர் தமை முடித்து ருசித்த
ரஷ்ய 'ஜாரும்' வீழ்ந்தான்!

**காரவத்தையூர் மகேந்திரன்**

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 14 ஒற்ரோபர் 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 107

இல. 47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E- mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# ஐ. தே.கட்சியின் நஞ்சும் அதன் விஷப்பற்களும்

**இலங்கையின் தேசிய** இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையை ஏற்படுத்துவதன் மூலமே தீர்வு காணப்பட முடியுமென்று கூறிவந்த ஐ.தே.க. இலங்கைக்கு சம ஷ்டி தீர்வு பொருந்தாது என்று இப்போது கூறி அதனை நிராகரித்துள்ளது. கொழும்பிலிருக்கும் மேட்டுக்குடி தமிழ் இளைஞர்கள் முன்னுக்கும் பின்னுக்கும் திரிந்த கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மூலமே இந்நிலைப்பாடு வெளியானது. அதனை ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க உறுதி செய்தார். பின்பு ஐ.தே.கட்சி அதனது உத்தியோகப் பூர்வமான அறிக்கையின் மூலம் "ஐ.தே. கட்சி யின் நிலைப்பாடு சமஷ்டி அல்ல என்றும், இராணுவ தீர்வை காண வேண்டி வந்தால் அதற்கு ஐ.தே. கட்சியிடம் திட்டம் இருப்பதாகவும்" தெரிவிக்கப்பட் டுள்ளது. ஐ.தே.கட்சியின் இந் நிலைப்பாடு அதன் அடிவருடிகளான சில தமிழர்களுக்கு ஆச்சரியமாக இருந்தபோதும் இலங்கையின் ஆளும் வர்க்க நிலைப்பாடாகவும் ஆட்சி நிறுவனத்தின் கட்டமைப் பாகவும் இருந்து வந்துள்ளது. பேரினவாதத்தை நிலை நிறுத்தி தமிழ் மக்களை இனக்கல வரங்களினூடாகச் கொன்று குவித்து தமிழ் மக்கள் மீது யுத்தத்தை திணித்த ஐ.தே.கட்சி அதன் நிலைப் பாட்டை என்றும் மாற்றி விடவில்லை.

ஐ.தே.க இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தத்தை செய்ததும், 1978 அரசியல் யாப்பிற்கு 13 வது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து மாகாண சபைகளை ஏற்படுத்தியதும் ஆளும் வர்க்க நிலைப் பாட்டை நிலை நிறுத்திக் கொள்வதற்கே ஆகும். அவற்றை செய்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் வழிவந்த ரணில் விக்கிரம சிங்க விடுதலைப்புலிகளுடன் 2002 ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டதும் சமஷ்டி தீர்வு என ஏற்றுக் கொண்டதும் அவரது விசுவாசமான ஏகாதிபத்தியத்தின் விருப்பத்தின் பேரிலாகும். இதில் சந்தேகம் இருந்திருக்கத் தேவை இல்லை.

"பயங்கரவாதத்திற்கு" எதிரான சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னலுடன் இலங்கையின் பாதுகாப்பையும் இணைத்து கொண்ட ரணிலே "கருணா" குழு பிளவு ஏற்படுவதற்கு காரணமானவர் என்று வெளிப்படையாக ஐ.தே.கட்சி பெருமைப் பட்டுக் கொண்டது.

தமிழ் மக்களின் போராட்டங்களைப் பல வீனப்படுத்தவே சமாதான நடவடி க்கைகளை ரணில் மேற் கொண்டார் என்றும் அவர் ஏற்படுத்திய பாதிப்பின் தொடர்ச் சியாகவே கிழக்கு மாகாணத்தில் மஹிந்த அரசாங்கம் இராணுவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ள தாகவும் இராணுவ விவகாரங்களை எழுதும் சிலர் கூறியுள்ளனர்.

மாவிலாறு, சம்பூர், மூதூர், வாகரை போன்ற கிழக்கு மாகாணப்பகுதிகளில் இலங்கை அரச இராணுவ மேலாதிக்கம் நிலை நாட்டப்பட்டுள்ளது. வன்னிப்பகுதியின் மீது விமானத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கு கிழக்கிலும் அதற்கு வெளியிலும் நடக்கும் கடத்தல்கள் காணாமல் போதல்கள் மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் கைதுகள் அனைத்து தமிழ்மக்களையும் தமிழ்மக்களின் பன்முகப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்கப்படுவர்களையும் ஆதரிப்பவர்களையும் அச்சத்திற்குள்ளாகியுள்ளது.

அனைத்து கட்சிகளின் கூட்டத்தில் மாவட்டசபைகளின் மூலம் அதிகாரங்களைப் பரவலாக்குவதே அரசியல் தீர்வு என்பதே சு. கட்சியின் நிலைப்பாடு என தெரிவிக்கப்பட்டது. அது தற்போது சட்டத்தில் இருக்கும் மாகாணசபை திட்டத்திற்கு குறைவானதாகும். பின்னர் இராணுவ தீர்வு கண்டதற்கு பிறகே அரசியல் தீர்வு என்றும் அரசாங்கம் கூறி வருகிறது.

கடந்தமாதம் நடைபெற்ற 62வது ஐ.நா. சபை கூட்டத்தொடரில் உரையாற்றிய இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தி உரையாற்றியுள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினை இல்லையென்றும் கூறியுள்ளார். பெரும்பான்மை சிங்கள மக்களிடையே இராணுவ தீர்வு என்ற கருத்து பிரசார ரீதியாக மேலாதிக்கம் செலுத்துகிறது.

**ஆசிரியர் குழு**

நாளாந்த விலை உயர்வுகளால் மக்கள் பெரும் பொருளாதார கஷ்டத்திற்குள் மூழ்கடிக்கப்பட்டு வருகின்றனர். அதனை மட்டும் வைத்துக் கொண்டு அரசாங்கத்திற்கு எதிராக ஐ.தே. கட்சி பலமான பிரசாரத்தை ஒரு மட்டத்திற்கு மேல் எடுத் துச் செல்லமுடியாதுள்ளது. இந்நிலையில் தான் சமஷ்டி தீர்வு என்ற நிலைப்பாட்டை கைவிடுவதாக வும் இராணுவ தீர்விற்கும் தயார் என்றும் ஐ.தே.கட்சி கூறியுள்ளது.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக ஜே.வி.பி, ஹெல உறுமய என்பவற்றின் ஆதரவை பாராளு மன்றத்தினுள் பெற்றுக் கொள்வ தற்காகவே ஐ.தே.கட்சி மேற்படி கூறுவதாக சிலர் கூறுகின்ற னர். இதனை இடதுசாரிகள் என்று கூறப்படும் சிலரும் அப்படியே கூறுகின்றனர். இது மிகவும் மேலோட்டமான பார்வை. வர்க்கப்பார்வையற்ற குருட்டுத்தனம்.

சந்திரிகாவின் தலைமையின் போதன்றி சு. கட்சி எப்போதும் அதிகாரப்பங்கீட்டிற்கு எதிரான நிலைப் பாட்டை எடுத்துள்ளது.

ஐ.தே. கட்சி 2002 ஒஸ்லோ உடன்பாட் டிற்குப் பிறகு சமஷ்டி தீர்வுபற்றி பேசியது. அது தற்காலிகமான சர்வதேசத்திற்கான பூச்சாண்டியாகும். ஐ.தே. கட்சியின் நச்சுத்த னம் ஒரு போதும் அகன்று போனதில்லை.

பேரினவாதம் அவ்வளவு சுலபமாக அடிபணிந்துவிடாது. இவ்வளவு காலமும் நடை பெற்ற போராட்டங்களால் இன்னும் பேரினவாத விசப்பற்கள் பிடுங்கி எறியப்படவில்லை. தமிழ் மக்கள் மலையகத்தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் ஆகியோரின் சுய நிர்ணய உரிமை அவர்களுடன் சிங்கள மக்களின் ஐக்கியம் சிங்கள மக்களின் ஜனநாயகம் என்பவற்றுக்காகவும் அனைத்து மக்களையும் சிறைப்படுத்தி வைத்திருக்கும் ஏகாதிபத்தியம் அதன் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் என்பவற்றுக்கு எதிராகவும் இன்னும் ஐக்கியப்பட்ட மக்கள் போராட்டங்கள் தேவைப் படுகின்றன.

'சர்வதேச சமூகம்' என்ற ஏகாதிபத்தியமும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு பெரும் குளறுபடிகளை தொடர்ந்து செய்துவரும் இந்திய மேலாதிக்கவாதமும் இலங்கையின் பேரினவாதத்திற்கு எதிராகச் செயற்படமாட்டாது. ஏனெனில் பேரினவாதமே தொடர்ந்து அதிகாரம் செலுத்து கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்திய மேலாதி க்கவாதத்தின் வாடிக்கையாளர்களாகச் செயற்படும் இலங்கை ஆளும்வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சியான ஐ.தே. கட்சி மட்டும் அதன் நிறத்தை மாற்றிக் கொள்ளுமா?

# தொழிற்சங்கங்களும் தொழிற் சங்கப் போராட்டங்களும்

**வெகுஜனன்**

**இம் மாதம் 3ம் திகதி** கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையம் முன்பாக அறுபத்தியெட்டு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. "நீதிமன்றத்தினூடாக மேற்கொள்ளும் தொழிற்சங்க அடக்கு முறையை உடனே நிறுத்து" என்பதே அவ் ஆர்ப்பாட்டத்தின் தொனிப் பொருளாகும். அரசாங்க தனியார் துறையைச் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஊழியர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்து எதிர்க்கும் வகையிலான சுலோக அட்டைகளைத் தாங்கி ஆக்கிரோசமான முழக்கங்களை எழுப்பினார்கள். இது ஒரு ஆரம்பம் மட்டுமே என்றும் அடுத்துவரப் போகும் போராட்டங்களுக்கு முகம் கொடுக்கத் தயாராகுமாறும் தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றினர். தொழிற்சங்க உரிமைகளில் கை வையாதே! நீதிமன்றம் மூலம் தொழிற்சங்கப் போராட்டங்களை அடக்காதே! இன்று ஆசிரியர்களுக்கு நாளை நமக்கு! மாணவர்கள் அனுமதிக்கு நீதிமன்றமா? போராடிப் பெற்ற உரிமைகளைப் பாதுகாப்போம்! போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த இவ் அறுபத்தெட்டு தொழிற்சங்கங்கள் வீதியில் இறங்கியுள்ளமை எல்லோரினதும் கவனத்திற்குரிய ஒன்றாகும். பொறுக்க முடியாத விடத்து பொங்கி எழுவதை தவிர வேறு வழி இல்லை என்பதற்கு இணங்கவே இத் தொழிற்சங்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது. இது வரவேற்கப்பட வேண்டயதாகும்.

1977–2007 கால 30 ஆண்டுகளில் நாடும் பொருளாதாரமும் தாராள தனியார்மயத்திற்கும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கும் உள்ளாக்கப்பட்டு வந்துள்ளது. இக் காலத்தில் தொழிற்சங்க உரிமைகளும் போராட்டங்களும் திட்டமிட்ட பல வழிகளில் நசுக்கி அடக்கப்பட்டு வந்துள்ளன. இன்றும் சுதந்திர வர்த்தக வலயக் கம்பனிகளில் பல்தேசிய நிறுவனங்களில் தொழிற்சங்க உரிமைகளும் இல்லை வேலை நிறுத்தம் செய்யும் உரிமையும் இல்லை. இந் நிலை படிப்படியாக அரசாங்க தனியார் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

1980 ஆண்டு ஜே.ஆர். பொது வேலை நிறுத்தத்தை ஆயுதப்படைகள் குண்டர்கள் மூலம் அடக்கி நசுக்கினார். சுமார் 80 ஆயிரம் ஊழியர்கள் தொழிலாளர்கள் வேலை இழக்கச் செய்யப்பட்டு வீதிக்கு விடப்பட்டனர். இன்றும் அவர்களில் இரண்டாயிரம் பேர்வரை மீள வேலை வழங்கப்படவோ உரிய கொடுப்பனவுகளோ கொடுக்கப்படாத நிலையிலேயே இருந்து வருகின்றனர். அன்று தொடங்கிய தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு எதிரான அடக்கு முறைகள் தொடர்ந்தன. இது சந்திரிகா அம்மையார் ஆட்சியிலும் இப்போது மகிந்த சிந்தனை ஆட்சியிலும் தொடர்கிறது.

தொழிற்சங்கப் போராட்டங்களை நசுக்குவதற்கு புதிய உத்திமுறை முதலாளிகளாலும் அரசாங்கத்தினாலும் கண்டு பிடிக்கப்பட்டன. அதுவே நீதிமன்றத்தின் மூலம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் வேலை நிறுத்தங்களுக்கும் மாறான தீர்ப்புக்களைப் பெற்று முடக்குவதாகும். இது சந்திரிகா காலத்தில் மின்சார சபை ஊழியர்களுக்கு எதிராக நடை பெற்றது. அதன் பின் துறைமுகம் புகையிரதம் ரெலிகொம் எனத் தொடர்ந்தது. அண்மையில் ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பை முடக்கவும் அதே நீதிமன்றத் தீர்ப்பே பயன்பட்டது. எதிர்காலத்தில் இந் நிலை விரிவடைந்து சென்றால் தொழிற்சங்களால் எக் கோரிக்கையையும் முன்வைக்கவோ வேலை நிறுத்தப் போராட்டங்களால் வென்றெடுக்கவோ முடியாத நிலை மேன்மேலும் தொடரவே செய்யும். இதனை கவனத்திற்கும் சிந்திப்பிற்கும் தொழிற்சங்கங்கள் எடுத்ததன் விளைவே அண்மைய தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளாகும்.

இலங்கையின் தொழிற்சங்கங்களுக்கும் அவற்றின் போராட்டங்களுக்கும் எண்பது வருடங்களுக்கு மேலான வரலாறு உண்டு. தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகள் பலவற்றைத் தொழிற்சங்க இயக்கம் போராட்டம் என்பனவற்றின் மூலமே வென்றெடுத்து வந்தார்கள். அதற்கான உயிர்த்தியாகங்க ளும் அர்ப்பணிப்பு நிறைந்த பணிக ளும் தொழிலாளர்களால் தொழிற் சங்கத் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டும் வந்தன. அதன் காரணமாகவே இந் நாட்டில் இடதுசாரி இயக்கம் உயிர்ப்புடனும் உறுதியுடனும் வளர்ந்தது. ஆனால் இன்று அவையாவும் பொய்யாய் கனவாய் பழங்கதையாய் போய்க் கிடக்கின்றன. அதற்கான பொறுப்பைப் பாராளுமன்ற சந்தர்ப்பவாத சாயம் வெளுத்த பாரம்பரிய இடது சாரிகளே ஏற்க வேண்டும். இன்று பொருளாதார நிலையில் தொழிலாளர்களும் ஊழியர்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டு நிற்கின்றனர். அரசாங்க தனியார் துறையில் வேலை செய்யும் இவர்கள் சம்பள உயர்வு உட்பட நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தே தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க முன்வருகின்றனர். ஆனால் அவர்கள் மீது அடக்கு முறைகள் ஏவப்படுகின்றன. இதில் உள்ள வேடிக்கை என்னவெனில் இன்றைய ஜனாதிபதி கடந்த சந்திரிகா அரசாங்கத்தின் தொழில் அமைச்சர். அவரே தொழிலாளர் சாசனத்தை நிறைவேற்ற முனைந்து தோல்வி கண்டதுடன் தனது அமைச்சை மாற்றிக் கொண்டவர் என்பதெல்லாம் பழைய கதை.

இன்று சம்பள உயர்வுக்கும் ஏனைய உரிமைகளுக்கும் கோரிக்கை வைத்துப் போராட முன் வந்திருக்கும் அறுபத்தெட்டுத் தொழிற்சங்கங்களும் அதில் அரசியல் கோரிக்கையை முன் வைக்கத் தவறியுள்ளன. அரசியல் வேறு தொழிற்சங்கம் வேறு என்ற தவறான நிலைப்பாட்டிலா? அல்லது சரியான அரசியல் தீர்மானத்தை எடுக்க முடியாத இக்கட்டான நிலையிலா? நாட்டில் தொடரும் யுத்தமும் அதற்கு நாளாந்தம் கொட்டித் தீர்க்கப்படும் கோடிக்கணக்கான பணமும் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் மறுக்கப்படுவதற்குக் காரணம் என்பதை தொழிற்சங்கங்கள் கண்டு கொள்ள வேண்டும். நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு உரியவாறு காணப்படாது விட்டால் தொழிலாளர் பிரச்சினைகளோ வாழ்க்கைச் செலவு உயர்வு நெருக்கடிகளோ தீர்வுக்கு வரமாட்டாது. இதனை அரசியல் ரீதியில் தொழிற்சங்கங்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

எனவே தொழிற்சங்கங்கள் எவ்வளவிற்கு ஐக்கியப்பட்டாலும் அவை முன்வைக்கும் தொழிற்சங்கக் கோரிக்கைகளுடன் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுக்கு வலியுறுத்தும் அரசியல் கோரிக்கையும் முன்வைக்கப்படுவது அவசியமாகும். அதன் மூலமே தொழிலாளர்களும் ஊழியர்களும் தமது கோரிக்கைகளில் ஐக்கியப்பட்டு வெற்றி பெற முடியும்.

புதிய பூமி 06 ஒக்ரோபர் 2007

# தேசியவாதங்களின் மோதல்

## உழைக்கும் மக்களுக்கு அழிவு

**நாட்டில் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத்தமிழ்** என நான்கு தேசிய இனங்களும் பறங்கிய, மலே, வேடர் ஆகிய சிறுபான்மை சமூகங்களும் இருந்து வருகின்றன. அதன் மூலம் இந் நாடு பல்லினத் தேசியங்களின் நாடாகவே இருந்து வருகின்றது. இதன் யதார்த்தத்தை பௌத்த சிங்களப் பேரின வாதிகள் ஏற்க மறுத்தாலும் வரலாறு இந்த உண்மையைப் பதிவு செய்து நிற்கிறது.

பிரித்தாளும் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்தியது பிரித்தானிய கொலனித்துவம். அத்தகைய கொலனித்துவத்தைப் பாதம் தாங்கி நின்றவர்கள் சிங்கள தமிழ் முஸ்லீம் மேட்டுக் குடி உயர்வர்க்கத்தினர். இவர்கள் வெள்ளை ஆதிக்கத்திற்கு அடிமை சேவை செய்து வந்ததைப் பெருமையாகவும் அந்தஸ்தாகவும் கொண்டதுடன் பெரும் சொத்து சுகங்களையும் பெற்றுக் கொண்டனர். அதேவேளை தமது வர்க்க சாதிய நிலைகளுக்கு ஊடாகத் தத்தமது சொந்த இன மொழி மத மக்களை அடக்கி அவர்கள் மீது அதிகாரம் செலுத்தியும் வந்தனர். அதற்காக மக்களைப் பிரித்து ஒருவரோடு ஒருவர் இணைய விடாது வைத்தே தமது சொத்து சுகங்களைப் பேணிக் கொண்டனர்.

இந் நிலையில் பிரித்தானிய எசமானர்களிடம் கெஞ்சி மன்றாடி என்னென்றும் உங்களுக்கு அடிமை விசுவாசமாக இருப்போம் என்ற வாக்குறுதியின் பேரிலேயே "சுதந்திரம்" என்பதை வாங்கிக் கொண்டனர். அச் "சுதந்திரம்" பெற்று அறுபது ஆண்டுகள் ஆகின்றது. இன்றும் அதே வாக்குறுதி காப்பாற்றப்பட்டு ஏகாதிபத்திய சார்பும் அடிமை விசுவாசமும் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மேட்டுக்குடி உயர்வர்க்கத் தலைமைகளிடம் இருந்து வருகின்றது.

அதேவேளை சிங்கள மேட்டுக்குடி உயர்வர்க்க ஆட்சியானது பிரித்தானிய எசமானர்கள் சென்ற பாதையில் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பிரயோகித்து தேசிய இனங்களைப் பிரித்து வைத்து தமது பேரினவாத நிலைப்பாட்டைத் தொடர்கிறது. சுதந்திரம் என்பதற்குப் பின்னான காலப் பகுதியில் பேரினவாத ஒடுக்குமுறை ஏவப்பட்டு வந்த சூழலில் தேசிய இனங்கள் மத்தியில் ஒவ்வொரு கால கட்டத்திலும் தேசிய வாதம் வளர்ந்து வந்துள்ளது. சிங்கள ஆளும் வர்க்கசக்திகளால் பெரும் தேசியவாதம் அகங்காரத்துடனும் அதிகாரத்துடனும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. அதனை எதிர்த்து நிற்பதற்கு முற்போக்கான அரசியல் அணுகு முறையுடனும் தூரநோக்கு மிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நடைமுறைகளுடனும் கூடிய நாட்டின் சகல ஒடுக்கப்பட்ட மக்களுடனும் ஐக்கியப்படக் கூடிய பொது வேலைத்திட்டம் எதனையும் தமிழர் தலைமைகள் முன்வைக்கவில்லை. அவர்கள் மேட்டுக்குடி உயர் சாதிய உயர்வர்க்கத் தலை மைகளாக இருந்த காரணத்தால் குறுந்தேசியவாத நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். இன அடிப்படையில் குறுந்தேசியவாதத்தைக் கடைப் பிடித்த அதேவேளை வர்க்க ரீதியில் முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். பாராளுமன்ற அரசியல் தளத்தில் பேரம் பேசும் போதும் அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுத்த வேளையிலும் அதன் பின்னான தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்ட சூழலிலும் குறுந்தேசியவாதமும் வர்க்க சமரசமும் தொடர்ந்தது. இன்றும் ஏகாதிபத்திய சார்பும் விசுவாசமும் எதிர்பார்ப்புகளும் இருந்தே வருகின்றது. இதே நிலைதான் ஏனைய தேசிய இனங்கள் மத்தியிலும் உள்ள தலைமைகள் பின்பற்றி நிற்கும் வழி முறையாக உள்ளது.

பெருந் தேசியவாதம் சிங்கள மக்கள் மத்தியில் அகங்காரமாகவும் வெறித்தனமாகவும் முன்னெடுக்கப்பட்டு தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் மீதான குரோதம் வக்கிரமாக வளர்க்கப்பட்டு வந்தது. அதுவே பெரும் தேசிய வெறியாகி ஏனைய தேசிய இனங்கள் மீது அவ்வப்போது வன்முறைகளையும் இன வக்கிரங்ளையும் தீர்த்து வந்தது. இதனால் சாதாரண சிங்கள மக்கள் மீது தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் வெறுப்படைந்து கொள்ளுமாறான போக்குகள் வளர்க்கப்பட்டன. அவ்வாறே நாட்டைப் பிரிப்பதற்கும் இந்தியாவோடு இணைப்பதற்கும் தமிழர்கள் முயலுகிறார்கள் என்ற எண்ணம் சிங்கள மக்களிடையே பரவி வலுவடைந்தது. அதேபோன்று மலையக மக்கள் வந்தேறு குடிகள் என்றும் மலையகத்தில் அவர்களை நிரந்தமாக நிலைக்க விடக் கூடாது என்ற எண்ணங்களும் சிங்கள மக்களிடையே பரப்பிக் கொள்ளப்பட்டுள்ளது. அத்தகைய எண்ணங்களைக் களைவதற்கோ அல்லது. சிங்கள தொழிலாளி வர்க்கத்துடன் வர்க்க ரீதியில் ஐக்கியப்படுவதற்ககான வேலைத்திட்டம் எதையும் மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் என்றுமே முன்வைக்கவில்லை. பதிலுக்குப் பேரினவாத ஆளும் வர்க்க சிங்களத் தலைமைகளுக்கு அடிமை விசுவாசம் தெரிவித்து அமைச்சுப் பதவிகளையும் ஏனைய சொத்து சுகங்களையும் பெற்று வந்திருக்கிறார்கள். அதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் மலையகத் தமிழ் மக்கள் பற்றிய சந்தேகம் அச்சம் ஏற்படுமாறான குறுந்தேசியவாதத்தையும் அவ்வப்போது பேசி வந்துள்ளனர். இவ்வாறே முஸ்லீம்கள் பற்றி சிங்கள மக்களிடையே துவேசம் பரப்பப்பட்டு வந்துள்ளது. வர்த்தகப் போட்டி காரணமாகவும் மதம் பற்றிய காழ்ப்புணர்வுடனும் முஸ்லீம்களிடையே சிங்கள மக்களுக்கு விரோதமான பரப்புரைகள் தொடர்ந்து வந்துள்ளன. அதேவேளை முஸ்லீம் உயர் வர்க்கத் தலைமைகள் பேரினவாத ஆளும் தரப்புகளுடன் இணைந்து பதவிகளும் சொத்து சுகம்களும் பெற்று வந்துள்ளனர். இருப்பினும் மதத் தேசியவாதத்தை ஒருவகைக் குறுந்தேசி யவாதமாகவே முன்னெடுக்கின்றனர். முஸ்லீம் மக்கள் பற்றி தமிழ்த் தலைமைகள் இரண்டாம் தர நோக்கையும் போக்கையும் கடைப்பிடித்தே வந்துள்ளனர். அது பொன்னம்பலம் இராமநாதன் காலம் முதல் இன்றுவரை தொடர்கிறது. தமிழ் மேட்டுக்குடியின் சாதியக் கண்ணோட்டச் சிந்தனையின் ஊடான பார்வையே முஸ்லீம் மக்கள் மீதும் பாச்சப்படுவது இரகசியமல்ல. தமது ஆளுகைக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டவர்கள் முஸ்லீம்கள் என்ற தமிழர் பழைமைவாத நிலை நீடிக்கிறது. இதனையே முஸ்லீம் தேசிய வாதிகள் தமிழ்ப் பேரினவாதம் என அழைத்து அதற்கு எதிராக முஸ்லீம்களை அணி திரளும்படி கேட்கின்றனர். அதற்கு சமகால உதாரணமாக வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதையும் கிழக்கில் முஸ்லீம்கள் மீதான தாக்குதல்களையும் குறிப்பிடுகின்றனர். கூறப்படும் உதாரணங்கள் நியாயமானவை என்பதில் இருகருத்துக்கு இடமில்லை. ஆனால் அதற்கு பதில் முஸ்லீம் குறுந் தேசியவாதம் அல்ல.

இவ்வாறு இலங்கையில் தேசியவாதம் என்பது எல்லாத் தேசிய இனங்கள் மத்தியிலும் மிகவும் வேகமாகப் பரப்பப்பட்டு குறுகிய எல்லைகளுக்குள் மக்களை பிளவுபடுத்தி வைத்து நிற்கின்றது. இலங்கையின் மனிதர்கள், இந் நாட்டு மக்கள், அதற்கும் அப்பால் உழைக்கின்ற மக்கள், வர்க்க ரீதியில் சொந்த இன மத சக்திகளால் சுரண்டி அடக்கப்படுகின்றவர்கள் என்ற உண்மையும் யதார்த்தமும் மறைக்கப்பட்டு தேசியவாதத்தின் நச்சுக்கரங்களால் வழி நடாத்தப்படக் கூடிய அபாயம் தொடரவே செய்கிறது. அதனால் சாதாரண சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் ஒரு வருக்கு ஒருவர் எதிரிகள் போன்று நடந்து கொள்கின்றனர். இதனை ஊக்குவித்து முன்தள்ளியது தேசியவாத நிலைப்பாடேயாகும்.

இதன் மூலம் பேரினவாத முதலாளித்துவ் ஆளும் வர்க்கம் இலாபம் அடைந்து கொண்டது. இன மத மொழி பிரதேச எல்லைகள் கடந்து சுரண்டலாலும் ஏற்றத் தாழ்வாலும் அமுக்கப்பட்டு அரசியல் ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நின்ற உழைக்கும் வர்க்க சக்திகள் பிரிக்கப்பட்டு ஒருவரோடு ஒருவர் மோத வைக்கப்பட்டனர். இதுவே தேசியவாதங் களின் மோதலாகத் தலைவிரித்தாடி நிற்கின்றன. இதில் ஏகாதிபத்தியத்தின் பங்கும் பணியும் பாரியதாகும். சோவியத் யூனியனையும் ஏனைய சோஷலிச நாடுகளையும் வீழ்த்த இதே தேசியவாதம் என்ற ஆயுதமே பயன்படுத்தப்பட்டது.

மூன்றாம் உலக நாடுகளைப் பலவீனப்படுத்தி தங்களையே எதிர்பார்த்து நிற்கச் செய்வதற்கு ஏகாதிபத்தியம் தேசியவாதம் என்ற கருவியைப் பயன்படுத்தியது. வர்க்கப் போராட்டம் சமூக மாற்றம் சோஷலிசம் போன்றவற்றுக்கான போராட்டப் பாதை மறுக்கப்பட்டு அதற்குப் பதிலாக தேசிய வாதம் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள தேசிய இனங்கள் மத்தியில் வேகமாக்கப்பட்டது. அதற்கான இளைஞர் இயக்கங்கள் தீவிரவாத முழக்கங்களுடன் முன் தள்ளப்பட்டதுடன் ஆயுதங்களும் ஏந்த வைக்கப்பட்டனர். இதில் ஏகாதிபத்தியம் "நாயையும் ஏவி முயலையும் உசுப்பி விட்ட" கதை போன்ற பாத்திரத்தையே வகித்தது. தேசிய வாதங்களின் மோதலை பாராளுமன்ற அரசியல் அரங்கிலிருந்து ஆயுதப் போட்ட அரங்கிற்கும் யுத்தகளத்திற்கும் மாற்றுவதில் அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக் சக்திகள் பெரும் பங்காற்றின. அதன் மூலம் இலங்கை இந்த தேசியவாத மோதல்களின் அழிவுகளை இன்றும் அனுபவித்து வருகின்றது.

இலங்கை இத் தேசியவாத மோதல்களால் நலிவுற்று சுயம் இழந்து ஏகாதிபத்தியத்திற்கும் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் முன்னால் பொருளாதார அரசியல் ராணுவ நிலைகளில் பணிந்து நிற்கிறது. சகோதர இனங்களின் மோதல்களால் அந்நியர்கள் ஒரு புறத்தில் பொருளாதார வளங்களைக் கொள்ளையிட்டுச் செல்கிறார்கள். மறுபுறத்தில் ஆயுதங்களின் விற்பனையை அதிகரித்துக் கொள்கிறார்கள். பேரினவாத ராணுவ ஒடுக்கு முறைக்கு ஆதரவும் அரவணைப்பும் கொடுக்கும் அதே கரங்கள்தான் போராடும் சக்திகளுக்கு விடாதை பிடி என உற்சாகமளித்தும் நிற்கிறார்கள். அதன் பிரதிபலனாக ஆளும் தரப்பினரும் போராடும் தரப்பினரும் ஏகாதிபத்தியத்தை எதிர்பார்த்து தத்தமக்கு உதவும்படி குனிந்து பணிந்து நிற்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளனர். பயங்கரவாதத்தையும் பிரிவினையையும் அழித் தொழிக்க தமக்கு நிபந்தனையற்ற ஆதரவை ஏகாதிபத்தியமும் பிராந்திய மேலாதிக்கமும் தரவேண்டும் என ஆளும் வர்க்கத் தரப்பு வேண்டி நிற்கிறது. அதேவேளை தமிழர்களுக்கு தன்னாட்சி அதிகாரத்தைப் பெற்றெடுத்துத் தருமாறு தமிழர் தலைமை கேட்டு நிற்கிறது. ஏகாதிபத்தியம் நமட்டுச் சிரிப்புடன் வாலையும் தலையையும் காட்டி நிற்கிறது. தேசியவாதத்தின் அவலத்தை இங்கே காண முடிகிறது.

இன மேன்மை இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு காலப் பழைமை புனித மதத்தின் காவலர்கள் என்று சிங்களத் தேசியவாதமும் நாங்கள் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய ஆண்ட பரம்பரையினர் என தமிழ்த் தேசியமும் நாங்கள் உலகில் பரந்து வாழும் மதத்தைப் பின்ப ற்றுவோர் என முஸ்லீம் தேசியவாதமும் உணர்ச்சியுடனும் உத்வேகத்துடனும் பேசப்படுதன் விளைவே இன்றைய யுத்தமும் போராட்டங்களும். இத்தகைய தேசிய வாதங்களின் மோதல் தான் நாட்டில் ஆறாக ஓடும் மனிதர்களின் இரத்தமும் கண்ணீரும் ஆகும். எனவே தேசியவாத்தின் நச்சுத்தனங்களும் அபாயங்களும் உணரப்படாத வரை இந் நாட்டிற்கோ தேசிய இனங்களுக்கோ மீட்சி இருக்க முடியாது. அழிவுகளே அதிகரித்துச் செல்லும் என்பதே நமக்கு வரலாறு கற்றுத் தந்துள்ள பாடமாகும். இத்தகைய தேசியவாத நிலைப்பாடுகள் சுயநிர்ணய உரிமையையும் சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் வென்றெடுக்க ஒரு போதும் உதவமாட்டாது. இது உலக அனுபவ உண்மையாகும்.

**சண்முகம்**

# பைத்தியம்

**சண்டையான சண்டை பார்க்க**
**பலரும் திரண்ட நேரம்**
**அடிப்பட்டு கிடந்தவனிடம்**
**மெதுவாய் கேட்டேன்**
**எதற்காக சண்டையென்று**
**சண்டையென்று நானறிவேன்**
**எதற்காயென்று நானறியேன்.**
**கூரிய ஆயுதங்களுடன்**
**குறிப்பார்த்து நின்றவனை**
**நயமாய் அணுகி நான் கேட்டேன்**
**எதற்காய் சண்டையென்று**
**சண்டையைப் பார்த்து ரசி.......**
**ஏனென்று கேட்காதே**
**ஏனெனில் எனக்கும் தெரியாது!**

**சேனாதிபதியொருவன்**
**சண்டையைத் துவக்கிவிட்டு**
**லேசாய் நழுவும் போது**
**மெதுவாய் காதில் கேட்டேன்**
**எதற்காய் சண்டையென்று.........**
**சண்டைக்காய் சண்டையென்றான்.**

நேர்மையாய்
சண்டையைப் பற்றி
**செய்திகளைச் சேர்த்த வண்ணம்**
**அங்குமிங்கும் பாய்ந்து திரிந்த**
**ஊடக நண்பனைக் கேட்டேன்**
**ஏனிங்கு சண்டையென்று**
**நேர்மையாய்....... பதில் சொன்னான்**
**மனிதரைக் கொல்வதற்கென்று!**
**நேர்மை கண்டும்**
**சண்டைக்கு சார்பாய்....**
**ஏன் சத்தில்லா செய்தியென்றேன்........**

**நான் நன்றாய் இருப்பது**
**உனக்கு பிடிக்கவில்லையா? என்றான்.**
**இறுதியாய்......**
**பாணும் பருப்பு 100ம்**
**கையிலே ஏந்திக் கொண்டு**
**பசியால் ஓடிய**
**ஒருவனைக் கேட்டேன்.......**
**ஏனிந்த நிலையென்றேன்.**
**ஏனிங்கு? யுத்தமென்றேன்.**

**பைத்திய மென்று**
**திட்டித் தீர்த்தான்......**
**எனக்கா என்றேன்........... இல்லை**
**யுத்தப் பைத்தியமென்றான்.**
**பைத்தியத்துக்குப் வைத்தியம் பார்க்கும்**
**வைத்தியனுக்கும் யுத்தப் பைத்தியமென்றான்.**

**வைத்தியருக்கு வழிகாட்டும்**
**அமைச்சருக்கும் பைத்தியமென்றான்**
**அமைச்சருக்கு ஆசி வழங்கும்**
**துறவிக்கும் பைத்தியமென்றான்**
**துறவிக்கு தானம் வழங்கும்**
**பக்தனுக்கும் பைத்தியமென்றான்........**
**எனக்கும் பைத்தியம்**
**உனக்கும் பைத்தியம்**
**ஓலமிட்டு கத்திக்கொண்டு ஓடினான்.**
**சுற்றுமுற்றும் பார்த்தேன்.**
**பலர் என்னை..........**
**சங்கலியால் கட்டிவிட்டு**
**பைத்தியகார ஆஸ்பத்திரிக்கு**
**வழிதேடியது லேசாய்.......... தெரிந்தது!**
**சீ பைத்தியங்களா.............?**

**~லை. கிங்ஸ்லி கோமஸ்~**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# கருணாநிதியை சிக்கலில் மாட்டிய ராமரும் சேதுவும்

கருணாநிதி தமிழகத்தின் முதல்வர் பதவியை இறுதி நாள் வரை இறுக்கிப் பிடித்திருப்பது என்ற உறுதியுடன் வகித்து வருகின்றார். அவரே தி.மு.க. வின் பாதையையும் பதவிகளையும் முடி வெடிக்கும் தனி மனிதராக இருந்து வருகிறார். செயற்குழு பொதுக்குழு என்பதெல்லாம் மு.க. வின் முடிவிற்கு தலையாட்டி ஒப்புதல் வழங்கவுள்ள சம்பிரதாயக் குழுக்களேயாகும். இவ்வளவு ஆதிக்கம் அவரது கையில் இருப்பதற்குக் காரணம் அவரிடம் அசையும் அசையாச் சொத்துக்கள் கோடிக் கணக்கில் குவிந்திருப்பது தான். கொள்கை கோட்பாடு என்பதெல்லாம் மு.க. வைப் பொறுத்த வரை இரண்டாம் மூன்றாம் இடங்களில் தான், தி.மு.க.வின் சொத்துக்கள் யாவும் மு.க. வின் பெயரில் தான். முதல்வர் பதவிக்கும் ஆட்சி அதிகாரத்திற்கும் மத்தியில் யாரோடும் கூட்டுச் சேரக் கூடிய "நல்ல மனிதர்" "அசல் தமிழர்" "கலைஞர்" "முதல்வர்" கருணாநிதி.

இத்தகைய இந்த மனிதர் அடிக் கடிசிக்கல்களில் மாட்டிக் கொள்வதும் பின்பு அதிலிருந்து சந்தர்ப்ப வாமாகக் குத்துக் காரணம் அடித்து விலகிக் கொள்வதும் வழக்கம். அண்மையில் மு.க. யாரிடம் மாட்டுப்பட்டார் என்றால் இராம "பிரானிடமும்" "சேது" சமுத்திரத்துடனுமாகும். தங்களுடைய இந்துத்துவ அடிப்படை வலதுசாரி அரசியலுக்கு வலுச்சேர்க்கவும் அதன் ஊடாக மத்தியில் ஆட்சியைப் பிடிக்கவும் பாரதி ஜனதா கட்சி இராமர் என்ற இராமாயணக் கதாநாயகனைக் கடவுளாக்கி அத்தகையவருக்கு இல்லாத பொல்லாதவைகள் சேர்த்து இந்து



மத மக்களை ஏமாற்றி வருவது யாவரும் அறிந்ததே. இவ்வாறே முன்பு பாபர் மசூதி என்ற வரலாற்றுக் கட்டிடத்தை இடித்து தரை மட்ட மாக்கிய வர்கள் இந்த பாரதிய ஜனதா கட்சியும் அவர்களோடு இணைந்த சங்கப்பரிவார் அமைப்புகளும். அதற்குப் பின் இராமரைத் தூக்கி அரசியல் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இப்போது நல்லதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சேது சமுத்திரக் கால்வாய் பகுதியில் சில மணல் திட்டுக்கள் உண்டு. அவை இந் தியாவின் இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் மன்னாருக்கும் இடையிலான ஆழம் குறைந்த நீர்ப் பரப்பில் காணப்படும் மணற்திட்டுக்களாகும். இதனையே இராமர் இலங்கைக்குப் படை எடுத்து வந்து இராவணனைக் கொன்ற வேளை போடப்பட்ட அணை என்றே பாரதிய ஜனதா வாதிடுகிறது. அவ்வாறான தெய்வீகமும் வரலாறும் கொண்ட இராமர் அணையை அழித்து அதன் ஊடாகக் கால்வாய் அமைக்கக் கூடாது என்றே அக் கட்சி இயக்கம் நடாத்துகிறது.

ஆனால் விஞ்ஞான பூர்வமாகவும் வரலாற்று ரீதியாகவும் அது அணை அல்லவென்றும் இராமர் கட்டியதற்கான ஆதாரம் இல்லை என்றும் கூறப்படுகிறது. கற்பனை இதிகாசங்களை வரலாறு எனத் திரிப்பதும் அவற்றுக்கு இந்துத் துவ காவி கட்டுவதும் அதற்காக சூலம் வாள் கத்தி தூக்குவதும் சங்கப்பரிவார் என்ற வன்முறைச் சாமியார்களின் வழக்கமாகும்.



மறுபுறத்தில் சேது சமுத்திரக் கால் வாய்த் திட்டம் பல வித சூழலியல் பாதிப்புக்களையும் அழிவுகளையும் கொண்டு வரக் கூடியது என எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்ட போதும் அதனை மீறியே மத்திய மு.போ. கூட்டணி அரசும் மாநில தி.மு.க. ஆட்சியும் கால்வாய் வெட்டும் பணியில் இறங்கின. இத்திட்டத்தால் இந்தியக் கரையோர மக்களும் மீனவர்களும் பாதிக்கப்படுவர். அவ்வாறே இலங்கையின் வடக்கு பிரதேசமும் கரையோரங்களும் மக்களும் மீனவர்களும் பாதிப்புறுவர். இவற்றையும் மீறியே சேது சமுத்திரத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இன்று இதனை எதிர்க்கும் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியில் இருந்த வேளை இத்தகைய திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி இருந்தது. இன்று அதனை எதிர்ப்பதற்கு காரணம் முழுக்க முழுக்க அரசியல் திட்டத்தின் ஊடான தேர்தல் நோக்கமேயாகும். அண்மையில் குஜராத்தில் மாநிலத் தேர்தல் நடைபெறப் போகிறது. அங்கு ஆட்சி செய்வது பாரதிய ஜனதாக் கட்சியாகும். அதன் முதலமைச்சர் நரேந்திர மோடி ஒரு நரபலி எடுக்கும் இந்து வெறியனாகும். முஸ்லீம்களுக்கு எதிராக காவிச் சாமியார்களையும் குண்டர்களையும் ஏவி நரவேட்டை ஆடிய அதே கும்பல் மீண்டும் ஆட்சிக்கு வர ஒரு வலுவான பிரச்சினை தேவைப்பட்டது. இலகுவாக தமிழ் நாட்டில் கிடைத்ததை முழு நாட்டிற்கும் பரப்பி அரசியல் லாபம் தேட அத் வானி கும்பல்களம் இறங்கி நிற்கிறது. அதற்கு உதவியாக காவிச் சாமியார் கூட்டம் கொலை வெறியுடன் சூலாயுதம் தாங்கி நிற்கிறார்கள். அதில் ஒரு வன்முறைச் சாமியாரே வேதாந்தி என்ற வட நாட்டு காவிக் குண்டராகும். அவர் அண்மையில் கருணாநிதியின் தலைநாக்கு போன்றவற்றைக் கொண்டு வருவோருக்கு ஒரு லட்சம் சன்மானம் வழங்க இருப்பதாக அறிவித்தார். அதற்குக் காரணம் இராமர் எந்தப் பொறியியல் கல்லூரியில் படித்தவர் என்றும் இராமயணம் ஆரிய திராட அடிப்படையிலான கட்டுக் கதை என்றும் கருணாநிதி தனது வழமையான கிண்டலில் பேசியது தான். வந்ததே கோபம் மத வெறிச் சாமிமாருக்கு. வெட்டடா கொத்

தொடர்ச்சி 12ம் பக்கம்

## பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த உறுப்பினர்

# தோழர் இ.கா.சூடாமணி

## 71வது வயதிற்குள் காலடி வைக்கின்றார்



தோழர் இ.கா.சூடாமணி (இ.கா.கணபதிப்பிள்ளை) பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர். வடபுலத்திலும் பிற பிரதேசங்களிலும் அவர் நன்கு அறியப்பட்ட ஒரு பொதுவுடைமைவாதியாகத் திகழ்பவர். தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மத்தியில் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்து வருபவர். அந்தளவுக்குக் காரணம் அவரது மாக்சிச லெனினிச மாஓசேதுசிங் சிந்தனை மீதான கொள்கைப் பிடிப்பும் பிற்போக்கு சக்திகளுக்கு விட்டுக் கொடுக்காத தொடர் நிலைப்பாடுமாகும். எங்கு சென்றாலும் எங்கு இருந்தாலும் கட்சிக்காகவும் மக்களுக்காகவும் சிந்தித்து செயலாற்றுவது அவரது கம்யூனிஸ்ட் இயல்பாகும். அதுவே அவருக்குரிய பலமாகும். அத்தகைய ஒரு அனுபவம் மிக்க மூத்த தோழர் கடந்த மாதம் (செப்ரெம்பர்) 30ம் திகதி அன்று 71வது வயதினுள் காலடி எடுத்து வைத்துள்ளார். அவருக்கு புதிய ஜனநாயக கட்சியும் புதிய பூமியும் தனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

வடபுலத்தின் வலி வடக்கு காங்கேசன்துறைதையிட்டியைச் சேர்ந்த தோழர் சூடாமணி தொழிலாளி வர்க்க குடும்பத்தி லிருந்து வந்தவர். மிக இளவயதில் பொதுவுடைமைக் கொள் கையின் பால் ஈர்க்கப்பட்டவர். நாற்பதுகளின் பிற்கூறில் தமிழகத்தின் பிரபல பொதுவுடைமைவாதியான தோழர் ஜீவானந்தம் இலங்கையில் சில காலம் தலைமறைவாக இருந்தவர். அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த வேளை இலங்கை பொதுவுடைமைக் கட்சியின் வடபுலத்து தலைமைத் தோழர்கள் அங்கு பல கூட்டங்களை நடாத்தி ஜீவாவைப் பேச வைத்தனர். அவர் மக்களை மிகவும் கவரும் வகையில் பேசக் கூடிய ஆற்றல் மிக்கவர். அத்தகைய ஒரு கூட்டம் தோழர் சூடாமணியின் வீட்டிற்கு அருகில் இருந்த ஒரு பாடசாலையில் இடம்பெற்றது. அதனை வடபுலத்து பொதுவுடைமை இயக்கத் தலைவர்களில் ஒருவராக இருந்த தோழர் டாக்டர் சு.வே.சீனிவாசகம் முன்னின்று ஒழுங்கு செய்திருந்தார். அவரது வீட்டில் சில நாட்கள் ஜீவா தங்கியும் இருந்தார். இக் கூட்டத்தில் முதிரா இளைஞரான தோழர் சூடாமணி கலந்து கொண்டு அவரது பொதுவுடைமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். தோழர் டாக்டர் சு.வே சீனிவாசகத்தின் இல்லமும் தோழர் சூடாமணியின் வீடும் ஒரே அயலில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தோழர் சீனிவாசகம் காங்கேசன்துறை பிரதேசத்தில் பல பொதுவுடைமைவாதிகளை உருவாக்கி கட்சி இயக்கத்தை முன்னெடுத்தவர். அவர்களில் மறைந்த மூத்த போராளியான சிதம்பரி கந்தையா, சின்னராசா, கிருஸ்ணபிள்ளை போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்றும் மூத்த தோழர்களாக புதிய- ஜனநாயக கட்சியின் 25வது ஆண்டு விழாவில் செவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட தோழர்கள் கணபதிப்பிள்ளை, கந்தப்பிள்ளை ஆகியோர் அதே காங்கேசன் துறை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் சூடாமணி பாட்டாளி வர்க்க அரசியலுக்கும் கட்சிப் பணிகளுக்கும் முதலிடம் கொடுத்து ஏனையவற்றை இரண்டாம் மூன்றாம் நான்காம் இடத்தில் வைத்து வாழ்ந்து வந்தவர். "அரசியலை முதல் இடத்தில் வையுங்கள்'' என்பது தோழர் மாஓ சேதுங் முன் வைத்த உறுதியான வேண்டுகோளாகும். அந்த அரசியல் பாராளுமன்ற அல்லது பிழைப்புவாத அரசியல் அல்ல. பாட்டாளி வர்க்கத்திற்குரிய புரட்சிகர அரசியலாகும். அத்தகைய அரசியலை சமூக மாற்றத்திற்குரிய கருவியாகவும் ஆயுதமாகவும் முன்னெடுப்பதே பொதுடைமைவாதிகளின் அடிப்படை நிலைப்பாடாகும். அவ்வாறு முன்னெடுக்கும் போது இன்றைய ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் பழைமைவாதப் பிற் போக்குத்தனங்களையும் பொதுவுடைமைவாதிகள் எதிர்த்து நிற்பது தவிர்க்க முடியாததொன்றாகும். அரசியல் சமூகத் தளங்களில் மட்டுமன்றி குடும்ப வாழ்விலும் பல் வேறு நெருக்கடிகளை சந்திக்க வேண்டியே ஏற்படுகின்றது. இது நமது நாட்டிற்குரியது மட்டுமல்ல. உலகம் பூராவும் பொதுவுடைமை வாதிகள் எதிர் கொண்டு வந்த வரலாறாகும்.

அவ்வாறு நோக்கும் போது தோழர் சூடாமணி கடுமையான போராட்டங்களையும் நெருக்கடிகளையும் வாழ்வின் துன்பங்களையும் எதர் கொண்டு இறுதிவரை அவற்றுக்கு முகம் கொடுத்து சளைக் காது போராடி வந்தவர். அவரது போராட்டம் தனிமனிதப் போராட்டம் அல்ல. கட்சியோடும் தோழர்களோடும் நண்பர்களோடும் மக்களோடும் இணைந்து நடாத்தி வந்த போராட்டமாகும். அதன் பெறுமதி மிகக் அனுபவங்கள் கனதியானவையும் படிப்பினைக்குரியவையுமாகும்.

வலி வடக்கின் பெரும் பகுதி ராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியதனால் இடம் பெயர்ந்து தற்போது வவுனியாவில் குடும்பத்துடன் வசித்து வருபவர் தோழர் சூடாமணி. நெருக்கடிகள் மிகுந்த வவுனியாச் சூழலிலும் தோழர் சூடாமணி தனது கட்சிப் பணிகளையும் மக்கள் பிரச்சினைகளை அணுகி வரும் நடைமுறைகளையும் கைவிடவில்லை. முதுமை நோய் எனக் கூறி இறுதிக் கால ஓய்வில் இருந்து விடவில்லை. நம்பிக்கையோடு புதிய தலைமுறையினரை உருவாக்குவதிலும் கட்சிக் கொள்கைகளை முன்னெடுப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றமை அவரிடமிருந்து கற்க வேண்டிய புரட்சிகர அனுபவமாகும். தோழர் சூடாமணி புதிய- ஜனநாயக கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்து செயற்பட்டு வருகின்றார். அவர் 1958ம் ஆண்டில் பழைய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்புரிமை பெற்று தொடர்ச்சியாக இன்று வரை தனது பொதுவுடைமை நிலைப்பாட்டை புரட்சிகரமாக முன்னெடுத்து வருபவர் என்பது குறிப்பிட வேண்டியதாகும்.

தோழர் சூடாமணியின் 71வது வயதினை நினைவு கூரும் போது அவரது கடந்த கால வாழ்வும் போராட்டமும் நினைவுக்கு வந்து செல்கிறது. 1966ம் ஆண்டு ஒக் ரோபர் 21 எழுச்சியின் சுன்னாக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் செஞ்சட்டையுடன் முன்னணியில் சென்று பொலீஸ் குண்டாந்தடி – துப்பாக்கிப் பின்புறப் பிடி என்பவற்றின் தாக்குதலால் இரத்தம் பீறிட்டு நிலத்தில் சரிந்த நினைவு கண் முன்னே வந்து நிற்கின்றது. அவ் எழுச்சியில் பொலிசாரினால் இரத்தம் பீறிட இழுத்துச் செல்லப்பட்ட மூன்று தோழர்களில் தோழர் சூடாமணியும் ஒருவராவார். ஏனைய இரு தோழர்களும் கே.ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி ஆவர். அவ் எழுச்சியின் 41வது ஆண்டின் நினைவின் போது தோழர் சூடாமணி 71வது வயதினுள் அடியெடுத்து வைப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அவரது கட்சிப் பணியும் மக்கள் சேவையும் நீலைத்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் குழு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# யூ. என். பி யின் பாதை விலகல்

## வியக்க என்ன இருக்கிறது?

யூஎன்.பி இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை யின் தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறையை நிராகரிப்பதாக முடிவு எடுத்துள்ளது என்ற செய்தி ஆனந்தசங்கரி முதல் அனைத்துத் தமிழ்த் தேசியவாத அரசியல் தலைவர்களை யும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது. தமிழ் நாளேடுகள் அதற்கும் ஒருபடி மேலே போய்த் தமது அதிர்ச்சி பற்றித் தலையங்கங்களைத் தீட்டியுள்ளன. "ரணில் விக்கிரமசி ங்ஹ ஒப்பிடுகையில் நல்ல நம்பகமான மனிதர் என்று நம்பியிருந்தோம், கைவிட்டுவிட்டாரே!" என்பது தான் எல்லாரதும் பொதுவான புலம்பலாக இருந்துள்ளது. நாங் கள் முதலில் யூஎன்.பி யின் யோக்கியத்தைப் பார்ப்போம். பிறகு அதன் நம்பத்தக்க நாயகரின் யோக்கியத்தைப் பார்ப்போம்.

### முதலாவது பேரினவாதக் காலடி

1948ம் ஆண்டு மலைகத் தமிழரது வாக்குரிமைப் பறிப்பு டன் யூஎன்.பி யின் முதலாளிய- நிலவுடைமை வர்க்கப்




பேரினவாத அரசியலின் முதலாவது பெரிய காலடி பகிர ங்கமாக வெளிப்படுகிறது. ஆனால் திரைமறைவில் தமிழ் முஸ்லீம் பிரதேசங்களைத் திட்டமிட்டே சிங்களக் குடியே ற்றங்கள் மூலம் அவற்றின் பாரம்பரிய இன அடையாள மில்லாமற் செய்கிற காரியம் நடக்கத் தொடங்கிவிட்டது. அதற்கு முன்னோடியாக பலஸ்தீனத்தில் நடந்த யூதக் குடியேற்றங்கள் அமைந்ததாக டி.எஸ் சேனநாயக்கவின் சாதனைகளைப் புகழ்ந்து எழுதிய ஒரு பேரினவாதி பெரு மையுடன் குறிப்பிட்டது நினைவில் உள்ளது. சிங்களம் மட்டுமே பற்றி முதலில் யோசித்தவர் ஜே.ஆர். ஜயவர்த் தன. அது அன்றைய அரசு சபையில் (ஸ்றேற் கவுன்சி லில்) முன்வைக்கப்பட்டுச் சமாளிக்கப்பட்ட விடயம். 1956ல் "சிங்களம் மட்டுமே" சட்டத்தைக் கொண்டு வந்த பண் டாரநாயக்கவையும் ஸ்ரீ.ல.சு. கட்சியையும் எதிரிகளாகக் கண்ட அளவுக்குத் தமிழ்க் காங்கிரசோ தமிழரசுக் கட்சி யோ யூஎன்.பி யையும் அதன் நரித்தனமான தலைவர்கள் டி.எஸ்.சேனநாயக்கவையும் ஜே.ஆர். ஜயவர்த்தனவையும் காண விரும்பாத காரணம் அவர்களது ஏகாதிபத்திய சார்பான வர்க்க நலன்களே ஒழிய வேறெல்ல.

சிங்களம் மட்டுமே சட்டத்தையே தேசிய இனப்பிரச்சனை யின் தொடக்கப்புள்ளியாகக் கொண்டாலும் 1956 தேர் தலில் யூஎன்.பியும் சிங்களம் மட்டுமே மொழிக் கொள் கையை முன்வைத்தே போட்டியிட்டது. 1957ல் பண்டா ரநாயக்கா செல்வநாயகம் உடன்படிக்கை மூலம் தீர்வு க்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது முதலாவது முட்டுக்கட்டை யூஎன்.பியாலேயே இடப்பட்டது. பின்னரே பிக்குமாரது நெருக்குவாரத்தின் பின்னணியில் பண்டாரநா யக்க உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார். தமிரசுக் கட்சி 1957ல் சிங்கள ஸ்ரீ எழுத்து பொறிக்கப்பட்ட வாகன இலக்கத்தகடுகளை நிராகரித்து தமிழரசுக் கட்சி போரா ட்டம் நடத்தியது. பண்டாரநாயக்க அறிமுகப்படுத்திய சிங் கள ஸ்ரீ இலக்கத் தகடு கொண்ட முதலாவது வாகன மான "1 ஸ்ரீ 1" இலக்கம் பொறித்த வாகனத்தின் உரி மையாளர் யூஎன்.பி யின் தலைவராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல. அவரையும் தமிழ்த் தலைவர்கள் இனவாத உணர்வற்ற கனவானாகவே கருதி வந்தனர்.

### தமிழரசுக் கட்சியை ஏமாற்றிய யூ.என்.பி

டட்லி சேனநாயக்க- செல்வநாயகம் உடன்படிக்கை திரை மறைவில் செய்யப்பட்ட தேர்தலுக்கு முந்திய உடன்பாடு. யூஎன்.பி 1957ம் ஆண்டு செய்ததை ஸ்ரீ.ல.சு. கவும் பாராளுமன்ற இடதுசாரிகளும் சேர்ந்து 1966ல் செய்த னர். ஆனால் மாவட்டசபைகளை உருவாக்கும் எதிர் பார்ப்பில் திருச்செல்வத்தை அமைச்சராக்க தமிழரசுக் கட்சி உடன்பட்டது என்று சொல்லப்படுகிறது. மாவட்ட சபைகட்கான எதிர்ப்பு யூஎன்.பி அணியினரிடையே மிகவும்





வலுவாக இருந்து தமிழரசுக் கட்சி 1968ன் பிற் பகுதியில் ஆளுந்தரப்பிலிருந்து விலகினாலும் யூஎன்.பி ஆட்சிக்கு ஆதரவாகவே அதன் பின்பும் நீண்டகாலமாக இருந்து வந்தது. 1972ம் ஆண்டு ஸ்ரீ.ல.சு. கட்சி தலைமையிலான "மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம்" புதிய யாப்பைக் கொண்டு வந்தது. அதிற் சிறுபான்மைத் தேசிய இனங் கட்கு எதிரான பேரினவாத அம்சங்களைத் தமிழசுக் கட்சி எதிர்த்தது. ஆனால் யூஎன்.பி அவை பற்றி எதுவுமே பேச வில்லை. பிள்ளையையும் கிள்ளித் தொட்டி லையும் ஆட்டுகிற விதமாகத் தமிழரசுக் கட்சியின் அரசியல் பிரிவினைக் கோரிக்கையை நோக்கி நகர்வதற்கு ஊக்க மளித்த யூஎன்.பி .1977ல் ஆட்சிக்கு வந்த பின்பு செய்த தமிழர் விரோதக் காரியங்களைப் பட்டியலிட்டுக் காட்ட இக் கட்டுரையின் நீளம் போதாது. ஆனாலும் ஒன்று மட்டும் உறுதி. எந்த நிலையிலும் யூஎன்.பி ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கிற தமிழ் மக்க ளையும் பிற தேசிய இனங்களையும் சிங்களத் தேசிய இனத்தவருக்குச் சமமாகக் கருதுகிற ஒரு தீர்வுக்கு ஆயத் தமாக இருந்ததில்லை.

## ஜனநாயகம் இல்லாமல் சுயநிர்ணயம் இல்லை!

### ரணில் நாணயமான தலைவரா?

இனி யூஎன்.பியின் நாணயமான தலைவரை நோக்கி நமது கவனத்தைத் திருப்புவோம். ரணில் விக்கிரமசிங்ஹ வின் மனித உரிமைகள் பற்றிய அக்கறை அவரது அலுவ லக அருகா மையில் யூஎன்.பியின் 17 வருட சர்வாதிகார த்தின் இறுதிக் கட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரவதை முகா ம்பற்றிய விசார ணைகள் முடக்கப்பட்டதால் இன்ன மும் தெளிவாக அறிய ப்படாது உள்ளது. சமாதானமான தீர்வை முன்வைத்துக் சந்திரிகா குமாரதுங்க 1994ல் வெற்றி பெற்ற பின்பு தமிழ் மக்களுக்குப் பயன்படக் கூடிய தீர்வு எதையும் முன்வைக்க யூஎன்.பி எவ்வகையிலும் ஒத்துழைக்கவில்லை. 2000ம் ஆண்டு சந்திரிகா குமார தூங்க ஆட்சி முன்வைத்த குறைபாடான அதிகாரப் பரவ லாக்க ஆலோசனை ஆவணப் பிரதிகளை யூஎன்.பி உறுப் பினர்கள் பாராளுமன்றத்தினுள் வைத்து தீயிட்ட போது மந்தமான முறுவலுடன் அமர்ந்திருந்தவர் தான் ரணில் விக்கிரமசிங்ஹ.

அவருடைய அதி முக்கியமான சாகசம் விடுதலைப் புலிக ளின் அணியில் 2004ம் ஆண்டு ஒரு பிளவை ஏற்படுத்தி யது தான். அதற்கு அவருக்கு உதவியது அமெரிக்காவின் கொடைக்கரங்கள். அவரது முகவராக செயற்பட்ட மிலி ந்த மொறகொடவும் கொழும்புத் தமிழ் மக்கள் நம்ப ஆயத்தமா யிருந்த இன்னொரு யூஎன்.பி தலைவரான காமினி திசாநா யக்காவின் மகனான நவீன் திசாநாயக்க வும் அந்தக் கதையை அவிழ்த்து விட்ட பின்னரும் தமி ழ்த் தலைவர்கள் ரணில் விக்ரமசிங்ஹவை நம்ப ஆயத்த மாகவே இருந்து வந்துள்ளனர்.

யூஎன்.பியின் குத்துக்கரணம் என்று தமிழ்த் தலைவர்க ளும் பத்திரிகைகளும் கூறுகிற இந்த மனமாற்றத்தின் அடிப்படை என்ன? பேரினவாத யூஎன்.பி 2002ம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கைக்கைக்கு உடன்பாடாக இரண்டே ஆண்டுகளில் மனம் மாறியதை நாம் குத்துக் கரணம் என்று ஏன் அழைக்கவில்லை. சமஷ்டி அடிப்படை யிலான தீர்வை ஏற்றதை நாம் ஏன் குத்துக்கரணம் என்று சொல்லவில்லை. எந்தத் திசையில் கரணம் இடு வது என்பது தான் நமது அடிப்படையா?

அடுத்தபடியாகத் தமிழ்த் தேசியவாதிகளும் நாளேடுகளும் எந்தச் சிங்களவர்களையும் நம்பக் கூடாது என்ற பழைய பல்லவிக்கு மீளுவார்கள். சிங்களவர்கள் எல்லோருமே தமிழர்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வந்துள்ளனர் என் பது நமக்கு நினைவூட்டப்படும். ஆனாலும் தமிழ் வாக் குக்கள் யூஎன்.பிக்கே இடப்படும்.

### தமிழ் முகவர்கள் சொல்வார்களா?

யூஎன்.பியின் முகவர்கள் போன்று செயற்படுகிற மனோ கணேசனும் தி. மகேஸ்வரனும் தமிழ்க் காங்கிரஸ் தலைவ ர்கள் சிலரும் வெளியே விடுதலைப் புலிகளுக்கு ஆதர வாக ஒரு முகமும் இரகசியமாக யூஎன்.பி யுடன் குலாவ இன்னெரு முகமும் வைத்திருக்கின்றர். தமிழ்ப் பத்திரிகை உலகப் பிரமுகர்களும் சைவமும் தமிழும் என்று பம்மா த்துக் காட்டும் கொழும்புத் தமிழ்க் கனவான்களும் யூஎன். பி யைப் பற்றிய தமது இன்றைய நிலைப்பாடு என்ன வென்று தெளிவாகவும் பகிரங்கமாகவும் சொல் வார்களா? இல்லை. சொல்லவேமாட்டார்கள்.

நாங்கள் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டியன எவை யென்றால் பேரினவாத ஆட்சியாளர்கள் எந்த நிலையில் நியாயமான தீர்வுக்கு உடன்படுகிறார்கள். எப்போது பேச்சு வார்த்தைகட்கு இணங்குகிறார்கள். எந்த நிலை யில் பழையபடி தங்களது பேரினவாத நிலைபாட்டில் இறு கிக் கொள்ளுகிறார்கள். எப்போது போர் பற்றிப் பேசு கிறார்கள். எப்போது அமைதி பற்றிப் பேசுகிறார்கள். எப்போது உடன்படிக்கையைச் செய்கிறார்கள் எப்போது அவற்றை மீறி நடந்து எழுதியதைக் கிழித்து எறிகிறார்கள் என்பவற்றுக்கான காரணங்களைத் தான்.

சுருக்கமாகச் சொன்னால் ஒடுக்கப்பட்ட மக்களது போரா ட்ட வலிமையையிட்டோ அவர்களது போராட்டம் ஆளும் அதிகார வர்க்கத்தின் நலன்களுக்கு மிரட்டலாக அமை கிறபோதோ அவர்கள் கொஞ்சம் இறங்கி வருகிறார்கள். ஆனால் அவர்களது நோக்கம் தேசிய இனப் பிரச்சனை யின் நியாயமான தீர்வு அல்ல. உண்மையில் முழுமையான உறுதியான தீர்வு இல்லாமல் தேசிய இனப் பிரச்சினையும்

தொடச்சி 9ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# யூ. என். பி ஆதரவுத் தமிழ்க் கனவான்கள்

# என்ன பதில் சொல்வார்கள்?

இனமுரண்பாடுகளும் தொடர்வது அவர்களது நன்மைக்கானதே. எனவே பேச்சு வார்த்தைகளோ தீர்வு ஆலோசனைகளோ வருவது ஒரு அரசியல் சமுதாய நெருக்கடியினதும் வெகுசன நெருக்குவாரத்தினதும் பின்னணியிலேயே.

**போராட்டங்களும் சமரசங்களும்**

தமிழ்த் தலைமைகளின் போராட்ட வலிமை பற்றிய மதிப்பீடுகளும் தமிழ் மக்களின் எழுச்சி ஏற்படுத்தக் கூடிய பிரச்சனைகள் பற்றிய கவலைகளும் சமரசங்களுக்கு வழி செய்துள்ளன. அவற்றில் தேர்தல் அரசியலும் அதிகாரத்தைப் பிடிப்பதற்கான கூட்டணிகள் பற்றிய எதிர்பார்ப்புக்களும் பங்களித்துள்ளன. 1957, 1965, 1977 ஆண்டுகளில் ஏற்பட்ட உடன்பாடுகளும் சத்தியாக்கிரகத்திற்கு முன்னர் 1961 முற்பகுதியில் தமிழரசுத் தலைவர்களுடன் சாம் பி. சி. பெர்ணான்டோ நடத்தித் தோல்வி கண்ட பேச்சு வார்த்தைகளும் அவ்வாறான தன்மையுடையன. 1970 தேர்தலின் பின்பு தமிழரசுத் தலைமையால் எதையும் போராடி வெல்ல இயலாது என்ற உண்மை தென்னிலங்கையிலும் அதைவிடத் தெளிவாக வடக்கு- கிழக்கிலும் உறுதியாகியது. போராளிக் குழுக்களின் உருவாக்கமும் எழுச்சியும் தமிழீழக் கோரிக்கைக்கு ஒரு தூண்டுகோ



லாக அமைந்தன. ஆயினும் தேர்தல் கண்ணோட்டமே அதன் அடிப்படையாயிருந்தது.

பேரினவாத ஒடுக்குமுறை போராக உருமாறத் தொடங்கிய காலத்தில் யூஎன்.பி அரசாங்கம் தனது வலிமையை மிகையாக மதிப்பிட்டிருந்தது. அதற்கேற்பத் தமிழ்த் தேசிய வாதத்தின் அரசியல் சக்திகள் வலுவிழந்து காணப்பட்டன. எந்த நிலையிலும் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தம்மிடையே உள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்கள் பற்றிக் கவலை காட்டாததன் காரணம் அதன் வர்க்க சாதிய நிலைப்


வருகின்றன. கடந்த இருபதாண்டுக்கால அனுபவத்தை நாம் மறக் குமாறு எதிர்பார்க்கப்படுகிறோம்.

ஒவ்வொரு சமாதான முயற்சிக்கும் தூண்டுகோலாக இருந்தது அரசாங்கம் எதிர்நோக்கிய நெருக்கடியான சூழலே. விடுதலைப்புலிகளை முறியடிக்க இயலாத சூழ் நிலையிலேயே இதுவரையிலான பேச்சு வார்த்தைகள் அனைத்தும் அமைந்தன.

**புலிகள் இயக்கமும் போராட்ட சூழலும்**

விடுதலைப் புலிகளைப் போரில் வெல்ல இயலாது என்ற விதமான கருத்து தமிழரிடையிலும் சிங்களவரிடையிலும் பிற தேசிய இனங்கள் நடுவிலும் உருவாகியிருந்தமை இந்த நூற்றாண்டின் முதல் ஐந்து ஆண்டுகளின் சமா தான அரசியலில் ஒரு முக் கிய பங்கா ற்றியது. எனினும் விடுதலை ப்புலிகட்கு மட்டுமன்றித் தமிழ்த்தேசிய இன





விடுதலைக்கும் எதிரான சர்வதேசச் செயற்பாடுகள் அக்காலத்தில் ஊக்கம் பெறத் தொடங்கிவிட்டன. ஏகாதிபத்தியமும் இந்திய மேலாதிக்கமும் தங்களது தேவைகட் கேற்ப

கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் கண்டோம்.

விடுதலைப்புலிகள் தற்காலிகமாக வேனும் ஒரு பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளதை இப் போது தான் தமிழ் ஊடகங்கள் தயங்கித்தயங்கிக் கூறுகின்றன. அரசாங்கம் இன்னமும் தனது பிரகடனஞ் செய்யப்படாத போரை வெல்லவில்லை. ஆனாலும் இதுவரை பெற்ற வெற்றிகள் அவற்றுக்காக நாட்டின் பொருளாதாரம் கொடுத்துள்ள பாரிய விலையை மீறிச் சிங்களப் பேரினவாத அரசியலுக்குத் தென்பூட்டியுள்ளன. தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை விடப் பயங்கரவாத ஒழிப்பு மிகவும் முக்கியமாகி விட்டது. சிங்கள மக்கள் போரை விரும்பா விட்டாலும் போர் மூலம் தமிழ் மக்களின் போராட்டத்தை மட்டுப்படுத்தவேனும் இயலும் என்ற எண்ணம் அவர்களிடையே பரவலாக உள்ளது. அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை விட ராணுவ வெற்றிகள் பெரியனவாகக் காட்டப்படுகின்றன. நாடு ஒரு ராணுவ ஆட்சியை நோக்கி நகரும் நிலை இருந்தாலும் தேர்தல் அரசியல் முக்கியமானதாக உள்ளது.

**தீர்வு அல்லது வாக்குகளே முக்கியம்**

தீர்வு அவசியம் என்றாலும் சிங்கள மக்களின் வாக்குகள் அதைவிட முக்கியமானவை என்ற கருத்தை ராஜபக்ஷ சில வாரங்கள் முன்பு சொன்னார். யூஎன்.பி தலைமையும் அதையே பின்பற்றுகிறது. அதன் இன்றைய தேவை ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஒரு பிரிவினரதும் முடிந்தால் ஜே.வி.பியின் ஒரு பகுதியினதும் ஒத்துழைப்புத் தேவையானால் அது ஒன்றல்ல ஒரு நூறு குத்துக்கரணங்கட்கும் தயாராகவே உள்ளது.

தமிழ் மக்கள் முன்னாலுள்ள தெரிவு போராட்டம் மட்டுமே. அது அடிப்படையில் ஆயுதப் போராட்டம் மட்டுமாக இருப்பது அதன் பலவீனமாகத் தொடங்கி விட்டது. அந்நியக் குறுக்கீடு பற்றிய எதிர்பார்புக்கள் இன்னொரு பலவீனம். தமிழ் மக்களை மீண்டும் ஒற்றுமைப்படுத்த வேண்டிய தேவை வந்துள்ளது. அந்த ஒற்றுமை அக முரண்பாடுகளைப் பூசி மழுப்பித் தமிழ் மக்களைச் சுரண்டி வாழும் மேட்டுக் குடிகளை மகிழ்விக்கக் கூடிய ஒற்றுமையாக இருக்க முடியாது. அது தமிழரிடையே சமூக நீதியை வலியுறுத்துகிற ஒற்றுமையாகவும் பிற ஒடுக்கப்பட்ட மக்களை அரவணைத்துச் செல்ல வல்ல ஒரு ஒற்றுமையாகவும் அமைய வேண்டும். தமிழர் விடுதலைக்கான போராட்டம் குறுகிய எல்லைகளை உடைத்துச் செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. சுயநிர்ணய உரிமையுடனான சுயாட்சியை வென்றெடுப்பதற்கு ஜனநாயகமும் பரந்து பட்ட ஐக்கியமும் அடிப்படையாகக் கொண்ட வெகுஜனப் போராட்டப்பாதையில் பயணிப்பதற்கான அரசியல் சூழல் தோற்றுவிக்கப்படுவது தவிர்க்கவியலாத ஒன்றாகும்.

# ஐக்கியப்பட்ட வெகுஜனத்தளம் இல்லாமல் விடுதலைப் போராட்டம் வெற்றிபெறாது

பாடுதான். அதுவே நாட்டின் முற்போக்கான சக்திகளுடன் இணையத் தடையாயும் இருந்தது. இந்த மனோ பாவம் போராளி இயங்கங்களையும் வெவ்வேறு அளவுகளில் ஊடுருவியிருந்தது.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தோரும் அதிகளவில் போராட்டத்தினுள் இழுக்கப்பட்ட நிலையில் சாதி பற்றியும் சமூக நீதி பற்றியும் ஒப்புக்குப் பேசப்பட்டாலும் போராட்டம் என்றுமே ஒரு மக்கள் இயக்கம் என்ற பார்வையில் விருத்தி பெறவில்லை. அந்நிய நாட்டு உதவி அந்நியக் குறுக்கீடு என்பன பற்றிய எதிர்பார்ப்புக்கள் இன்னமும் தமிழர் மத்தியில் வளர்க்கப்பட்டு

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைக் கையாளத் தொடங்கி விட்டன. அவைபற்றிய மாக்சிய- லெனினியவாதிகளது எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டன. கருணா அணியின் உருவாக்கம் மட்டுமன்றிக் கவனிப்பில் எடுக்கப்படாத அக முரண்பாடுகளும் கிழக்கின் பெரும் பகுதியில் விடுதலைப் புலிகளது செல்வாக்கிற்கும் கேடு செய்தன. கருணா அணியை மோதலில் முறியடித்தவுடன் பிரச்சனை சரியாகி விட்டது என்கிற மனோபாவமே தமிழ்த் தேசியவாதிகளிடையே காணப்பட்டது. ஆனால் அரசாங்கமும் ராணு வமும் அந்நிய ஆதிக்கவாதிகளும் வேறு விதமான காய் நகர்த்தல்களில் இறங்கினர். அதன் விளைவுக ளைக்

---

**பண்டாரிக் குள**

**2ம் பக்க தொடர்ச்சி**

தட்டுப்பாடு ஏற்பட்டு பண்டாரிக்குளம், தோணிக்கல் மற்றும் உக்கிளாங்குளம் என்பன கடும் வரட்சியை எதிர் நோக்கும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. அது மட்டுமன்றி குள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு உற்சாகம் அளிக்கும் அரச அதிகாரிகளே மேடையில் வீற்றிருந்து தரிசனம் தரும் போது நாம் என்ன செய்வது என்று மக்கள் தமக்குள் கதைத்துக் கொண்டதையும் கேட்கமுடிந்தது. அதுமட்டு மன்றி வவுனியா பிரதேச செயலக அதிகாரி ஏன் குள அழிவு பற்றி இறுதி வரை ஒன்றுமே பேசவில்லை என்பது மக்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. வேறு கூட்டங்களில் அம்மணி பேசினால் அபிவிருத்தி அது இது என்று பிச்சு வாங்குவாரே! ஆனால் இங்கு கப்சிப்பென்று இருந்து விட்டார்.

மக்கள் விழிப்புடன் இருக்கும் வரை அரச அதிகாரிகளை மக்களுக்காக செயற்பட வைக்க முடியும். அது மட்டுமன்றி தொடர்ந்து மக்கள் தமது பிரச்சனைகளை ஐக்கியப்பட்டு முன்னெடுத்தால் யாரும் மக்களுக்கு எதிராகச் செயல்பட முடியாது. மக்கள் வெகுஜன ரீதியில் அமைப்பாகச் செயல்பட்டு தமது உரிமைகளை வென்றெடுக்க முன்வருவார்களானால் அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். அது மட்டுமன்றி அரச செயலகத்தின் உறுதிமொழி காற்றில் பறக்காது என்றும் பண்டாரிகுள மக்கள் நம்பு கின்றனர். அதனை காப்பாற்ற வேண்டியது அரச அதிபரினதும் செயலகத்தினதும் தார்மீகப் பொறுப்பும் கடமையும் ஆகும்.

அல்லாது விடின் "பேச்சு பல்லக்கு தம்பி கால் நடையாம்" என்பது போல் ஆகிவிடும் . அது மட்டுமன்றி பண்டாரிக்குள விடயம் சம்பந்தமாக தொடர்ந்து மக்கள் மத்தியில் விழிப்பு நடவடிக்கைகள் இருக்கும் பட்சத்தில் இக்குளம் அழிவிருந்து பாதுகாக்கப்படுவது உறுதி. இதனை முன்னு தரணமாகக் கொண்டு ஏனைய குளங்களையும் அழிவிலிருந்து பாது காக்க முடியும். அனைத்துமே மக்களுக்காவே தான். "மக்கள், மக்கள் மட்டுமே வாரலாற்றின் உந்துசக்தி" என்ப தற்கிணங்க தொடர்ந்து செயற்படுவோம். பண்டாரிக் குளத்தை பாதுகாத்து வெற்றி பெறு வோம்.

**வவுனியா புதியபூமி நிருபர்**

# சமூகமும் பண்பாடும் 17

பேராசிரியர் சி.சிவசேகரம்

# அலங்காரமும் அணிகலன்களும்

**மனிதர் உடைகளை அணிவதற்கான** தேவை இயற்கையான தட்பவெப்ப மாறுதல்களினின்று உடலைப் பாதுகாக்க மட்டுமல்ல. உடைகள் தேவையற்ற சுற்றாடல்களிலும் மனிதர் உடைகளை அணிகின்றனர். உடைகளின் பொதுவான வடிவம் சமூக நடைமுறை சார்ந்தது எனினும் உடைகட்கு ஒரு அலங்காரப் பரிமாணம் உண்டு. அலங்கார உடைகட்கு முன்பிருந்தே பலவேறு வகையான அணிகலன்கள் அலங்கார, நோக்கத்திற்காக அணியப்பட்டு வந்துள்ளன. ஹரப்பா உட்படப் பழைய நாகரிகங்களிற் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்களில் ஆடையற்ற வெற்றுடம்பில் அணிகலன்களைக் காணலாம். இவ்வாறான அணிகலன்கள் உலோகங்கள் பரவலான புழக்கத்திற்கு வரமுன்பிருந்தே பாவனையிலிருந்து வந்ததற்கான சான்றுகள் உள்ளன.

ஒரு சமூகத்தில் உள்ளவர்கள் அணிகிற நகைகளின் தன்மை, அளவு என்பன சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகின்றன. அதைவிட அவை நேரத்திற்கும் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுகின்றன. பால் அடிப்படையிலான வேறுபாடுகள் போகச் சமூக ஏற்றத்தாழ்வுகள் (பொதுவாகப் பொருள் வசதியும் புறக்கணிக்க இயலாத ளவுக்கு சாதியும் சமயமும் பிற அடையாளங்களும்) அணிகலன்களின் தன்மையைத் தீர்மானிக்கின்றன. ஒவ்வொரு வகையான அணிகலனதும் வருகைக்கும் அதன் சமூக அளவிலான ஏற்புடைமைக்கும் பலவேறு காரணங்கள் இருக்கலாம். உடல் உறுப்புக்களை விகாரப் படுத்துகிற விதமான அணிகலன்கள் பல உள்ளன. உதாரணமாக கழுத்தை நீளமாக்குகிற நோக்கத்துடன் கழுத்தில் அடுக்கப்படுகிற வளையங்கள் மியான்மார் (பர்மா) தாய் லாந்து எல்லைப் பகுதியில் வாழும் கயான் இனத்தவரால் அண்மை வரை அணியப்பட்டு வந்துள்ளன. தமிழர் உட்பட்ட தென்னாசியச் சமூகங்களில் காதின் கீழ்ப்பகுதியில் துளையிட்டுக் கனமான தோடுகளை அணியும் வழக்கம் இப்போது குறைவு எனினும் முற்றாக ஒழியவில்லை. காதுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட துளைகளை இட்டு அணிகலன்களால் அலங்கரிப்பது இன்னமும் பல தென்னா சியச் சமூகங்களில் வழமையாகவே உள்ளது.

வெள்ளியும் பொன்னும் புழக்கத்திற்கு வந்த பின்பு வெள்ளியாலும் பொன்னாலும் ஆன அணிகலன்களை அணிவது ஓரளவு வசதியுடையோரிடையே பரவலாயிற்று. பழங்குடி

> **ஆடை அணிகலன்களால் பெண்கள் ஆண்களின் அந்தஸ்திற்கும் பாலியல் நுகர்வுக்கும் உரிய அடிமைகளாக் கப்படுகிறார்கள்**

களிடையிலும் நாகரிகத்தின் தொடக்க நிலையிலிருந்த சமுதாயங்களிலும் அணிகலன்கள் அலங்காரத்திற்காகவே பயன்பட்டன. அணிகலன்களைப் புனைவதற்குத் தேவையான மூலப் பொருட்கள் சமூகத்தின் சுற்றுச் சூழலில் அல்லது எளிதாக எட்டக் கூடிய தொலைவில் இருந்தன. வணிகத்தின் விருத்தியோடு இவ்வாறான நிலைமைகள் மாறத் தொடங்கின. எனினும் தென்னாசியச் சூழலில் பொன் அல்லது வெள்ளி இரண்டும் இரத்தினக் கற்களும் முத்தும் பவளமுங் கொண்டு அலங்கார வேலைப்பாடுகளுடைய அணிகலன்களைப் புனைந்து இரண்டாயிரம் ஆண்டுகட்கும் முன்னரே தொடங்கியிருப்பினும், பெறுமதியில் உயர்ந்த, பொன்னாலான அணிகலன்களை அணியும் வசதி பொருள் படைத்தோருக்கே உரியதாயிற்று. இவ்வாறு அணிகலன்கள் வர்க்க வேறுபாட்டினதும் சமுதாயத்தில் ஒருவரது தகுதியினதும் அடையாளங்களாயின. தென்னாசியச் சூழலில், சாதிய ஏற்றத் தாழ்வுகள் காரணமாக சில வகையான அணிகலன்கள் குறிப்பிட்ட சமூகங்களைச் சேர்ந்தோரே அணிய உகந்தன என்று வரையறுக்கப்பட்டன. உதாரணமாகச் சில தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் பல கால மாகத் தாலி அணிய அனுமதிக்கப்படவில்லை.

இவ்வாறான வேறுபாடுகள் நிலவுடைமைச் சமுதாயத்தில் தமது உச்சத்தை எட்டின. நிலவுடைமைச் சமூகத்தின் உற்பத்தி உறவுகள் சிதைந்த பின்னரும் எஞ்சிய பல நிலவுடைமைச் சமூக விழுமியங்களுள் அணிகலன்கள் பற்றிய சமூகப் பார்வை யும் உள்ளடங்கும். கடந்த ஒரு நூற்றாண்டில் தென் னாசியாவில் நகரங்கள் விருத்தியையும் உற்பத்தி முறையிலும் உற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஒட்டி அணிகலன்களின் அமைப்பிலும் பயன்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் அடிப்படையான சில சிந்தனைகளின் தாக்கம் இன்னமும் தொடர்கிறது. பெண்ணை ஆணின் நுகர் பொருளாகக் காணுவது அணிகலன்கள் தொடர்பாகக் குறிப்பான முக்கியத்துவம் பெறுகிறது. திருமணத்தின் போது மணப்பெண் அலங்கரிக்கப்படுகிற விதத்தை ஆணின் அலங்காரத்துடன் ஒப்பிட்டால் இவ்வேறுபாடு தெரியும். திருமணங்கள் போன்ற குடு ம்ப நிகழ்வுகளிலும் கோவிற் திருவிழாக்கள் உட்பட்ட பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளும் போது அணிகலன்களுடன் தோன்றுமாறு பெண்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். நகரச் சூழல் சில மாற்றங்களைப் புகுத்தினாலும் அடிப்படை யான சிந்தனை இன்னமும் தொடர்கிறது எனலாம். புலப்பெயர்வும் அந்நியச் சூழலும் உண்மையில் இலங்கையில் நகரமயமாதல் ஏற்படுத்திய தாக்கங்கட்கு எதிர்மாறான தாக்கத்தையே ஏற்படுத்தின.

அணிகலன்கள் ஒருவரது செல்வச் செழிப்பின் அடையாளமாகக் காணப்பட்டாலும் மேலை முதலாளியத் தின் வருகையையடுத்துத் தென்னாசியாவில் ஆண்கள் அணி கலன்களைப் பூணுவது குறைந்து விட்டது. நகரச் சூழல் களில் ஆண்கள் அணிகலன்களை மிகக் குறைந்த அளவிலேயே பூணுகின்றனர். கிராமங்களிற் கூட இப் போக்கை நாம் இன்று காணலாம். எனினும் பெண்ணைப் பொறுத்த வரை சீதனம் அல்லது சீர்வரிசை என்ற பேரில் மணப் பெண்ணின் குடும்பத்தினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றனவற்றில் பெண்ணுடைய நகைகளின் பெறுமதியும் உள்ளடங்கும். இவ்விடயத்தில் இலங்கையின் தமிழ்ச் சமூகத்தின் நிலை சிங்கள முஸ்லிம் சமூகங்களின் நிலையை விட வருந்தத் தக்கதாகவே உள்ளது.

சமூக அந்தஸ்தினராக இல்லாவிடினும் செல்வச் செழிப்பின் வெளிப்பாடாக ஒருவர் அணியும் அணிகலன்களின் பெறுமதி அமைகிறபோது, அணிகலன்களின் அடிப்படையான நோக்கத்தை முறியடித்து, அதாவது ஒருவரை அழகு செய்வதற்காக அணிகலன்கள் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, அணிகலன்களது பெறுமதியைப் பிரகடனஞ் செய்வதற்கான ஒரு கருவியாக அல்லது புடைவைக் கடைகளில் நிற்கிற பொம்மை போல பெண் மாற்றப்படுகிறார். இவ்வாறான அடிமைத் தனத்திலிருந்து பெண்களை விடுவிக்க வேண்டுமாயின் பெண்கள் இவ்வாறான விடயங்கள் பற்றிக் கூடுதலாகப் பேச வேண்டும்.

இன்னொருபுறம் அணிகலன்கள் பற்றிய போட்டி மனப்பாங்கு தோன்றி ஒரு சமூக நோயாகப் பரவியுள்ளது. இவ் விதமான போட்டி திருமண விழாக்களில் விரயமாகிற வீண் ஆடம்பரச் செலவினங்களை விடக் கேவலமான வடிவங்களைக் கண்டுள்ளது. மணப்பெண்ணின் தாலிக் கொடியின் நிறை எத்தனை பவுண் என்பதிற் கூடப் புலம் பெயர்ந்த தமிழரிடையே போட்டா போட்டி உள்ளது என்றால், நாம் பண்பாட்டில் எவ்வளவு தாழ்ந்திருக்கிறோம் என்று யோசிக்க வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் தமிழகத்தையும் கேரளத்தையும் பார்ப்பது நல்லது. கேரளத்தில் திருமணச் சடங்குகள் சிங்களவர்களது சடங்குகள் போல எளியவை. தமிழகத்தில் ஆடம்பரச் செலவுகள் மத்தியிலும் மஞ்சள் கயிறு என்பது பொன்னை விட உயர்வான இடத்தில் இருக்கிறது. இதற்கான காரணங்கள் எவை யாயினும், தாலி என்பது ஒரு அடையாளச் சின்னம் என்றளவில் அதன் முக்கியத்துவத்தைப் பொன்னாலான தாலிக் கொடியின் பெறுமதி தாழ்த்தாமலிருப்பது மெச்சத்தக்கது.

பொருளாலும் சமூக மதிப்பாலும் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்ததன் காரணமாக மறுக்கப்பட்ட பல விடயங்கள் உள்ளன. வெல்லப்பட வேண்டியவை இன்னமும் உள் ளன. புலப்பெயர்வு அவ்வாறான வெற்றிகளுக் கான தேவை இல்லாமல் கையிற் பணப் புழக்கத்தைக் கொண்டு வருகிற போது தமக்கு மறுக்கப்பட்டதை ஈடு செய்கிறோம் என்ற நோக்கில் நடக்கிற ஆடம்பரமான அலங்கோலங்களுள் மேற் குறிப்பிட்ட விதமான போட்டிகளும் உள்ளடங்கும்.

புலம்பெயர்ந்த தமிழரிற் பெரும்பாலானவர்கள் இலங்கைக்கு மீளுவது ஐயம். அவர்கள் தங்களதாக்கிக் கொண்ட புதிய சூழலில் தாமும் தமது இளைய தலைமுறையினரும் அவர்கள் வழி வந்தோரும் வாழப் போகிறதை மறக்கலாகாது. பண்பாடு, மொழி, சமயம் போன்ற அடையாளங்கள் தொடரலாம், தொடராமலும் போகலாம். ஆனால் அந்த அடையாளங்களுள் பேணத் தக்கவை எவை தகாதவை எவை என்பது பற்றிய தெளிவு அவ சியம். ஆண்-பெண் சமத்துவம் இல்லாமல் தமிழ்ச் சமூகம் உயர்வு பெற இயலாது. அது பற்றிய விழிப்புடன் நமது பண்பாட்டிலிருந்து

> **புலம் பெயர்ந்த நாடுகளில் ஆடை அணிகலன்களில் மிகப் பெரும் போட்டி இடம் பெற்று வருகிறது. ஆடம்பர அந்தஸ்து தமிழர் பண்பாடு எனப்படுகிறது.**

உயர்ந்த விழுமியங்களை அடையாளங் கண்டு அவற்றின் அடிப்படையில் பிற சமூகத்தினருடன் சமத்துவமாகவும் தனித்துவமாகவும் வாழ இயலும். வாழவும் வேண்டும்.

இலங்கையில் எனினும் புலம்பெயர்ந்த சூழல்களில் எனினும் தமிழ்ச் சமூகத்தின் உயர்வு தனிமனித அடிப்படையிலான போட்டிகளை விட ஒத்துழைப்பின் மீதே தங்கியுள்ளது. போட்டி தேவை என்று நினைக்கிறவர்கள் இருக்கின்றனர். அது எது பற்றிய போட்டி என்ன நோக்கிலான போட்டி என்பது பற்றித் தெளிவாக இருப்பது நல்லது. நிச்சயமாகப் பொன்னாலான அணிகலன்கள் நமது போட்டிக்குரிய விடயமானால் நாம் பிற சமூகத்தினருடன் போட்டியிட வேண்டிய இடங்களி லெல்லாம் தோற்பதற்கே வழி செய்கிறவர்களாவோம்.

நம்மைச் சூழ உள்ள சமூகத்தினரிடமிருந்து கற்க வேண்டிய நல்ல விடயங்களைப் பற்றி விசாரிப்பதும் உலகின் பலவேறு பண்பாடுகளிலிருந்து பயனுள்ளவற்றை உள் வாங்குவதும் நமது சமூக உயர்வுக்கும் பண்பாட்டின் உயர்வுக்கும் மிகவும் உதவும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# தொழிலதிபர்களே துறவிகளாக! அடிமைத்தனமே ஆன்மீகமாக!

**இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம்ஸ்** என்ற வெள்ளையர் இலண்டனில் துறைமுக நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து தரும் ஒரு தரகு நிறுவனத்தை நடத்தி வந்தார். ஓரிரு வருடங்களாக தொழிலில் நட்டத்தைச் சந்தித்து வந்த வில்லியம்ஸ் அதிலிருந்து மீள தனது நண்பரொரு வரின் ஆலோசனைப்படி கேரளாவிலிருக்கும் ஒரு சாமி யாரைச் சந்திக்க முடிவு செய்கிறார். ஆலோசனை தந்த வர் இலண்டனில் வாழும் ஒரு என்.ஆர்.ஐ. மலையாளி. கேரளாவின் கோட்டக்கல்லில் சிவா சிரிங்க ஆஸ் ரமத்தை நடத்தி வந்த ஞானசைதன்யா என்ற சாமியாரை வில்லிய ம்ஸ் குடும்பத்துடன் சந்திக்கிறார்.

வில்லியம்ஸின் தொழில் சிக்கலுக்கு ஞானசைதன்யாவின் ஆன்மீகத் தீர்வு என்ன? வில்லியம்ஸின் மகள் அமரந்தா முற்பிறப்பில் சைதன்யாவின் மனைவியாக இருந்தவளாம். இப்பிறப்பிலும் அந்த உறவு தொடர்ந்தால் தான் வில்லியம் ஸின் பிரச்சினை தீருமாம். இதை அந்த வெள்ளையர் ஏற்றுக்கொண்டு தனது மகளை சாமியாருக்கு மணமுடிக்கிறார். சீர் வரிசையாகப் பதினைந்து இலட்சம் பணமும், டாடா சஃபாரி காரும் கொடுக்கப்படுகிறது. நாலைந்து மாதம் குடும்பம் நடத்திய பிறகு சாமியாரின் சித்திரவதை தாங்காமல் அந்த வெள்ளைக்காரப் பெண்மணி ஆசிரமத்தி லிருந்து தப்பித் போலீசாரிடம் புகார் கொடுக்க தற்போது சாமியார் சிறையில்!

சாமியாரின் பூர்வாசிரமப் பெருமைகள் என்ன? சுதா கரன் என்ற பெயர் கொண்ட அந்தச் சாமியார் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று மூவரைக் கொன்ற ஒரு கொலை வழக்கில் பதின்னான்கா ண்டுகள் சிறையிலிருந்து பின்னர் ஆசிரமம் ஆரம் பித்து ஞானசைதன்யாவாக அவதாரம் எடுத்தவர்.

வில்லியம்ஸின் கதையை நம்ப முடிகிறதா? சில ஆயிரம் மைல்களுக்கு அப்பால் நாகரீக உலகில் வாழும் ஒரு பணக்கார வெள்ளையரது குடும்பம் ஒரு பக்கா கிரிமினலிடம் ஏமாந்ததை என்ன வென்று சொல்ல? இதை வெறும் முட்டாள்தனம் என்று மட்டும் புரிந்து கொள்ளக் கூடாது.

மாறிவரும் வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் வாழ்க் கை குறித்து மக்கள் கொண்டிருக்கும் மாறாத மயக்கத்தை இணைத்து 'ஆன்மீகத்தை அண்டி னால் உடனடிப் பயன் கிடைக்கும்' என்று நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் நம்பிக்கையூட்டும்படி மக்களிடம் உபதேசிப்பதுதான் காலத்திற்கேற்பப் புதுப்பிக்கப்படும் மதத் தின் இரகசியம். மதத்தைச் சுரண்டல் லாட்டரி போல மாற்றியிருப்பது தான் இன்றைய நவீன சாமியார்களின் மிக முக்கியமான சாதனை

**கோடிகளில் புரளும் ஆன்மீக வர்த்தகம்**

இந்தியாவில் உலகமயமாக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இருபது ஆண்டுகளில் தரகு முதலாளிகள் மட்டும் செழிக்க வில்லை. பல பணக்காரச் சாமியார்களும் தலை யெடுத்திருக்கிறார்கள். இவர்களின் வர்த்தக மதிப்பு நீங் கள் எதிர்பாராத அளவிலானது.

பெங்களுருக்கு அருகில் ஒரு மலையை அரசிடமிருந்து 99 வருட குத்தகைக்கு எடுத்து 'வாழும் கலை' யைக் கட்டணம் வாங்கிக் கொண்டு கற்றுக்கொடுக்கும் ஸ்ரீஸ்ரீ இரவிசங்கரின் வருடாந்திர வர்த்தக மதிப்பு 400 கோடி. டெல்லியில் ஆசிரமம் வைத்து நடத்தும் ஆஸ்ராம் பாபுவின் ஆண்டு வர்த்தகம் 350 கோடி. நாடு முழுவதும் தியான நிலையங்களை நடத்திவரும் சுதன்ஷு மகராஜூக்கு 300 கோடி.

பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் முதலானவ ற்றை வர்த்தக நோக்கில் நடத்தி வரும் மாதா அமிர்தா னந்த மாயியின் ஓராண்டு வரவு செலவு 400 கோடி. வட இந்தியாவில் யோக சிகிச்சை மற்றும் மருந்துகளை விற்பனை செய்யும் பாபா ராம்தேவின் வணிகம் 400 கோடி. பணக்காரர்களுக்காக மட்டும் சில ஆயிரங்களைக் கட்ட ணமாக வாங்கிக் கொண்டு அருளுரை கூட்டங்கள் நடத் தும் முராரிபாவுக்கு 150 கோடி. இவையெல்லாம் ஓராண் டுக்குரிய வரவு செலவு மட்டும்தான். இவர்களின் சொத்து மதிப்பு இதனினும் பல மடங்கு அதிகம். எடுத்துக் காட்டாக அமிர்தானந்த மாயியின் சொத்து மதிப்பு மட்டும் 1200 கோடியைத் தாண்டுகிறது.

பங்காரு சாமியார் கல்லூரிகள் மருத்துவமனைகள், ஓட்ட ல்கள், பல பினாமி தொழில்கள் போக மேல்மருவத்தூர் எனும் நகரையே தனக்காக உருவாக்கிக் கொண்டவர். ஜெயந்திரனின் சங்கர மடம் மற்றும் சாயிபாபா ஆசிரமங் களின் மதிப்போ சில ஆயிரம் கோடிகளைத் தாண்டும் என்கி றார்கள். மகரிஷி மகேஷ் யோகி ஆழ்நிலை தியான மையங்கள். ரஜினீஷின் ஆசிரமம், ஹரே ராமா ஹரே கிருஷ்ணா கிளை கள், வேதாத்திரி மகரிஷியின் குண்டலினி மையங்கள், ஜக்கிவாசுதேவ், பிரார்த்தனையிலேயே 'குண மாக்கி' நற்செய் திக் கூட்டங்கள் நடத்தும் டி.ஜி.எஸ் தினகரன் முதலானோரும் மேற்கண்ட கோடீசுவர சாமியா ர்களின் பட்டியலில் உள்ளவ ர்கள்தான்.

அமெரிக்காவில் வெள்ளையர்களுக்கு ஆழ்நிலை தியா னமும் யோகாசனமும் கற்றுத்தரும் தீபக் தாக்கூர், இந்தி யாவின் ஆன்மீகப் 'பெருமையை' மேற்குலகில் பல மில்லி யன் டாலர்களுக்கு விற்பனை செய்து ஒரே நேரத்தில் ஆன்மீகவாதி யாகவும், இளம் தலைமுறையின் தொழில் முனைவராகவும்



விளங்குகிறார்.

ஹரித்வார் நகரில் பாபா ராம் தேவின் யோக மையத்தில் உறுப்பினராக்குவதற்கு கட்டணங்களை எழுதி மிகப் பெரிய விளம்பரப் பலகையை வைத்திருக்கிறார்கள். சாதாரண உறுப் பினர் கட்டணம் ரூபாய் 11,000 மதிப்பிற்குரிய உறுப்பினர் கட்டணம் ரூ. 21, 000 சிறப்பு உறுப்பினர் கட்டணம் ரூ. 51, 000 வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் ரூ. 1, 00, 000 முன்பதிவு உறுப்பினர் கட்டணம் 2.51 இலட்சம், நிறுவன உறுப்பினர் கட்டணம் 5 இலட்சம் என்று வெளிப்படையாக ஒரு நகைக் கடை விளம்பரம் போல் கூவி அழைக்கிறார்கள்.

"எல்லாவற்றையும் இலவசமாக செய்வோமென்று நாங்கள் வாக்குறுதி எதும் தரவில்லை. அது சாத்தியமில்லை. வணிக ரீதியில் தான் நாங்கள் இயங்க முடியும்" என்று ஒரு தொலைக் காட்சி நேர்காணலில் ஒத்துக் கொள்கிறார் பாபா ராம்தேவ். "நாங்கள் ஒரு பன்னாட்டு நிறுவனம் போலத் தான் இயங்கமுடியும் எங்களை நாடி வரும் பக்தர்க ளுக்குரிய தரமான வசதிகளை நாங்கள் செய்ய வேண்டி யிருக்கிறது." என்று வர்த்தகரீதியாகச் செயல்படுவதை நியாயப்படுத்து கிறார் ரவி சங்கர்.

**வாழ்வின் நெருக்கடி சாமியார்களின் வளர்ச்சிப்படி**

ஆன்மீக குருஜீக்களின் ஆசிரமங்கள் பன்னாட்டு நிறுவன ங்களைப் போல பிரம்மாண்டமாக வளர்ந்திருப்பது எப்படிச் சாத்தியமயிற்று? பெரும்பான்மை உழைக்கும் மக்களின் வாழ்க்கையை மெல்லவும் விரைவாகவும் இடத்திற்கேற்ப அரித்தும் அழித்தும் வரும் புதிய பொருளாதாரக் கொள்கை நடுத்தர மக்களுக்கு சில வழிகளில் தற்காலிகமாகவேனும் முன்னேற்றத்தைக் காட்டி வருகிறது. ஆயினும் இது ஒரு பாதிதான். மறு பாதியில் அந்த முன்னேற்றம் வாழ்க்கையில் புதுப்புதுச் சிக்கல்களை அன்றாடம் உருவாக்கிக் கொண் டேயிருக்கிறது.

செலவு பிடிக்கும் உயர் கல்வி மருத்துவ மற்றும் காப்பீட்டுச் செலவுகள் உயர்ந்து வரும் வீட்டுக்கடன் வட்டி வாழ்க் கைத்தரத்திற்காக வாங்க வேண்டிய வாகனக் கடன்கள் எல்லாம் சேர்ந்து அச்சுறுத்துகின்றன. ஒரு நாளில் நடை பெறும் பங்குச்சந்தையின் குறியீட்டெண் வீழ்ச்சியோ ரியல் எஸ்டேட்டின் மதிப்புச் சரிவோ இலட்சக் கணக்கான நடுத் தர வர்க்கத்தினரின் சில ஆண்டு நிம்மதியைக் குலைக்க போதுமானது.

ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், ஐ.ஏ.எஸ் மருத்துவ- பொறியியல் படிப்புகள் அரசு பதவிகள், வங்கி வேலைகள் தனியார் நிறுவன உயர் பதவிகள், அதி வருவாய் கிடைக்கும் கணினித்துறையின் முக்கியப் பதவிகள் முதலானவை எல்லாருக்கும் கிடைத்து விடுவதில்லை. ஆயிரக்கணக்கான துணை இயக்குநர்கள்- துணை நடிகர்கள் மத்தியில் ஒரு சிலருக்குத்தான் வெள் ளித்திரையில் கடாட்சம் கிடைக்கும்.

எனினும் அனைவருக்குள்ளும் 'வாழ்வின் உச்சத்தைத் தொட்டுவிட முடியும்' என்ற மாயை நீக்கமற நிரப்பப்பட்டிரு க்கிறது. இந்த இலக்கு உருவாக்கும் ஆசை. ஆசை ஏற்படுத்தும் போட்டி, போட்டிக்குப் பின்னான தோல்வி..... இறுதியில் சித்தத்தின் சமநிலை சீர் குலைகிறது. கிடைக் காத வாழ்க்கை மாயமானாக ஓடுகிறது. கைக்கெட்டிய வாழ்க்கையோ கறிக்கடையைச் சுற்றி வரும் நாய்போல ஏக்கத்தில் ஊழலகிறது.

சமூக இயக்கத்திற்கான உற்சாகத்தைத் தரவேண்டிய ஓய்வு பரபரப்பாய் பசி அடக்கி பிணியெழுப்பும் நொறுக்கு தீனியாகியிருக்கிறது. வாழ்வின் முன்னேற்றத்தை பண் பாட்டை கனவு கண்டு நனவில் படைக்கத் தூண்ட வேண் டிய பொழுது போக்கு என்பது வக்கிரத்தின் வடிகாலாகப் பரிணமித்திருக்கிறது. மனிதனின் உழைப்பு நேரத்தை மிச் சப் படுத்தி ஓய்வு தந்து அவனது ஆளுமை பரிணமிக்க உதவ வேண்டிய நவீனத் தொழில் நுட்பமோ எதிர்த் திசையில் பயன்படுகிறது. உழைப்பின் சுமையை சகிக்க வொண்ணா தவாறு கூட்டுகிறது.

நகர வாழ்க்கை, பரபரப்பு, வேகம், போட்டி, பொறா மை, சதி, வஞ்சகம், வெறி, வக்கிரம், இய லாமை, பதட்டம், மன அழுத்தம், மனச்சிதைவு இரத்த அழுத்தம், முது மையில் வர வேண்டிய சர்க்கரை நோயும்- மாரடைப்பும் இளமையையே காவு கேட் பது......... என முடிவேயில்லாமல் அலைக் கழிக்கிற வாழ்க்கை என்ற இந்த நச்சுச் சூழல் வாழ்வின் பிரச்சினை சிந்தனையில் சீர் குலைந்து உடல் நலிவாய் வெளிப்பட்டு 'என்னை மீட்பார் யாருமில் லையா' என்று புலம்புகிறது. குமுறுகிறது. அழுகி றது வெடிக்கிறது. சில வேளை தற்கொலை யிலோ வேறு வகை வன்முறை களிலோ முடிகி றது.

இருப்பினும் ஆகப் பெரும்பான்மையினர் இந்த விஷச்சூழலி ருந்து சிறிதாகவோ, பெரிதாகவோ பணம் செலவழித்து கடைத்தேறிவிட முடியும் என்ற நம்பிக்கையை நவீன ஆன் மீக ஆளும் வர்க்கம் பரப்பி வருகிறது. நடப்பில் சாதாரண மாகவும், கனவில் அசாதாரணமாகவும் வாழும் நடுத்தர வர்க்கம் இந்த ஆன்மீகச் சந்தையின் வலையில் சிக்கிக் கொள்வதற்குக் காத்திருக் கிறது. தங்களது தனித்துவத்தை மார்க்கெட் செய்துகொள்ளும் திறமை மட்டுமே ஆன்மீக வாதிகளுக்குத் தேவைப்படுகிறது. அவர்கள் தனிந பர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் காட்ட வேண்டி யதில்லை.

**சாமியார்களின் தனித்துவம் சோப்புக்கட்டிகள் பலவிதம்!**

மஹரிஷி மகேஷ் யோகியின் சீடராக இருந்த ரவிசங்கர் பிரிந்து வந்து 'வாழும் கலை' என்ற கவர்ச்சிகரமான 'கான்செப்ட்'ஐ உருவாக்கி ஸ்ரீஸ்ரீரவிம் சங்கராக தனது பேரரசைப் பரவச்செய்தார். தியான, யோகம், அறிவுத் திறன் வகுப்புக்கள் முதலானவற்றைக் கலந்து ஒரு புதிய கட்டமைப்பில் பன்னாட்டு நிறுவனங்கள் விளம்பரப்படுத்தும் புதிய சோப்புக் கட்டி போல அறிமுகப்படுத்தி வெற்றி பெற்றார். இவரது குருவான மரித்துப் போன மகேஷ் யோகி மேலை நாடுகளில் மணிக்கு சில ஆயிரங்கள் டாலர் கட்டணத்தில் ஆழ்நிலை தியானத்தைக் கற்றுக் கொடுத்து பிரபலமானார். இதே சரக்கை ஹாலிவுட் நட்சத்திரங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவன நிர்வாகிக ளுக்கு ஏற்ப விற்று, அவர்கள் மூலம் புகழ் பெற்றார் தீபக் தாக்கூர்.

ஒத்த பெயர் கொண்ட ஷிர்டி சாயி பாபாவின் மகிமையைப் பயன்படுத்திக் கொண்டு பஜனைகள் மூலமும், பல நூறு கோடி நன்கொடையின் சிறு பகுதியை தர்ம காரியங்கள் செய்தும் முக்கியமாக மாஜிக் வழியாக லிங்கங்கள், மோதிர ங்கள், நகைகளை வினியோகித்தும் பெயர் பெற்றார் சாயி பாபா. இவரது சிறிய நகல்தான் தற்போது கடலூர் சிறையில் கம்பி எண்ணிக்கொண்டிருக்கும் பிரேமானந்தா.

சாயி பாபாவின் சத்ய நகர் ஆசிரமத்தில் சில ஆண்டுகள் தங்கி பின்பு கேரளாவில் தனி ஆசிரமம் ஆரம்பித்தவர் அமிர்தானந்த மாயி, மற்ற குருமார்களைப் போல வாய் சாமர்த்தியம் இல்லாத மாயியை அம்மன் போல அலங் காரம் செய்து பக்தர்களைக் கட்டிப் பிடிக்கும் டெக்னிக் கைப் பயன்படுத்திப் பிரபலமடைய வைத்தார்கள். கடந்த 30 ஆண்டுகளில் மாயி அரவணைப்பால் 'ஆன்மீக ரீசா ர்ஜ்' செய்யப்பட்ட பக்தர்களின் எண்ணிக்கை இரண்டு கோடியாம்.

அடுத்த இதழில் தொடரும்

நன்றி
புதிய கலாச்சாரம் செப்ரெம்பர் இதழ்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 3

# இன அடையாளம் அரசியலாக முன்னர்

**சிங்கள, பௌத்த, சைவ அடையாளங்கள்** கிறஸ்துவ மத ஆதிக்கத்திற்கெதிராகவும் மத மாற்றத்திற்கெதிராகவும் முன்னெடுக்கப்பட்ட போதும் அவை முழுச் சிங்கள பவுத்த சமூகத்தையுமோ முழுத் தமிழ்ச் சைவச் சமூகத்தையுமோ ஒன்றிணைத்து ஒரு இன அடையாளமாக விருத்தி செய்யும் வல்லமையுடையவனாக இருக்கவில்லை. ஏனெனில் வர்க்க அடையாளத்திற்கும் மேலாகச் சாதி அடையாளம் வலுவானதாக இருந்தது. முஸ்லிம்களுக்குச் சாதி அடையாளம் என ஒன்று இல்லை. என்றாலும் தீவு முழுவதும் பரவி வாழ்ந்த முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாக அடையாளப்படுத்தி வளர்த்தெடுக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இல்லாமைக்கு நகர் சார்ந்த முஸ்லிம் சமூகத்தினரின் வாழ்க்கை குறை குறிப்பாக வசதிபடைத்தவர்களது வர்க்க நலன்கள் அவர்களை கிராமப்புற முஸ்லிம்களிடமிருந்து வேறுபடுத்தின. எவ்வாறாயினும் முஸ்லிம்கட்கான இன அடையாளத்தை முன்னெடுப்பதில் சித்தி லெப்பைக்கு தமிழ், சிங்களத் தலைவர்களின் மனத் தடைகள் போன்று இருக்கவில்லை. அவர் அழுத்தம் வைத்த விடயங்களில் ஒன்று உலகு தழுவிய முஸ்லிம் நலன்களுடன் இலங்கை முஸ்லிம்கள் தமது நலன்களைச் சேர்த்துக் கருத வேண்டும் என்கிற மத அடிப்படையிலான நோக்கு. அதிலும் முக்கியமானது முஸ்லிம் சமூகத்தின் கல்விக்கு அவர் வழங்கிய முக்கியத்துவம். அவருடைய முயற்சிகள் சிங்கள, தமிழ் சமூகத்தினரிடையே எடுக்கப்பட்ட கல்வி முயற்சிகளின் அளவுக்கு வெற்றி பெறாததற்கு நகர் சார்ந்த முஸ்லிம்கள் பெரிதும் வணிகர்களாகவே இருந்தது ஒரு முக்கிய காரணம். அவர்கள் வணிகத் தேவைக்கு அப்பாற்பட்ட கல்விக்கு அதிகம் முக்கியத்துவம் வழங்கவில்லை. முஸ்லிம்களின் கல்வித் தேவை பற்றிய அக்கறைகள் அன்று கொஞ்சம் மந்த வேகத்திலேயே வளர்ந்தது.

தமிழரிடையே யாழ்ப்பாணத்தில் இருந்த கல்வி வாய்ப்புக்களினளவிற்குப் பிற தமிழ்ப் பகுதிகளில் இல்லாததற்குப் பிரதேச வாரியான பொருளாதார வேறுபாடுகள் முக்கியமான பங்கு வகித்தன. யாழ் குடா நாட்டில் இருந்த கல்வி வசதிகள் எல்லாருக்கும் எட்டக் கூடியனவாக இருக்கவில்லை. சாதியத்தின் வலிமை பாடசாலை நவீன கல்விச் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினருக்கு முற்றாக மறுத்தது. பிறரிடையிலும் வசதி படைத்த உயர் சாதியினரது ஆதிக்கமே மிகுந்திருந்தது. எனினும் கத்தோலிக்க கிறிஸ்தவ பாடசாலைகள் சிலவற்றில் நெகிழ்வான ஒரு போக்கு இருந்தது. ஆயினும் சொத்துடைமை, கல்வி, உத்தியோகம் என்பனவற்றில் யாழ்ப்பாண உயர் வர்க்க வெள்ளாளரது ஆதிக்கம் ஏறத்தாழ முழுமையானதாகவே இருந்தது. இச் சமூகத்தினரது அரசியல் தலைமை கொழும்பிற் சென்று குடியேறிய வசதிபடைத்த வர்க்கத்தினரிடம் இருந்ததற்கான காரணம் கொழும்பு இலங்கையின் தலைநகரமாகவும் அதிகார மையமாகவும் இருந்தமையே.

சட்ட நிருணய சபைக்கு 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அதிகார பூர்வமற்ற உறுப்பினர்களாக இலங்கையரை நியமித்த போது இந் நியமனங்கள் கொலனிய நிருவாகத்தினர் பொறுக்கியெடுத்தவர்கட்கே கிடைத்தன. அவர்கள் உயர் வர்க்கப் பறங்கியர், சிங்கள கொவிகம, தமிழ் வேளாள மேட்டுக்குடியினராகவும் (விலக்காக ஒரு முறை வேளாளர் அல்லாத ஒரு தமிழ்க் கிறிஸ்துவ இடைநிலைச் சாதிக்குரியவராகவும்) இருந்தனர். முஸ்லிம் எவரும் நியமிக்கப்படவில்லை. தமிழரிடையே தனிப்பட்ட முறையில் போட்டி நிலவினாலும் அதிற் சாதி அடிப்படையிலான போட்டியிருக்கவில்லை. சிங்களவரிடையே மிகச் சிறுபான்மையாயிருந்த கராவே சமூகத்தினரிடையே பண வசதி படைத்த வணிகர்களும் புதிய முதலாளிமாரும் மட்டுமன்றி கல்வித் தகுதி பெற்றோருங் கூடுதலாக இருந்ததால் அவர்கள் கொவிகம சாதி மேட்டுக் குடிகளுடன் தமக்கான இடத்திற்காகப் போட்டியிட்டனர். எனினும் கொவிகம மேட்டுக் குடிச் செல்வாக்கின் வலிமை அதிகமாயிருந்ததால் அவர்களில் யாரும் நியமிக்கப்படவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் முதற் காற் பகுதி வரை சிங்களவரிடையே சாதி அடிப்படையிலான அரசியற் போட்டி இருந்த போதும், தமிழ்-சிங்களவர் என்ற அடிப்படையிலான முரண்பாடு முன்னணிக்கு வரவில்லை. இதற்கான காரணங்களை நாம் கூறலாம். விவசாயத் துறையில் பிரதேசங்கள் வெவ்வேறாக இருந்தன. வணிகத் துறையில் இலங்கைத் தமிழர் குறிப்பிடக் கூடிய எவ் வகையிலும் சிங்களவருக்குப் போட்டியாக இருக்கவில்லை. அரசாங்க உத்தியோகத்தைப் பொறுத்தவரை, தமிழரும் பறங்கியருமே ஆங்கிலங் கற்று அரசாங்க உத்தியோகங்களை நாடியளவுக்குச் சிங்களவரிடையில் இருக்கவில்லை. அதை விடவும், அரசாங்க உத்தியோகங்களின் தொகை அவற்றை நாடியோரினதை விடச் சிறிது அதிகமாகவே இருந்தது. இன்னொரு புறம் படித்த தமிழர்கள் மாலாயா போன்று பிற பிரித்தானிய கொலனிகளில் வேலை தேடிப் போயினர். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் குறையத் தொடங்கிய பின்னர் தமிழர் கூடுதலாக அரசாங்க உத்தியோகங்களை நாடிய போது பறங்கியருடனான போட்டி உருவானது.

போட்டி என்று கூறும் போது, இப் போட்டி குறிப்பிட்ட சமூகங்களின் ஓரளவு வசதி படைத்த பிரிவி னரிடையிலான போட்டியே என்பதை நாம் மறக் கலாகாது. வடக்கிற் தமிழரிடையே வேளாளரது ஆதிக்கம் வெறுமனே நிலத்தின் மீதான ஆதிக்கமாக மட்டுமன்றிச் சாதி அடிப் படையிலான படி நிலையின் அடிப்படையிலும், அதற்கும் மேலாக, பொருள் வசதியின் அடிப்படையில் சாதிப் பிரிவு ஒவ்வொன்றுக்குள்ளும், கல்வி, உத்தியோக வாய்ப்பக்களை மறுக்கும் அதிகாரத்தையும் பேணி வந்தது. இந்த வேளாள மேட்டுக் குடிமனோ பாவம் சாதியாற் தாழ்த்தப்பட்டவர்களையும் ரோமன் கத்தோலிக்கர்களையும் புரட்டஸ் தாந்து கிறிஸ்த வர்களையும் முஸ்லிம்களையும் மத அடிப்படையிலும் குடா நாட்டுக்கு வெளியே பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த அன்றை ய மட்டக்களப்பு மாவட்டத்தினரையும் மேற்குக் கரைப் பிரதேசத்தின் தமிழ்ச் சமூகங்களையும் தம்மிடமிருந்து விலக்கி நோக்குகிற பார்வையைக் கொண்டிருந்தது. தமிழ் வேளாள மேட்டுக் குடிகளில் மேற் கூறிய அணுகுமுறைக்கு அடிப்படையாகச் சாதியமே இருந்தது. சாதிக்குள் சாதி பார்க்கிற ஒரு சூழ்நி லையில் வேளாளரிடையேயும் வர்க்க, பொருள் வசதி போன்றவை. சாதிநிலை உயர்வு தாழ்வுகளாக அடையாளம் பெற்றன.. சிங்களவரிடையே கொவிகம மேட்டுக்குடியினரே கூடுதலாக கொலனிய நிருவாகத்தினருக்கு நெருக்கமாக இருந்து பலவேறு பட்டம் பதவிகளையும் பெருங் காணிச் சொந்தக்காரராயும் இருந்தனர். கண்டி இராச்சியம் 1815 வரை நின்று நிலைத்தமை சிங்களவரிடையே கண்டி இராச்சியத்திற்குட்பட்ட பகுதிகளில் நிலவுடைமைத் தன்மை வாய்ந்த சமூக ஏற்றத் தாழ்வுகட்கு ஒரு தளத்தை தக்க வைத்திருந்தது.

சிங்களவரிடையே கராவே சாதியினரிடையிலிருந்து சாராயக் குத்தகை மூலம் பெரும் பணக்காரரானவர்கள் பிற துறைகளிலும் புகுந்து தம்மை மிகவும் வலிய ஒரு அரசியல் சக்தி ஆக்கிக் கொண்டனர். கல்வித் துறையிலும் அவர்களது நாட்டம் இருந்தது. அவர்களோடு ஒப்பிடத்தக்க அளவில் டச்சுக்காரர் காலத்தில் சமூக அந்தஸ்தில் உயர்ந்திருந்து பின்பு சரிவு கண்ட சலாகம சாதி கள்ளிறக்கும் தொழிலுடன் தொடர்புடைய துராவ சாதி என்பன வற்றின் உயர் வர்க்கத்தினர் கல்வியிலும் சிறு வணிகத்திலும் ஈடுபட்டுத் தமது நிலையை மேம்படுத்தத் தொடங்கி விட்டனர். இவர்களது சனத்தொகை விகிதம் கொவிகமவினரை விடக் குறைவானது என்பதாலும் கொவிகம மேட்டுக் குடியினர் கொலனிய எசமானர்களுக்கு நீண்ட காலமாகவே உடன்பாடானவர்களாக இருந்ததாலும் இம் மூன்று சாதியினரிடையிலுமான கடும் போட்டியாலும் கொவிகம மேட்டுக் குடிகளின் அரசியல் ஆதிக்கம் வலுவாகவே இருந்தது. பத்கம போன்ற சமூகங்கள் கூடுதலாகக் கண்டி இராச்சியத்திற்குட்பட்ட தாழ்த்தப்பட்ட சாதியினராக இருந்தனர். அந்த நிலை 1948 சுதந்திரத்தின் பின்னரும் தொடர்ந்தது. வகுபம்புர சமூகமும் பிற்பட்ட நிலையில் இருந்தாலும் ஒரு பகுதியினர் வணிகத்தின் மூலம் சிறிது மேம்பாடுகள் கண்டனர். இப்படிப்பட்ட சமூகத்தினர் சிங்களச் சாதிய ஒடுக்குமுறைக்கும் கல்வி, உயர்தொழில் வாய்ப்புக்களின் மறுப்புக்கும் உட்பட்டாலும், சிங்களவரிடையே சாதித்தடிப்பு ஆதிக்கமாயிருந்த கண்டிய சிங்களப் பகுதிகளிற் கூட யாழ் குடா நாட்டிற் கடைப்பிடிக்கப்பட்டளவு கொடுமையான தீண்டாமை உட்பட்ட பாகுபாடுகள் இருந்ததாகக் கூற முடியாது.

எவ்வாறாயினும், சாதி அடிப்படையிலான சமூக மேம்பாடு கோலோச்சிய சூழலிற் தமிழரிடையில் எவ்விதமான சவாலுக்கும் இடமின்றி ஒரு சில வேளாள மேட்டுக்குடிக் குடும்பங்கள் அரசியலில் ஆதிக்கஞ் செலுத்தின. சிங்களவரிடையே சமூக மேநிலையாக்கம் பெற்று வந்த சில சாதிப் பிரிவுகளின் சவாலை கொவிகம மேட்டுக்குடிகளால் சமாளித்து அரசியல் ஆதிக்கஞ் செலுத்த இயலுமாயிற்று. முஸ்லிம்களின் சமூக விழிப்புணர்வு படிப்படியாகவே உருப் பெறத் தொடங்கியது. அவர்களிடையிலே வலிமையுடனிருந்த (இந்திய முஸ்லிம்கள் உட்பட்ட) வணிகர்களின் பொருளாதார வளர்ச்சி எழுச்சி பெற்று வந்த சிங்கள வணிகர்களுடைய வளர்ச்சிக்குத் தடையாகக் காணப்பட்டமையாலேயே 1915ல் சிங்கள (பௌத்த) – முஸ்லிம் கலவ ரங்கள் வெடித்தன.

19ம் நூற்றாண்டு இறுதிப் பகுதிகளில் கொச்சிக்கடை கலவரம் எனப்படும் பௌத்த-கத்தோலிக்க மோதலின் பின்பு பௌத்த-முஸ்லிம் மோதலைக் கவனிக்கும் போது இனத்தை விட மதம் அரசியலில் முக்கிய பங்கு வகித்ததை நாம் உணரலாம். எனவே சாதியும் மதமும் மொழியை விட முக்கியமான அடையாளங்களாகச் செயற்பட்டன.

இதை மிகையாக எளிமைப்படுத்திச் சாதியே அடிப்படையானது என்ற முடிவுக்கு வர இயலாது. சமூகத்தில் அதிகாரத்திலிருந்த, அதிகாரத்திற்காககப் போட்டியிட்ட குழுவினர் தமது நலன்களைச் சாதி, சமய அடிப்படையில் அடையாளப்படுத்தியமை தமக்குப் பின்னால் வர்க்க வேறுபாடு மறந்து தமக்கு ஆதரவாக நிற்கக் கூடிய ஒரு சனத்திரளை வைத்திருப்பதற்காகவே.

தமிழரும் சிங்களவரும் என்ற மொழி வழி வேறுபாட்டின் அடிப்படையில் அரசியல் விருத்தி பெறாமைக்கான காரணம் எந்த விதமான பண்பாட்டு ஒற்றுமைகளையும் விட மேலாக அந்த இரு அடையாளங்கட்கும் உட்பட்ட மேட்டுக் குடி கட்கும் ஓரளவு வசதி படைத்த பகுதியினருக்குமிடையே போட்டிக்குரியதாகப் பொதுவான எதுவுமே இல்லாமை என்பதை நாம் கவனிக்க வேண்டும். எனவே சிங்கள கொவிகம, தமிழ் வேளாள மேட்டுக் குடிகளிடையே வலுவான நல்லுறவு இருந்தது.

அதையொத்த இன வேறுபாடு கடந்த நல்லுறவோ இணக்கப்பாடோ சாதியாலோ வர்க்கத்தாலோ தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்த மக்களிடையே உருவாக அன்று வாய்ப்புக்கள் இருக்கவில்லை. அவ்வாறான வாய்ப்பு வர்க்க அடிப்படையில் உருவாகி வலுப்பட்ட காலப் போக்கிலேயே இன அடையாளத்தின் அரசியலும் வேரூன்றி விட்டது.

**வளரும்**

**கருணாநிதியை சிக்கலில்**

**07ம் பக்க தொடர்ச்சி**

தடா எனக் கிழம்பிவிட்டனர். மத வெறி தலைக்கேறி எதை எதை யெல்லாம் சொல்ல வைத்திருக்கிறது. “மதம் ஒரு அபினி” என மார்க்ஸ் சுட்டிக்காட்டியதில் என்ற தவறு இருக்கிறது. இந்த அபினி உண்டு நிற்பவர்கள் இந்துத்துவ அடிப்படை வாதிகள் மட்டுமல்ல வெவ்வேறு அளவுகளில் மக்களுக்கும் ஊட்டப்பட்டிருக்கிறது. இது எல்லா மதங்கள் மத்தியிலும் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வரும் உயர் ரக அபினி தான்.

கருணாநிதியும் தி.மு.கவும் சேது சமுத்திரத்திட்டத்தை விடாப் பிடியாக நிறைவேற்ற நிற்பது தமிழக மக்களின் நன்மைக்காக அல்ல. மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு போன்ற பெரும் கப்பல் கம்பனி முதலாளிகளுக்காகவே ஆகும். இத்திட்டத்தால் புரளும் கோடி கோடிகளில் மு.க. விற்கும் பங்கு உண்டு. அவர் இன்று தமிழகத்தில் கோடீஸ்வரர்களில் ஒருவர். அந்தத்த தகுதி அவரை முதல்வராக்கியது. இன்று தள்ளாத வயதிலும் அந்தக் கோடிகளே தாங்கு சக்திகளாகவும் இருந்து வருகின்றன.

இராமரைக் காட்டி பாரதிய ஜனதாவும்-அத்வானியும் போர்க் கொடி தூக்க சேதுவைக் காட்டி தி.மு.வும்- கருணா நிதியும் தத்தமது அரசியலே நடாத்துகிறார்கள். அதன் ஊடாகப் பணம் பதவி வர்க்க வளர்ச்சி போன்றவற்றைச் வரப் பிரசாதமாக்கிக் கொள்கின்றனர். இதனால் சாதாரண உழைக்கும் இந்திய மக்களுக்கோ அவர்களின் பிரச்சினைகளுக்கோ பலாபலன் எதுவும் ஏற்படப்போவதில்லை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

**குறிப்பு:** உலகின் அரங்கு என்று சொல்லப்படுகின்ற ஐ. நாடுகள் சபையின் 62து அமர்வு நடைபெறுவதால் உலக அரங்காக ஐ.நா. வின் அமர்வைக் கருதிக் கொள்க.

## ஈரானே பாடு பொருளாக

இம் முறை ஐ.நா. வின் கூட்டத் தொடரில் பேசு பொருளாக ஈரானும் அதனது அணு ஆயுத முயற்சிகளுமே பேசப்படுகின்றன. ஜேர்மனியின் சான்சிலர் அஞ்சலாமெக்கல் தனது உரையில் "ஈரான் அணுக்குண்டை வைத்திருக்குமாயின் அது இஸ்ரேலுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் மிகுந்த ஆபத்தானது. ஈரான் அணுக் குண்டை உற்பத்தி செய்கிறது என்பதை உலகம் நிரூபிக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் அணுக்குண்டைத் தான் தயாரிக்கவில்லை என்பதை உலகுக்கு ஈரான் நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளது" என்றார்.

ஈரான் அணுக்குண்டை வைத்திருந்தால் அது உலக நாடுகளுக்கு ஆபத்தானது. ஆனால் ஜேர்மனியோ அமெரிக்காவோ இஸ்ரேலோ அணுக்குண்டை வைத்திருந்தால் அது உலக நாடுகளுக்குப் பாதுகாப்பானது என நினைக்கிறார்களோ? எவ்வளவு வேடிக்கை:

"ஈரான் அணுவாயுதத்தை வைத்திருப்பது அனுமதிக்க முடியாதது. அது உலக அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியது. சர்வதேச சமூகம் உலக அமைதியைக்காக்க முயலவேண்டும்" என்று பேசினார் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலோஸ் சார்க்கோசி.

ஈரானும் வடகொரியாவும் அணுஆயுதம் வைத்திருப்பதை அனுமதிக்க முடியாது. பிரான்ஸ்சோ அல்லது அதனையொத்த சர்வதேச சமூக நாடுகளோ அணுக்குண்டை வைத்திருந்தால் அது அனுமதிக்கக் கூடியது. அவரது கருத்துப்படி நாட்டின் வலுத் தேவைக்காக அணு சக்தியை உபயோகிப்பது உலக அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியது.

ஆனால் பிற நாடுகளை ஆக்கிரமிக்கவும் மக்களைக் கொல்லவும் அணுவாயுதம் பயன்படுத்தப்படுவது உலக அமைதிக்கு ஆதரவானதாகும். நியாயம் எப்படி இருக்கிறது.

## மத்திய கிழக்கு: இன்னும் பேசுவோம்.

மத்திய கிழக்குப் பற்றிப் பேசுகிறார்கள். பேசுகிறார்கள். ஓய்ந்தபா டில்லை. போரும் தான் பேச்சும் தான். இந் நிலையில் மத்திய கிழக்கில் அமைதியை நிலை நாட்ட பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நவீன ஆயுதங்களை இஸ்ரேலுக்கும் சவுதி அரேபியாவிற்கும் வழங்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி அனுமதித்திருக்கிறார்.

இம் முறை ஐ.நா வில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி மத்திய கிழக்கில் அமைதியை உருவாக்க எல்லோரும் பாடுபட வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அமெரிக்காவே நவீன ஆயுதங்களை வழங்கி அமைதிக்காகப் பாடுபடும் போது ஏன் ஏனைய நாடுகள் பாடுபடக் கூடாது எனக் கேட்கிறார் போலும்? மத்திய கிழக்கில் அவர் உருவாக்க விரும்புகின்ற சமாதானம் எது என்பது தான் எனக்கு விளங்கவில்லை. மத்திய கிழக்கில் மக்களைப் படாதபாடுபடுத்துகின்ற அமைதியை உருவாக்க எல்லோரும் பாடுபட வேண்டும் என்கிறார் போலும்.

இதற்கிடையில் ஐ. நா கூட்டத் தொடரில் பங்கேற்பதற்குச் சென்ற இலங்கை என்ற நாட்டின் ஜனாதிபதியும் இந்தியா என்ற நாட்டின் வெளியுறவு அமைச்சரும் சந்தித்து மத்திய கிழக்கு நிலவரங்கள் குறித்துப் பேசியதாகவும் மத்திய கிழக்கில் அமைதியை உருவாக்குவது பற்றிக் கலந்தாலோசித்ததாகவும் பத்திரிகையில் செய்தி வெளிவந்தன.

"கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போக முயன்றானாம்"

# தோழர் ஜோசி மரியா சிசன் விடுதலை புரட்சிகர சக்திகளுக்கு மகிழ்ச்சி!

**பிலிப்பீன்ஸ்** கம்யூனிஸ்ட் கட்சிக்கான தலைமை வழிகாட்டிகளில் ஒருவரும் அந் நாட்டிற்கான தேசிய ஜனநாயக முன்னணியின் மூத்த ஆலோசகருமான தோழர் ஜோசி மரியா சிசன் டச்சு சிறையில் இருந்து விடுதலை பெற்றுள்ளார். மாவட்ட நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது. கடந்த ஒகஸ்ட் 28ம் திகதி நெதர்லாந்து பொலீஸ் பொய்க் கொலைக் குற்றச்சாட்டைச் சுமத்தி தோழர் சிசனைக் கைது செய்தது. அத்துடன் தேசிய ஜனநாயக முன்னணியின் பணிமனையில் கணனிகள் உட்பட முக்கிய ஆவணங்களையும் பொலீஸ் கைப்பற்றிச் சென்றது.

தோழர் சிசனின் கைதை பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையா கக் கண்டித்து அவரது விடுதலைக்கு இயக்கம் நடாத்தியது. உலகின் பல மாக்சிச லெனினிசக் கட்சிகள் நெதர்லாந்து பொலீசின் ஃபாசிச மிலேச்சத்தனமான கைதைக் கண்டித்து அவரை விடுதலை செய்யும் படி வற்புறுத்தின. புதிய-ஜனநாயக கட்சியும் தனது கண்டனத்தை வெளியிட்டு தோழர் சிசனை விடுதலை செய்யும் படி வற்புறுத்தியது. செப்டம்பர் 15ம் திகதி ஹேக்கில் உள்ள மாவட்ட நீதிமன்றம் தோழர் சிசனை விடுதலை செய்தது. இவ் விடுதலையானது பிலிப்பின்ஸ் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் புதிய மக்கள் ராணுவத்திற்கும் போராடி வரும் பிலிப்பன்ஸ் மக்களுக்கும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்து பிலிப்பின்ஸ் மக்களையும் அவர்களது விடுதலைப் போராட்டத்தையும் அடக்கி வரும் ஃபாசிச அரேயோ தலைமையிலான ஆட்சிக்கு தோழர் சிசனின் விடுதலை பலத்த அடியேயாகும்.

# ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து பாகிஸ்தானில் வீதிப் போராட்டம்

**பாகிஸ்தான் நாட்டில்** அண்மைய காலங்களில் மக்கள் போராட்டங்கள் வெடித்தெழுந்து கொந்தளிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இரண்டு பிரதான தளங்களில் அப் போராட்டங்களை அடையாளம் காண முடிகின்றது. ஒன்று ராணுவ சர்வதிகாரியாக செயல்பட்டு வரும் முஷராவ்வுக்கும் அவரது ராணுவ ஆட்சிக்கும் எதிரான போராட்டங்கள். இரண்டாவது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான அவ்வப்போதான போராட்டங்கள்.

பாகிஸ்தான் 1947ம் ஆண்டு சுதந்திரம் அடைவதற்கு முன்பு இந்தியாவாக இருந்த பகுதியா கும். பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியாவைப் பலவீனப்படுத்தவும் பிரித்து வைப்பதன் மூலம் நீண்ட கால இலாபமடையவும் இந்து- முஸ்லீம் பிளவைப் பெரிதாக்கினர். அதன் அடிப்படையில் இந்தியா பாகிஸ்தான் இரண்டு நாடுகள் ஆயின. இந்தியாவில் கதர் உடை தரித்த நிலவுடைமை- முதலாளிகள் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற பெயரில் தமது சர்வாதிகாரத்தை தொடர்ந்தனர். ஆனால் பாகிஸ்தானில் பாராளுமன்ற ஜனநாயக சர்வாதிகாரம் குறைந்த காலத்தில் தான் நிலைக்க முடிந்தது. கூடியளவு காலம் காக்கி உடை தரித்த ராணுவ சர்வாதிகாரமே பாகிஸ் தானில் அதிக காலம் நிலைத்து வந்திருக்கிறது. அங்கு அச் சர்வாதி காரத்தின் மறைவில் நிலவுடைமை முதலாளித்துவ சக்திகளே ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர். அதன் தொடர்ச்சி தான் இன்றைய முஷராவ்வின் ராணுவ சர் வாதிகாரம்.


இஸ்லாமிய மத அடிப்படையிலான நாடு வேண்டும் என்ற ஜின்னாவின் கோரிக்கையில் உருவாகிய பாகிஸ்தான் இன்று வரை தனது நாட்டின் பிரச்சினைகளுக்கு மதத் தேசியத்தின் மூலம் தீர்வு கண்டு விடவில்லை. இஸ்லாமிய மதம் மக்களது சமத்துவம் சகோதரத்துவம் பற்றிப் பேசிய போதிலும் நாடு எதிர்நோக்கிய எந்தவொரு பிரச்சினையையும் தீர்த்துவிடவில் லை. சுரண்டலும் ஏற்றத் தாழ்வும் பஞ்சமும் பட்டினியும் இல்லாமைகளும் அங்கு தாராளமாக உண்டு. அவையாவும் மத ஒற்று மை மதத்தை முதன்மைப்படுத்தும் ஆட்சி என்பனவற்றால் மறைக்கப் படுகின்றன. மக்கள் இவற்றுக்கு எதிராக எழாதவாறே அப்பட்டமான ராணுவ சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிறது.

இந்தியா எவ்வாறு பாகிஸ்தானை பயங்கர எதிரியாகக் காட்டி ஆளும் வர்க்க ஆட்சியைத் தொடர்கிறதோ அவ்வாறே பாகிஸ்தானும் இந்தியாவை எதிரியாகக் காட்டி தமது சர்வாதிகாரத்தை தொடர்கிறது. ஆனால் இரு நாட்டு மக்களதும் வாழ்க்கை நிலை அடி நிலையில் தான் இருந்து வருகிறது. இந்தியாவில் காவி இந்துத்துவ அடிப்படைவாதம் சன்னதம் ஆடுகின்றது என்றால் பாகிஸ்தானில் இஸ்லாமிய அடிப்படைவாதம் உருக் கொண்டு நிற்கிறது. இவ்விரு மத அடிப்படைவாதிகளும் மக்களை மத வெறியினால் மோத விட்டு இத்தம் பாய்ந்தோடவே வகை செய்கின்றனர்.

பாகிஸ்தானில் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியானது குறிப்பிட்ட கால கட்டங்களில் மட்டும் இடம் பெற்று வந்துள்ளன. அதில் சுல்பிகார் பூட்டோவின் ஆட்சிக்காலம் குறிப்பிடத்தக்கது. தேசிய முதலாளித்துவ நிலை நின்று எல்லைக் குட்பட்ட சில சீர்திருத்தங்களைப் பாகிஸ்தானில் கொண்டு வந்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுக்க முயன்றவர். குறிப்பாக நிலச் சீர்திருத்தத்தை கொண்டு வந்து பெரு நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலச் சுவீகரிப்பைச் செய்து நிலமற்ற மக்களுக்கு நிலங்களைப் பகிர்ந்தளிக்கவும் செய்தார். ஆனால் அவரையும் அவரது முயற்சிகளையும் நிலவுடைமை முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற ராணுவ சர்வாதிகாரியான ஷியா உல் ஹக்கும் அவரது ஆதரவு சத்திகளும் அனுமதிக்கவில்லை. பூட்டோவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இறுதியில் தூக்கிலிடப்பட்டார். அவரைத் தொடர்ந்து அரசியலுக்கு வந்தவரே மகளான பெனாசீர் பூட்டோவாகும். அவரும் சில காலம் பிரதமராகப் பதவி வகித்தார். அதன் பின் நவாப் ஷெரீப் பிரதமராகி சில காலம் ஆட்சி செய்தார். அக்காலத்தில் பெனாசீர் நாட்டை விட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. ஆனால் ராணுவத் தளபதியான முஷ்ராவ் நவாப் ஷெரீப்பின் பதவியைக் கவிழ்த்து சகல அதிகாரங்களையும் பறித்ததுடன் நவாப்பை நாட்டை விட்டே துரத்தினார்.

முஷசராவ்வின் ராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் பாகிஸ்தானிய மக்கள் சகல நிலைகளினதும் அடக்கி ஒடுக்கப்பட்டனர். நீதித்துறை நிர்வாகத்துறை நிறைவேற்றுத் துறை அனைத்தையும் தனது கையில் எடுத்த அந்த ராணுவ சர்வாதிகாரி நினைத்தபடி ஆட்சி நடாத்தி வருவதை எதிர்த்து அந் நாட்டு மக்கள் தொழிற்சங்கங்கள், பொது அமைப்புகள் அவ்வப்போது வீதியில் இறங்கி வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றன. இவற்றில் மத அடிப்படைவாத சக்திகளும் ஈடுபட்டுள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்பு பாகிஸ்தான் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியை முஷராவ் ராணுவ நிர்வாகம் பதவி நீக்கியது. அதனை எதிர்த்து சட்டத்தரணிகள் வீதியில் இறங்கிப் போராடினர். அவர்களது போராட்டத்தை ராணுவ இரும்புக் கரங்கள் கொண்டு நசுக்க எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. வீதிகளில் சட்டத்தரணிகளின் இரத்தம் பாய்ந்தோடிய போதிலும் அவர்கள் பின்வாங்கிப் பணிந்து விட வில்லை. இறுதியில் அவர்கள் போராட்டம் வெற்றி பெற்று தலைமை நீதிபதி மீளவும் பதவியில் அமர்த்தப்பட்டார்.



இந் நிலையில் முஷராவ் தனது தளபதிப் பதவியில் இருந்தவாறே பாகிஸ்தான் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடுகின்றார். ஏற்கனவே பாகிஸ்தான் அரசியலில் பங்கு கொள்ள அஞ்ஞாதவாசம் மேற்கொண்டு வெளிநாட்டிலிருந்து திரும்பிய முன்னாள் பிரதமர் நவாப் ஷெரீப் விமான நிலையத் தில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டார். அடுத்து மற்றொரு முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ அவ்வாறே நாடு திரும்ப உள்ளார். அவ் வேளை என்ன நடைபெறும் என்ற எதிர் பார்ப்பு பாகிஸ்தானிலும் வெளி உலகிலும் இருந்து வருகின்றது.

இத்தகைய சூழலில் முஷராவ்பின் ராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் அவரது ஜனாதிபதி வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்த்து இப்போது வீதிப் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. மோசடிகள் மூலம் அந்த ராணுவ சர்வாதிகாரி ஜனாதிபதிப் பதவிக்கு வந்து கொள்ளவே முயற்சிப்பார். அந்த முயற்சி தோல்வி கண்டால் தனது ராணுவ நிலைப்பாட்டை மேலும் இறுக்கிக் கொள்ளவே செய்வார்.அதனை மறைக்க இந்திய எதிர்ப்பையும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தையும் பல வழிகளிலும் பயன்படுத்தவே அந்த சர்வாதிகாரி முயல்வார் என்பது திண்ணம். ஆனால் போராட்டப் பாரம்பரியத்தில் வந்த பாகிஸ்தான் மக்கள் ராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிரான போராட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கவே செய்வர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பொருட்களின் விலை உயர்வும் மக்களின் மௌனமும்

**கோதுமை மாவின்** விலை பதின் மூன்று ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது ஒரு கிலோ மாவை அறுபத்தைந்து ரூபாவிற்கு வாங்க வேண்டியுள்ளது. இவ் விலை தூரப்பிரதேசங்களில் மேலும் சில ரூபாய்களால் அதிகரிக்கும். யாழ்பாணத்தில் ரூபா 75 முதல் 100 ரூபா வரை விற்க வாய்ப்பு உண்டு. பதின் மூன்று ரூபா மாவிலை அதிகரிப் பால் 450 கிராம் பாணின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் பாணின் விலை பத்து அல்லது பதினைந்து ரூபாவால் அதிகரிக்கச் செய்யும். 1994ம் ஆண்டில் ரூபா 5ற்கு விற்ற பாண் இப்போது 2007ல் ரூபா 32, 34 ஆக உயர்ந்து நிற்கிறது.

இக் கோதுமை மாவின் விலையை ஏகபோக உரிமை பெற்ற பிரிமா கம்பனியே உயர்த்தியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த அரசாங்கத்திற்கு வக்கில்லை. உலகச் சந்தையில் கோதுமையின் விலை அதிகரித்துள்ளது எனப் பிரிமாக் கம்பனி நியாயம் கூறி உள்ளது. இதையிட்டு அரசாங்கத்தின் அமைச்சர் பெருமக்களில் எவரும் வாய் திறக்கவில்லை. அவர்களது ஆடம்பர வாழ்க்கைக்கு இவ் விலை உயர்வோ ஏனையவற்றின் விலை உயர்வுகளோ ஒரு பொருட்டல்ல.

கோதுமை விலை உயர்வைத் தடுக்க முடியாது. ஆனால் அம் பாவனையைக் குறைத்து அல்லது முற்றாகக் கைவிட்டு அரிசியைப் பயன்படுத்தும் ஆலோசனையை ஏற்கனவே சில யதார்த்தம் புரியாத அமைச்சர்கள் கூறி இருந்தார்கள். அத்துடன் நிற்காது அரிசி மாவைப் பதப்படுத்தி பக்கற்றுக்களில் விற்கப் போவதாகவும் முன்பு கூறி இருந்தனர். இவையெல்லாம் மா விலை ஏற்றப்படும் போது மட்டும் கூறப்படும் ஏமாற்றுப் பேச்சுக்களேயாகும்.

அப்படியானால் அரிசி விலை என்ன ஐந்து பத்து ரூபாவா விற்கிறது. இப்பொழுது ஒரு கிலோ அரிசி குறைந்தது 45 ரூபாவாக விற்கப்படுகிறது. தரமான அரிசி யாவும் ஐம்பத்திற்கு மேல் தான் விற்பனையாகின்றது. அதுவும் அடுத்தடுத்த மாதங்களில் கிலோ 85 ரூபாவிற்கு அரிசி விலை ஏறக் கூடும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் செயலாளர் கூறியுள்ளார். ஏனெனில் பத்தாயிரம் தொன் அரிசி மட்டுமே தற்போது கையிருப்பில் இருக்கிற தாம். அதனால் ஐம்பதினாயிரம் தொன் அரிசி இறக்குமதி செய்வதன் மூலமே அரிசித் தட்டுப்பாட்டையும் விலை அதிகரிப்பையும் தடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். ஆனால் அரிசி மூலம் கொள்ளை லாபம் பெறும் பெருச்சாளிகள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதிலேயே கருத்தாக இருப்பர்.

கோதுமை மா, அரிசி உட்பட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துமே நாளாந்தம் விலை அதிகரிப்புக்கு உள்ளாகி வருகின்றன. சீனி, மிளகாய், மல்லி, பருப்பு வகைகள் உட்பட உப்பு புளி தேங்காய் மரக்கறி வகைகள் யாவும் விலைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. மீன் விலை வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டு போகின்றன. விரைவில் பெற்றோல் டீசல் விலை உயர்வு 25 வீதத்தால் அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது. இவ்விலை உயர்வு இவ்வருடத்தில் மட்டும் எட்டாவது தடவையாகும். அதன் மூலம் மேலும் பொருட்களின் விலைகள் தாங்க முடியாத அளவுக்கு அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது. ஏற்கனவே பால்மா வகைகள் ஐம்பது அறுபது ரூபாய்களால் உயர்த்தப்பட்டன. எரிவாயுவின் விலை தொடர்ந்து ஏறிக் கொண்டே இருக்கிறது. பொருட்களின் விலை அதிகரிப்பு என்பது ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டதும் நமது பொருளதார வளர்ச்சியோடு சம்மந்தப்பட்டதுமாகும்.

மேலும் நாட்டின் பொருளாதாரம் என்பது தாராளமயம் தனியார்மயம் என்பனவற்றோடு பிணைக்கப்பட்டு விதேசிய நவதாராளக் கொள்கைகளினால் வழி நடத்தப்படும் ஒன்றாகி உள்ளது. நமது பொருளாதார நிபுணர்கள் என்போர் அதற்குச் சேவகம் புரிபவர்களாகவே உள்ளனர்.

இவ்வாறான பொருட்கள் விலை அதிகரிப்பும் வாழ்க்கைச் செலவின் உயர்வும் மிக மோசமாகிக் கொண்டு செல்லும் சூழலிலும் மக்கள் மௌனம் காத்து வரும் விநோதப் போக்கையே காணமுடிகின்றது. ஏன் இந்த அவல நிலை மக்களின் ஏகப் பெரும்பான்மையான மக்கள் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைப்போராகவே இருக்கின்றனர். சம்பளம் அல்லது வருமானம் என்பன வாழ்க்கைச் செலவிற்கு ஈடு செய்ய முடியாத அளவிலேயே இருந்து வருகின்றன. அரைப்பட்டினி கால் பட்டினி முழுப் பட்டினியாகிக் கொண்டிருக் கிறது. அவ்வாறு இருந்தும் மக்கள் மௌனமாக இருந்து வருவதன் மர்மம் என்ன?

மகிந்த சிந்தனை அரசாங்கம் மக்களை குறிப்பாகச் சிங்கள மக்களைத் திசைதிருப்பி ஏமாற்றி வருகின்றது. பயங்கரவாதத்தையும் பிரிவினையையும் எதிர்த்து புனித யுத்தத்தில் ஈடுபடுவதாகவே அரசாங்கம் காட்டிக் கொள்கிறது. அதே வேளை உலகமயமாதலின் கீழான தாராள பொருளாதாரக் கொள்கையை மறைத்து உலகச் சந்தை விலையேற்றம் பற்றி உச்சமாகப் பேசியும் வருகின்றது.

அதேவேளை விலை உயர்வை எதிர்த்து மக்கள் சார்பாகக் குரல் கொடுக்க வேண்டியவர்கள் என எதிர்பார்க்கப்படுவோர் அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்து தத் தமது சுய நலன்களில் மூழ்கி நிற்கின்றனர். குறிப்பாகப் பாராளுமன்ற இடதுசாரிகள் என்றோ சோரம் போய் விட்டார்கள். அவர்களது தொழில் மௌனமாக இருந்து பேரினவாத முதலாளித்துவ ஒடுக்குமுறை அரசாங்கத்திற்கு சாமரை வீசுவதேயாகும். அதற்கு அவர்கள் கூறும் காரணம் யூஎன்.பி எதிர்ப்பு என்பதாகும்.

இவர்களை நிராகரித்தே சிங்கள மக்கள் ஜே.வி.பி யின் இடதுசாரி வேடத்தை நம்பிச் சென்றனர். ஆனால் அதே ஜே.வி.பி யினர் இன்று பாராளுமன்றப் பதவிச் சுகம் பெற்று மக்களுக்குப் புற முதுகு காட்டி நிற்கின்ற கேவலத் தையே காண முடிகிறது. பாராளு மன்ற சுகபோகம் என்பது சாதாரண விடயமல்ல. அப்பனுக்கு அப்பன்களான பழம் பெரும் இடதுசாரிகளையே கவிழ்த்துப் போட்ட பாராளுமன்ற ஆசன ஆசையும் சந்தர்ப்பவாத அரசியலும் ஜே.வி.பி. யைச் சறுக்க வைப்பதற்கு அதிக காலம் எடுக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டி நிற்கிறது. பாராளுமன்றத்து வெளியே வாய் வீரம் பேசிவந்த விக்கிரமபாகுவும் சிறிதுங்காவும் என்.ஜீ.ஓ. பணக் கட்டுகளுக்காக வாய் பிளந்து நின்று சொந்த இடதுசாரி நிலைப்பாட்டையே விலை பேசி விற்றும் வரும் சூழலையும் காண முடிகின்றது.

எனவே மக்கள் பக்கம் நின்று நேர்மையாகப் போராட வேண்டிய சக்திகள் மேற் கூறிய சூழலில் பலமிழந்தவர்களாகவே காணப்படுகின்றன. பேரினவாத முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு ஆட்சி அதிகார சக்திகள் மக்கள் மீது எத்தகைய சுமைகளையும் அடக்குமுறைகளையும் மேற் கொண்டாலும் மக்கள் வாய் திறக்க அல்லது வீதியில் இறங்கத் தயங்குபவர்களாகவே காணப்படுகின்றனர். காரணம் அவர்கள் நம்பக் கூடிய அரசியல் தலைமைத்துவம் எதுவும் இல்லாதிருப்பதேயாகும். ஆனால் இந்த நிலை அதிக காலத்திற்கு நீடிக்கமாட்டாது. மக்கள் நிச்சயம் வீதிக்கு வருவார்கள். தாங்க முடியாத நிலையில் போராட்டங்களில் ஈடுபடுவர். சந்தர்ப்பவாத வேஷதாரா அரசியல் புல்லுருவிகளை நிராகரித்து அவர்களின் தலைகளுக்கு மேலாக வெகுஜன எழுச்சியில் இறங்கவே செய்வார்கள். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள நேர்மையான அரசியல் தொழிற்சங்க சக்திகள் சிறயனவாக இருப்பினும் சரியான பாதையில் அணிவகுப்பார்கள் என்ற நம்பிக் கை உண்டு. அவர்கள் துணிவோடு முன்னுக்கு வரும் போது இன்று மௌனம் காத்து வரும் மக்கள் அதனைக் கலைத்துப் புயலெனப் போராட்டங்களில் ஈடுபடவே செய்வர்.

இன்றைய பொருட்கள் விலை அதிகரிப்பாலும் வாழ்க்கைச் செலவாலும் அதிகமாகக் கஷ்ட்டப்படுபவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களை ஏமாற்றும் தலைமைகள் அரசாங்கத்துடன் நிற்கிறார்கள். அங்கும் மக்கள் அத்தகைய தலைமைகளை நிராகரித்து முன்பு போல் எழவே செய்வார்கள்.


அப்போராட்டங்கள் மற்றொரு பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தின் தேவைக்கும் அதிகாரத்திற்கும் உதவுவதாக இருக்கக் கூடாது என்பது கவனத்தில் கொள்ளப் பட வேண்டும். எனவே மூன்றாவது சக்தியாக அரசியல் மாற்றங்களை வேண்டி நிற்கும் அனைவரும் ஒன்றிணைந்து மக்கள் சார்பாகக் குரல் கொடுக்க வேண்டும்.

**அ. பூபதி**

# சங்கானைத் தோழர் இராஜதுரையின் மறைவுக்கு இறுதி அஞ்சலி

**வெகுஜன எழுச்சிப்** பேரணிகளில் சிம்மக் குரல் எழுப்பி போர்க்குணத்தைப் பறைசாற்றி போராட்டக் காலங்களில் உறுதியும் உத்வேகமும் காட்டி புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளை இறுதிவரை பற்றி நின்ற தோழர் சி.இராஜதுரை கடந்த 12-09-2007 அன்று அவரது சொந்தக் கிராமமான சங்கானை நிச்சாமத்தில் மரணமடைந்தார். "எச்சாமம் வந்து எதிரி நுழைந்தாலும் நிச்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும் குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும் கோபத்தை மெச்சுகிறேன் சங்கானை மண்ணே உனக்கு வணக்கம்" என வரலாற்றுப் புகழ் மிக்க கவிதை வரிகளை வடித்துச் சென்றவர் தோழர் சுபத்திரன். அத்தகைய நிச்சாமத்தின் போராளிகளில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களில் ஒருவராக இருந்தவர் தோழர் இராஜதுரை.

1966 ஒக்ரோபர் 21 எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டு "சாதியமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" எனச் சிம்ம க்குரல் எழுப்பி பொலீஸ் அடக்கு முறைக்கு முன்பாக நெஞ்சு நிமிர்த்தி நின்ற கம்யூனிஸ்ட் இளைஞர்களில் ஒரு வராக தோழர் இராஜதுரை கம்பீரமாக நின்ற காட்சி இப் பொழுதும் கண் முன்னே பசுமை மிகு காட்சியாக விரிந்து செல்வதை உணர முடிகின்றது. அன்று சந்தித்த பல நூறு முகங்களில் சிலர் மறைந்து விட்டனர். எஞ்சியிருப்பவர்களில் பலர் வயதாகி விட்டனர். இருப்பினும் அவர்களது கம்யூனிஸ்ட் இலட்சிய உணர்வும் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்ட உணர்வும் மங்கிவிட வில்லை. அத்தகையவர்களில் ஒருவராக இருந்து வந்த தோழர் இராஜ துரை மறைந்த செய்தி துயரத்தை ஏற்படுத்தியது. அத்துடன் பழைய புரட்சிகர போராட்ட நினைவுகளையும் மீட்டு வந்து நிறுத்தியது.



தோழர் இராஜதுரையும் அவரது ஐந்து சகோதரர்களும் முழுக் குடும்பத்தினரும் ஏனைய போராளிகளும் அவர்களது குடும்பங்களுடன் இணைந்து நின்று போராட்டத்தை முன்னெடுப்பதற்கு வலுவும் பங்களிப்பும் வழங்கியவர்கள். அன்றைய மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்று அதன் கொள்கைகளையும் நடைமுறைகளையும் முன்னெடுத்தவர்கள். அண்மை யில் மறைந்த தோழர் தருமலிங்கம் (தருமு) ஏற்கனவே போராளியாக இருந்து பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் தியாகியாகிய தோழர் நல்லப்பு ஆகிய தோழர்களும் நினைவுக்கு வருகிறார்கள். அன்றைய நெருக்கடி மிக்க சூழலில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போராட்டத்திலிருந்து பின் வாங்காது முன்னேறிச் சென்று மக்கள் மத்தியில் தோழர் இராஜதுரையும் ஏனைய தோழர்களும் காட்டிய நெஞ்சுறுதி என்றும் நினைவை விட்டகலாது.

அன்றைய போராட்டங்கள் தமிழ் தேசிய இனத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையைக் கொண்டு வந்தது. ஆனால் அதன் வரலாற்று முக்கியத்துவத்தை மறுத்து "சாதிக் கலவரம்" "சில சண்டியர்களின் சண்டித்தனம்" எனக் கொச்சைப்படுத்தும் தமிழ்த் தேசியவாதிகள் இருக்கிறார்கள். வரலாறு என எழுதும் தமிழ்த் தேசியவாதப் பழமைவாதிகள் அன்றைய போராட்டம் தமிழர்கள் மத்தியில் குறிப்பிட்ட முறைகளில் ஐக்கியத்திற்கு வழி வகுத்தது என்பதைக் கூடக் காண மறுக்கின்றனர். அதேவேளை புலம்பெயர்ந்து சென்றவர்களில் சில இளைய தலைமுறையினர் பழைய போராட்டங்களைப் பற்றி நினைவுபடுத்துவதை விரும்புவதில்லை. மேன்நிலையாக்கம் பெற்ற சிலர் பணத்தின் மூலம் சாதியத்தை மறைக்கலாம் என வீணதனமாக நம்புகின்றனர். பிறப்பின் வழியாக இன்றும் அடையாளப்படுத்தப்படும் சாதியமும் அதற்கான கருத்தியலும் இலகுவில் மறைந்துவிடக் கூடிய ஒன்றல்ல. தொடர்ந்தும் வெவ்வேறு தளங்களில் போராட வேண்டிய தேவையை வலியுறுத்திய படியே இருக்கிறது. நிச்சாமம் என்ற கிராமத்தின் பெயர் போராட்டத்தின் பெயரால் வரலாற்றில் பதிவு பெற்ற ஒன்றாகிக் கொண்டது. அதனைச் சிலர் மறைக்கவோ மறுக்கவோ முனைந்தாலும் அதன் முக்கியத்துவம் துலங்கிய படியே இருக்கும். அதற்கு காரணமாக அமைந்த கம்யூனிஸ்டுகளும் போராளிகளும் மக்களும் எப்பொழுதும் சாட்சியமாக வரலாற்றில் இருந்தே வருவார்கள். அத்தகையவர்களில் தோழர் இராஜதுரை ஒருவராவார். அவரது மறைவுக்கு புதிய- ஜனநாயகக் கட்சி மத்திய குழு தனது ஆழ்ந்த சிகப்பு அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டது. அவரது குடும்பத்தினருக்கு அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக் கொண்டது

துக்கத்தைப் பலமாக மாற்றி எம் முன்னே உள்ள புரட்சிகரக் கடமைகளை முன்னெடுக்க தோழர் இராஜதுரையின் நினைவாக மேலும் முன்செல்வோம்.

**சி. கா. செ**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மூடரும் முழுநிலவும்

"ஞானி நிலவைக் காட்டினால் மூடன் சுட்டு விரலைப் பார்ப்பான்" என்பது பழமொழி. நமது செய்தி ஏடுகளில் வருகிற சில பத்தி எழுத்துக்களைப் பார்த்த போது அது நினைவுக்கு வந்தது. தமிழில் வருகிற பத்தி எழுத்துக்கள் பல, குறிப்பாக இலக்கியந் கீழ்மையான சிந்தனையின் அடி ஆழம் வரை துழாவினால் கிடைக்கக் கூடியவை. என்னுடைய வாசிப்புப் போதாததாலோ என்னவோ அவற்றைவிடக் கீழ்த்தரமான பத்தி எழுத்தை நான் அரிதாகவே கண்டிருக்கிறேன். ஸ்ரீமான் சஞ்சாரி, கே.வி என்ற பேர்களில்

## விஜயனின் விஷமமா – விழற் கதையா?

தொடர்பானவை, பலவீனமானவை. அதற்கேற்றாற் போல, உருப்படியாக ஏதாவது தெரிந்தால் அதற்கு முட்டுக்கட்டை போடுகிற மூர்க்கத்தனம் நமது பத்திரிகை நிறுவனங்களில் தேவைக்கு மேல் உண்டு. நமது எழுத்துலகம் கடந்த முப்பது ஆண்டுகளில் நலிந்துள்ளது. அதற்குச் சான்று கூறுவது போலவே நமது செய்தி ஏடுகளிலும் சின்னத் தனமான சில இலக்கிய(?) ஏடுகளிலும் பத்திகள் வருகின்றன.

தனிப்பட்ட கோபதாபங்களைத் தீர்க்கவும் மனதில் உள்ள வன்மங்களை அவிழ்த்துக் கொட்டவும் ஏடுகளைப் பயன்படுத்துகிறவர்கள் எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கிறார்கள். அதற்காகவே பத்திரிகை நடத்தி லட்சுமி காந்தன் என்பவர் தமிழகத்தில் ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் முன்பு வரை வாழ்ந்த இந்து நேசன் என்கிற ஏட்டை வெளியிட்டார். இந்து நேசனை ஒரு மஞ்சள் பத்திரிகை என்பார்கள். இப்போது நமது ஏடுகளிலும் சின்னப் பெரிய திரைகளிலும் புரளுகிற ஆபாசங்கட்கு எந்த மஞ்சள் பத்திரிகையாலும் ஈடு கொடுக்க இயலாது.

பேராசிரியர் கைலாசபதி (அப்போது பேராசிரியரல்ல) நமது பத்திரிகை உலகிற்குப் பல நல்ல பண்புகளைத் தந்தவர். பரபரப்புச் செய்திகட்கும் கிளுகிளுப்புக்காகவும் அரட்டைக்காகவும் பக்கங்களை ஒதுக்காமலே தினகரனின் விற்பனையை உயர்த்த அவரால் முடிந்தது. எனினும் தினகரன் அந்தத் தரத்துடன் அதிக காலம் நிலைக்கவில்லை. 1970களில் தினகரனில் எஸ்தி என்கிற புனைபேரில் தனிப்பட்ட கோபதாபங்களைத் தீர்க்கிற விதமாக ஒருவர் பத்தி ஒன்றை எழுதிய நினைவு. இடதுசாரிகளையும் கலாநிதிகள் கைலாசபதியையும் சிவத்தம்பியையும் இலக்கு வைத்துத் தாக்குகிற பத்திகள் சில சஞ்சிகைகளில் வந்திருக்கின்றன. பழம் பண்டிதர் என்ற பேரில் ஒருவர் சிலகாலமாகத் தினக்குரலில் சாதிய நோக்கையும் பழைமைவாதத்தையும் வலியுறுத்தி எழுதியதோடு பேராசிரியர் சிவத்தம்பியைத் தனிப்பட்ட முறையில் தாக்கியும் எழுதி வந்தார். அந்த எழுத்தை விமர்சித்துப் புதிய பூமியில் கண்டனக் குறிப்பொன்று வந்தது. பின்பு பழம் பண்டிதரும் ஓய்வெடுத்துக் கொண்டார். இவை எல்லாம் மோசமான பத்தி எழுத்துக்கட்கான உதாரணங்கள். இன்னுங் கொஞ்சங் கேவலமான பத்தி எழுத்து "சரிநிகர்" ஏட்டில் 1998–99 அளவில் வந்தது. பத்திரிகை நடத்தையை மதிக்காத திமிர்த்தனம் மிக்க அந்தப் பத்தி அன்று விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று அந்த எழுத்தாளராற் கருதப்பட்ட சில படைப்பாளிகளை வலிந்து நிந்திக்கிற விதமாகவும் தகவல்களைத் திரித்துச் சிலரைத் தாக்குகிற விதமாகவும் அமைந்தது. இன்று, அதே பத்தி எழுத்தாளர் புலம்பெயர்ந்து விடுதலைப் புலிகளின் எதிரிகள் என்று சிலரை அடையாளங் காட்டி நேர்மையின்றித் தாக்கி வருகிறார். இந்த மாதிரித் தனிப்பட்ட கோபதாபங்களையும் வன்மத்தையும் தீர்க்க எழுதுகிறவர்களிடம் நேர்மையை எதிர்பார்ப்பது தவறு.

இன்றைய போர்ச்சூழலின் நலிவுகளின் நடுவில் தடுமாறுகிற தமிழ்ச் சமூகத்திற்குப் பயன் தருகிற முறையிற் புதிய விடயங்களைத் தெரிந்து எழுதுகிறவர்கள் வெகு சிலரே. நுனிப்புல் மேய்கிற ஒரு சில பிழைப்புவாத உதிரிகளும் உள்ளனர். பயனுள்ள விடயங்கள் நமக்கு உடன்பாடற்றவையாக இருந்தாலும் பாராட்டப்பட வேண்டும். ஆனால் அவற்றை மெச்ச ஒரு மனப்பக்குவம் தேவை. அது வயதால் வருவதல்ல, மனிதனின் முதிர்ச்சியால் வருவது. ஆற்றாமையும் பொறாமையும் குடிகொண்ட மனங்கள் ஆயிரம் ஆண்டுகள் போனாலும் திருந்தப் போவதில்லை. தருணங் கிடைக்கிற போதெல்லாம் தங்களை வெளிப்படுத்தத் தவறுவதில்லை.

அண்மையில் நான் கண்ட பத்தி எழுத்துக்கள் சில ஒகஸ்ற் மாத சுடரொளி வார ஏடுகளில் வந்தவற்றுள் கே.வி உதிர்த்துள்ள முத்துக்கள்.

"தெய்வேந்திரன் என்பது தமிழ்ப் பெயராக இருந்த போதும் "மீநிலங்கோ" என்பது ஓர் ஆபிரிக்க ஓசையுடன் மனதில் எதிர்வலைகளை எழுப்பியதால் உரையில் அவதானம் உறைந்து போய்விட்டது". (இதன் கருத்து எனக்குத் தெளிவாக இல்லை). மீநிலங்கோ என்பது தனித்தமிழ் என்றும் தெய்வேந்திரன் என்பது வடமொழிச் சொல் எனவும் தெரியாத எங்கள் பரமார்த்த குருவான கே.வி. என்பார். மீநிலங்கோவின் பேரை அதற்கு முன் அறியாதவரா? அதற்கு முன் கூட்டங்களிற் காணாதவரா?

கூகி வா தியாங்கோ பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டுள்ள தனது தாய்மொழியில் எழுதும் தேவையையும் கற்கும் தேவையையும் வற்புறுத்தியதைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டுச் சிலுவையில் தொங்கும் சாத்தான்களை ஆங்கிலத்தில் தானே உள்வாங்கினார் என்று கே.வி. அசட்டுக் கேள்வி கேட்கிறார். அந்த நூல் சிறப்பாகத் தமிழாக்கப்பட்டது. அது பற்றிய திறனாய்வுக் குறிப்பொன்றும் பேராசிரியர் சிவசேகரத்தால் தமிழில் எழுதப்பட்டது. ஆங்கிலம் இல்லாமல் எங்கள் இலக்கியம் சர்வதேசத்தைச் சென்றடைய முடியாது என்பது தான் அவரது கவலை. கூகி வா தியாங்கோ சர்வதேசத்துக்காக எழுதவில்லை. தனது மக்களுக்காக எழுதினார். நமது பத்தி எழுத்தாளர் கே.வி ஐலண்ட் மாதிரி ஒரு ஆங்கிலக் குப்பைத் தொட்டிக்கு எழுதலாமே. ஏன் சுடரொளியில் எழுதித் தனது இலக்கிய ஞானத்தை உலகறிய விடாமல் மறிக்க வேண்டும்.

ஸ்ரீமான் சஞ்சாரி என்ற பேரில் எழுதியவருக்குத் தெய்வேந்திரன் என்ற 'தமிழ்ப் பேர்' தான் விளங்கும். மீநிலங்கோ விளங்காது. "தெய்வேந்திரனை" எல்லாரும் பாராட்டியதை அவரால் தாங்க இயலவில்லை. இன்னொரு கூட்டத்தில் ஆபிரிக்க ஐரோப்பியப் புத்தகங்களை வாங்கி வாசித்து அவை பற்றிப் பேசுவது பற்றிச் சினந்து ஒருவரும் நாட்டிலே ஆபிரிக்கச் சங்கம் ஐரோப்பியச் சங்கம் என்று தான் வரப்போகுது என்று இன்னொருவருக்கு நொந்து கொண்டதைக் குறிப்பிட்டு எழுதுவதில் அவருக்கு ஒரு சிறு மனத்திருப்தி.

அதே பத்தியில் இன்னொரு தலைப்பில் பாலசுப்பிரமணியம் என்கிற ஒருவர் இங்கே உள்ளவர்களின் தலையில் மிளகாய் அரைக்கிற திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியதை மறுத்து இரண்டு இளைஞர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களில் தனது அதிருப்தியைத் தெரிவிக்கிற விதமாகவே குறிப்புக்கள் உள்ளன. பாலசுப்பிரமணியத்தால் அங்கு முன்வைக்கப்பட்ட வாதங்களை எதிர்கொள்ள முடியவில்லை என்பது சஞ்சாரியாருக்கு விளங்கியதாகத் தெரியவில்லை. ஏதோ நகைச்சுவையாக எழுதுகிறதாக நினைக்கிறார். ஆனால் வகுப்பில் பாடம் விளங்காத அரைப் புத்தி மாணவனின் அசட்டுத்தனந் தான் அவரது எழுத்தில் தெரிகிறது.

அதே பத்தியில் டாக்டர் முருகானந்தத்துக்கு ஒரு நக்கல். அவரைப் பிறர் மெச்சியதைப் புண்ணியவானால் தாங்க இயலவில்லை. வைத்தியக் கல்லூரியில் எத்தனை மிருகங்களை வெட்டிக் குதறிப் பதம் பார்த்துப் பரிசோதனை செய்திருப்பார் என்று நக்கலாக எழுதுவதாக நினைத்து உளறியிருக்கிறார். மருத்துவப் பயிற்சியில் உடற் கூற்றியலில் மரித்தோரின் உடல் உறுப்புக்களைத் தான் வெட்டிப் பரிசோதனை செய்வார்கள். மிருகங்களை வெட்டிப் பார்ப்பதெல்லாம் உயிரியல் துறையில் தான்.

இவற்றையெல்லாம் ஏதோ உளற வேண்டும் என்பதற்காக அவர் உளறி வைத்த விடயங்கள் என்று ஒதுக்கிவிட முடியாதபடி, ஞானம் என்கிற சஞ்சிகையில் கே.விஜயன் என்பவர் எழுதுகிற பத்தியிலும் ஆபிரிக்க இலக்கியம், லத்தின் அமெரிக்க இலக்கியம் என்பன பற்றி முற்குறிப்பிட்ட விதமான பகைமை உணர்வுடன் அதே நடையில் எழுதப்பட்டிருந்தது.

இந்தப் பத்தியாளர் சில ஆண்டுகள் முன்னர் ஒரு கூட்டத்தில் சொல்லப்படாதவற்றையெல்லாம் சொல்லப்பட்டவை என்று பொய்யாக வீரகேசரியில் எழுதியது குறித்துப் பேராசிரியர் சிவசேகரம் வீரகேசரி ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதியதால், தான் கடுமையாக எச்சரிக்கப்பட்ட விடயத்தைச் சில திரிப்புக்களுடன் தன்னை வேலையிலிருந்து கழற்றுகிறதற்காகக் தன்னைப் பற்றி வீரகேசரிக்கு முறைப்பட்ட மோசமான ஆள் என்று பேராசிரியர் சிவசேகரத்தைத் தாக்கி சுடரொளியின் பத்தி ஒன்றில் எழுதப்பட்டிருந்ததையும் இங்கே நினைவு கூறுவது நல்லது. நேர்மையற்ற முறையில் வீரகேசரியில் இவர் எழுதியது பிரச்சினைக்குரியதல்ல. அது பற்றி ஒருவர் முறையிடப்பட்டதும் அதற்காக இவர் கண்டிக்கப்பட்டதுமே தவறானவை.

வாய்க்கு வந்தபடி எல்லாரையும் மட்டந்தட்டி உளறு வதை வேண்டுமானால் கூட்டாளிகளுடன் குடித்துக் கும்மாளமடிக்கிற வேளைகட்கு நமது பத்தி எழுத்தாளர்கள் ஒதுக்கிக் கொள்ளலாம். ஆனால் இது நல்ல எழுத்தைக் காணுவதே அரிதாகிவிட்ட காலம். நல்ல வாசிப்பு நலிந்து போகிற காலம். இலக்கியவாதிகளே போதியளவு வாசிக்காத ஒரு காலம். ஒரு காலத்தில் இந்தியா மட்டுமன்றி, ரஷ்யா, சீனா என்று பல திசைகளிலும் திறந்து கிடந்த எங்கள் யன்னல்கள் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றில் ஒன்றிரண்டையாவது சற்று நீக்கி உலகத்தைக் காட்ட முயலுகிறவர்களை ஊக்குவிக்க இயலாவிட்டாற் பரவாயில்லை; பத்திரிகைகளின் தரத்தை உயர்த்துகிற விதமாக எழுத இயலாவிட்டாற் பரவாயில்லை; இன்னும் இன்னும் தாழ்த்துகிற விதமாக எழுதாமலிருப்பது தமிழ்ச் சமூகத்திற்குக் காட்டக் கூடிய அற்பளவு மரியாதையாக இருக்கும்.

நாம் ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க இலக்கியங்களைப் படிப்பதும் பல கவிஞர்கள் உலகக் கவிதைகளைத் தமிழிற் தருவதும் கதைகளைத் தமிழாக்குவதும் எந்த வகையிலும் நம் படைப்பாளிகளை ஊக்குவிக்கத் தடையாயிருக்கும் என்றால், அவ்வாறு பாதிக்கப்படுகிற படைப்பாளிகள் தங்களது படைப் புக்கட்குள்ளேயே விடையைத் தேட வேண்டும். ஒரு ஆபிரிக்க நாவல் நமது சூழலுக்கு மிகவும் பொருந்தி வருகிறது என்றால், ஒரு அரபுக் கவிதை நமது கவிஞர்கள் சொல்லத் தயறியதைச் சொல்லுகிறது என்றால், ஒரு லத்தின் அமெரிக்கக் குட்டிக்கதை அச் சொட்டாக நம்மைப் பற்றி பேசுகிறது என்றால், அவையெல்லாம் நம்மிடம் எப்போதோ வந்திருக்க வேண்டிய வளங்கள்.

அண்மைக்கால ஆங்கில இலக்கி யத்தின் அதி முக்கியமான படைப்புக்களிற் பல லத்தின் அமெரிக்க, கிழக்கு ஐரோப்பிய ஆக்கங்களின் மொழி பெயர்ப்புக்களாகும். இன் றைய அதி முக்கியமான படைப்பாளிகள் பலர் அயல்நாடுகளிலிரு ந்து குடியேறியவர்கள். ஆங்கிலம் அயல் உள்வாங்கல்களாற் செழித் புறுகிறது. நாங்களோ "வேண்டியோர் ஆங்கிலத்தில் வாசித்துக் கொள்ளலாம், தமிழிற் தேவையில்லை" என்கிற கிணற்றுத் தவளைகளின் கொடகொடப்பைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இறுதியாக இந்த கே.வி.க்கு செப்டெம்பர் சுடரொளி இதழில் எப்படி எந்த விதமான குறையுங் கூறா மல் "காப்புறுதி" என்கிற சஞ்சிகையை மெச்ச முடிந்தது? பதிப்பாசிரிய ருடைய பேரில் ஆபிரிக்கச் சாடை இல்லாததாலா?

— ஜெ —

### உணர்வு

ஒளிபுகாத
அடர்காட்டின் நடுவில்
அரிவாள்களைக் கூராக்கி
பாதை செய்கிறோம்

ஏளனச் சிரிப்புக்களும்
வன்மம் பொங்கும்
ஊளைச் சத்தங்களும்
முற்றும் அறிந்த
மேதாவித்தனங்களும்
திரும்பும் திசைகளிலெல்லாம்
எதிரொலிக்கின்றன.

புதைசேறு அழுத்துகிறது
புரட்டமுடியாத பாறைகளில்
யுகங்கள் கழிகின்றன.
அரவம் நெளிகிறது.
சற்றே கண்ணயர்ந்தாலும்
அட்டைகள் உயிர் குடிக்கின்றன.
சதுப்பு நிலத்தில்
தெறித்து மின்னும்
எங்கள் வியர்வைத் துளிகளின்
வெளிச்சத்தில் தான்
பாதை தொடர்கிறது.

பின்னொரு நாளில்
பனிக்கட்டிகள்
சேகரிக்க வரும்பொழுது
நீ இதனை நம்ப மறுப்பாய்........
நாங்கள் நம்ப மறுத்ததைப் போல.

ஆனால்
நாங்கள்
இப்படித்தான் வாழ்கிறோம்.
வாழ்ந்தோம்.

எது தூண்டிற்று
என நீ கேட்பாய்
உணர்வு என்பேன்.
அதன் பொருளை
அகராதிகளில்
கண்டறிய முடியாது.

பனிக்கட்டி மறந்து நீ
பதிலின் விளக்கம் கேட்பாய்.
உரையாடல் தொடர்கையில்
மாலை கவிந்து
நட்சத்திரங்கள்
முளைக்கத் துவங்கும்.

-பால்ராஜ்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஒக்ரோபர் 2007

# புதிய பூமி

இணையத் தளம் : Website: www.ndpsl.org



இஸ்ரேலிய டாங்கியை எதிர்த்து கல்லெறியும் ஒரு பாலஸ்தீன இளைஞன்



ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பு படையினர் மீதான தாக்குதலில் எரியும் கவச வாகனமும் இறந்து கிடக்கும் படையினரும்

**73846 அமெரிக்கப் படையினர் ஈராக்கில் மரணம் 162096 படையினர் அங்கவீனர்**







வெனிசுலவே நாட்டின் ஜனாதிபதி ஹியூஹோ சாவேஸ், நிக்கரகுவாவின் ஜனாதிபதி டானியல் ஒற்றேகாவுடனும், பொலிவிய ஜனாதிபதி ஈவோ மொறாலேஸ்சுடனும் ஈரானிய ஜனாதிபதி மகமெட் அஹமதியாவுடனும் இணைந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எதிர்பொருள் கூட்டமைப்பில் இணைந்து நிற்கின்றனர்



இந்திய ஹரியான மாநிலத்தில் கோபாவேஷம் கொண்ட தலித் மக்கள் சாதிவெறியர்களையும் அவர்களைப் பாதுகாத்து நிற்கும் பொலிசாரையும் எதிர்த்து திரண்டெழுந்து நிற்கின்றனர்.



பாகிஸ்தானில் முஷாரவின் ராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகளும் சட்டத்தரணிகளும் நடாத்தும் வெகுஜனப் போராட்டம்

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.